# இதயம் தேடும் என்னுயிரே...

## ஆர். மணிமாலா

## 1

கழுத்து வலிக்க ஆரம்பித்தது சித்ராவிற்கு. இருக்க, இருக்க பஸ் நிறுத்தத்தில் கூட்டம் அதிகரித்துக்கொண்டே சென்றது.

பத்தாவதுமுறையாக மணிக்கட்டை திருப்பி வாட்ச்சில் நேரம் பார்த்தாள்.

ஆறை நெருங்கிக்கொண்டிருந்தது.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம்! 'சே' என்ற அலுப்பு எழுந்தது.

இவ்வளவு பெரிய சென்னை நகரில் பஸ்ஸிற்காக ஒரு மணி நேரம் காத்திருப்பது... அரசாங்கம் தலைகுனியவேண்டிய செயல் என நினைத்தாள்.

அவள் போகும் பஸ்கள் வராமலில்லை. வரத்தான் செய்கின்றன. ஆனால், பொதிசுமந்த கழுதையைப் போல், உப்பென்று வீங்கிக் கொண்டு வருகின்றன. ஏற்கனவே வவ்வால்கள் போல் தொங்கிக் கொண்டிருக்கும் நபர்களையும் முண்டியடித்து ஏறும் மக்கள். இதில் நாமெங்கே ஏற முடியும்? அப்படியே ஏறினாலும் இறங்க முடிகிறதா? ஒன்று செருப்பு அறுந்துவிடும்! அல்லது கூட்டத்தினரிடையே மாட்டி



தோள்பையின் வார் அறுந்துவிடும்.

இதற்கு மட்டும் விமோசனமே இல்லையா?

அரசாங்கம் கூடுதலாய் பஸ்கள் விடலாமே! எல்லாரும் ஓட்டு வாங்கும் வரைக்கும்தான் முகம் முழுக்க பற்களை காட்டி கும்பிடு போடுவார்கள். உட்கார சீட் கிடைத்துவிட்டால்... தப்பித் தவறிக்கூட தொகுதிப் பக்கம் முகத்தை காட்டிவிடமாட்டார்கள்.

ஓட்டே போடக்கூடாது. பொதுமக்கள் அத்தனை பேரும் சேர்ந்து வாக்குச் சாவடிக்கே போகாமல் புறக்கணித்தால்தான் இவர்கள் ஒரு வழிக்கு வருவார்கள்.

சித்ராவின் கோபம் இப்போது ஆட்சியாளர்களை குறிவைத்துக் கொண்டிருக்க...

அப்போதுதான் உணர்ந்தாள்.

எதுவோ... யாரோ... தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதுப்போல் உள்ளுணர்வு அறிவுறுத்தியது.

சித்ரா மெல்ல தன்னைச் சுற்றிலும் பார்வையைப் படரவிட்டாள்.

பெண்கள், இளைஞர்கள், வயோதிகர்கள் என்று திரண்டிருந்த கூட்டத்தில் யாரையும் இனம் காண முடியவில்லை.

சிலர், இவள் பார்க்கும்பொழுது அவர்களும் பார்க்க... தலையை தாழ்த்திக்கொண்டாள் சித்ரா.

இந்த உணர்வு இன்று நேற்றல்ல... ஒரு மாத காலமாகவே இந்த பஸ் ஸ்டான்டில் வந்து நிற்கும்போது மட்டும் ஏற்படுகிறது.

இயல்பாய் இப்படிப்பட்ட உணர்விற்கு எந்த இளம்பெண்ணுக்கும் ஒருவித குறுகுறுப்பு, படபடப்பு, பிடிக்குதோ இல்லையோ... கொஞ்சம் வெட்கம் என கலவை உணர்வுகள் எழும்.

ஆனால், சித்ராவிற்கு எரிச்சலும், கோபமும்தான் எழுந்தன.

யாரவன்? முதுகுக்குப்பின்னே முறைத்துப் பார்ப்பவன்? எதிரே 'வரட்டும், கன்னம் பழுத்துப் போவதுப்போல் பதம் பார்த்துவிடுகிறேன். இவனுங்களுக்கு வேற வேலையே இல்லையா?

இதற்குமேல் தாங்கமுடியாது என்பதுபோல் தலையை வலிக்க... ஒரு ஆட்டோவை கைதட்டி அழைத்தாள் சித்ரா.

அந்த பஸ் ஸ்டான்டை ஒட்டி கம்பீரமாய் நின்றிருந்தது பிரகரதி மார்க்கெட்டிங் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்!

எம்.டி. ஜேக்கப்பின் அறையின் கண்ணாடி வழியே சர்லை முழுக்க தெரிந்தது. அவன் எதிரே அமர்ந்திருந்தான் பரத்! அழகான இளைஞன். அவனின் உதடு ஜேக்கப்பிடம் பேசிக்கொண்டிருந்தாலும், கண்களும்,

எண்ணமும் சித்ரா சென்ற ஆட்டோவின் மீதே சென்றது.

'யாரவள்? எங்கிருக்கிறாள்?' கடந்த ஒரு மாத காலமாகவே அவனுள் இந்த கேள்வி எழுந்துகொண்டிருந்தது. அவனுக்குப் பல வேலைகள் இருப்பினும்... அவளை தரிசிப்பதற்கென்றே... அவன் கால்கள் அவனை ஜேக்கப்பின் அலுவலகத்திற்கு அழைத்து வந்துவிடுகிறது.

"நிரந்தரமாக இந்தியாவுக்கு வரணும்ங்கற எண்ணமில்லையா பரத்?"

"எனக்கு ஆசைதான்! அப்பாவுக்குதான் விருப்பமில்லை. அம்மா இறந்தபிறகு... இந்தியாவில் இருக்கவே பிடிக்காமல் போய்... எல்லா சொத்துக்களையும் விற்று... லண்டனிலேயே போய் செட்டிலாகி... அங்கேயே பிசினஸ் செய்து... அந்த மக்களோடு மக்களாக கலந்துவிட்டபின் எப்படி வரமுடியும்? அப்பாவுக்கு நான் ஒரே பிள்ளை. அவர் மனசு கோணாமல் நடக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். தட்ஸால்!" வசிகரமாய் சிரித்தபடி சொன்னான் பரத்.

"இரண்டு வருடத்திற்கு ஒருமுறை வந்து செல்கிறாய்... உன்னை மிஸ் பண்ணுகிறேன் பரத்!" ஜேக்கப் நிஜமான வருத்தத்தில் சொன்னான்.

"எனக்கும் அந்த பீலிங் இல்லையென்றா நினைக்கிறாய்? நிறையவே இருக்கிறது!"

"சரி... எப்ப கல்யாணம் பண்ணிக்கப்போகிறே? உன்னோட சாய்ஸ் லண்டன் பெண்ணா? இந்தியப் பெண்ணா?"

"இதில் மட்டும் நான் உறுதியோட இருக்கிறேன் ஜேக்கப்! என் மனைவி நிச்சயம் இந்தியப் பெண், அதிலும் இந்த சென்னையை சேர்ந்த பெண்ணாகத்தானிருப்பாள்!"

"அப்ப... பொண்ணைப் பார்த்துட்டேன்னு சொல்லு!"

"பார்த்துக்கிட்டேயிருக்கேன்!" என்றவனின் பார்வை சித்ரா சென்ற பாதையை நோக்கியது.

"சுவீட் எடுத்துக்க சித்ரா!"

மும்முரமாய் கம்ப்யூட்டர் ஸ்கிரீனில் பார்வையை பதித்திருந்த சித்ரா திரும்பினாள்.

கோகிலா நின்றிருந்தாள். சக ஊழியை.

கையில் சுவீட் பாக்சோடு... முகமெல்லாம் புன்னகை பூத்திருக்க... புதுச்சேலை... தலைநிறைய முல்லைச்சரம் சூடி...

வியப்பாய் பார்த்தாள் சித்ரா.



இந்த கோகிலா புதிது. எப்போதும் சுரிதாரிலும், சல்வாரிலும் வந்து அசத்தும் கோகிலா வேறு.

தலைகுனிந்து, நாணம் படர, முகம் செம்மையைப் பூசிக்கொண்டு, பூமாதேவியைப் போல் சேலையில் வந்து நின்றிருந்த இவள் முற்றிலும் புதிது.

"ஹேய்..." என்னும் ஆச்சரிய விளிப்போடு எழுந்து நின்றாள் சித்ரா.

"வாட் எ சர்ப்ரைஸ்? டுடே... யூ லுக் வெரி ஸ்மார்ட்! என்னடி விசயம்? சுவீட் வேற... ம்... என்ன கோகி?"

கோகிலாவின் உதட்டில் அழுத்தமாய் ஒரு புன்னகை மட்டும் நெளிந்தது.

"சொல்லமாட்டியா?"

"நீயே கண்டுபிடி!"

"அட... விளையாட இதுவா நேரம்? ம்!" சற்றே யோசித்து... "பர்த்டே?" என்றாள்.

"ஊகும்..."

"பப்ளிக்சர்வீஸ் கமிஷன் எக்ஸாம் எழுதினியே... பாஸ் பண்ணியிருப்பே... அதானே?"

"ப்ச்..."

"எம்.டி... சாலரி இன்க்ரீஸ் பண்றேன்னு சொல்லியிருப்பார்!"

"ஆமா... ஒரு இருநூறு ரூபா இன்க்ரீஸ் பண்றதுக்கெல்லாம் சுவீட் தருவாங்களா? அலையாதே!"

"தெரியலே... நீயே சொல்லு!"

"சரியான தத்தி! ஒரு பெண்ணுக்கு பெரிய சந்தோஷம் தரக்கூடிய செய்தி என்ன?"

"ம்... உங்க அக்காவுக்கு இந்த வாரம் டெலிவரி ஆயிடும்னு சொன்னேயில்லே... குழந்தை பிறந்திடுச்சா?"

"அடச்சே! எல்லாத்தையும் கெஸ் பண்ணிச் சொல்றே! அதெல்லாத்தையும்விட முக்கியமான கல்யாணமாங்கற கேள்வி மட்டும் கேக்கவேமாட்டியா?"

"தெரியும்! உன் தோற்றத்தை ஒரே நாள்ல மாத்தக்கூடிய காரணம் இதுவாகத்தான் இருக்கும் என்பது எனக்கு நல்லாவேத் தெரியும். இதுல என்ன பெரிய சஸ்பென்ஸ்வேண்டி கிடக்கு? அதை நீயாகவே சொல்லணும்னுதான்... தெரிஞ்சதுப்போல் காட்டிக்கலே. தவிர, இப்ப நான் சொன்னேனே... உன்னுடைய சந்தோஷத்திற்கான காரணங்கள் என்று...



அதையெல்லாம்விட இது ரொம்ப முக்கியமான விசயம் என்பது என்னைப் பொறுத்தவரை சுத்த ஹம்பக்!"

கோகிலா சித்ராவை ஒரு பெருமூச்சுடன் பார்த்தாள்.

"உன்னைப்பத்தி நல்லாத் தெரிஞ்சிருந்தும்... இந்த மேட்டர் வைச்சு விளையாடினேன் பாரு... என்னை சொல்லணும். கம்ப்யூட்டர் முன்னாடி உக்கார வைச்சிருக்கானே ஆண்டவன்! அவனையும் சொல்லணும். தாயே! எனக்கு கல்யாணம் நிச்சயமாகியிருக்கு. அதுக்குதான் இந்த சுவீட்! இதையாவது சாப்பிடுவியா... இல்லே...?!"

"சீ... சுவீட் என்னடி பண்ணிச்சி? இப்படிக் கொடு! தப்பா ஏதும் பேசியிருந்தேன்னா மன்னிச்சிடு கோகி..."

"ஏய்... என்ன நீ? உன்னைப்பத்தி நல்லாத் தெரியும் எனக்கு. உன்மேல எனக்கு எந்த கோபமும் இல்லே... வருத்தம்தான்!"

"அட... ஏம்மா?"

"நீயும் இப்படி சுவீட் தர்ற நாள் வரணும் சித்ரா!"

"சுவீட்டை எப்பவேணாலும் வாங்கித் தர்றேன்... ஆனா இன்னின்ன காரணத்துக்காகத்தான் வேணும்னு அடம்பிடிச்சா . உனக்கு ஏமாற்றம்தான் மிஞ்சும்!"

"அதான் ஏன்னு கேக்கறேன்?"

"பிடிக்கலே... தட்ஸால்...!"

"என்ன பிடிக்கலே?"

"எல்லாமே!"

"எல்லாமேன்னா?"

"கல்யாணம், தாலி, அதை கட்டப்போகிற ஆண்... எதுவுமே பிடிக்கலே. எல்லாமே பொய்! தாலி கட்றப்ப சொல்ற மந்திரத்துக்கு என்ன அர்த்தம்னு புரியாமலே விளையாட ஒரு பொம்மை கிடைக்குதேங்கற சந்தோஷத்தோட மூணு முடிச்சியப் போடுறான். அந்த முடிச்சி இறுக இறுக என்ன ஆகும்? இன்றைய தேதியில... எத்தனை பெண்கள்... இப்படி மூச்சுத்திணறி இறந்துக்கிட்டிருக்காங்கன்னு தெரியுமா உனக்கு?"

"ஒண்ணு ரெண்டு பேர் அப்படி இருக்கலாம். அதுக்காக ஒட்டு மொத்த ஆண்களையுமே குறை சொல்றது தப்பு சித்ரா."

"இந்தப் பேச்சு நீடிக்கவேணாம் கோகி... சாரி.. உன் மூடை ஸ்பாயில் பண்ணிட்டேன். சொல்லு... உன் கணவர் பேர் என்ன? ஊரென்ன? என்ன பண்றார்?"

"பேர் சிவராஜ். சொந்தமாய் பிசினஸ்... ஊர் கோயம்புத்தூர். இன்னும்

"வெரிகுட்! என்னை மறந்திடாதே!"

"சேச்சே... சித்ரா... நான் ஒண்ணு சொன்னா கேப்பியா? உனக்கு நான் மாப்பிள்ளை பார்க்கட்டுமா? உனக்கேத்த, நீ எதிர்பார்க்கிற குண அம்சங்களோடு நல்லவரா... பார்க்கட்டுமா?"

"எப்படி தெரியும். நல்லவனா, கெட்டவனான்னு? சாப்பிட்டு பார்ப்பியா?" என்றாள் சிரித்தபடி.

"சிரி... உனக்கு எல்லாமே சிரிப்புதான்! இளமை நமக்காக காத்திருக்காது சித்ரா! வீண்ஜம்பத்துக்காக இப்படி சொல்லிக்கிட்டு உன்னை நீயே ஏமாத்திக்காதே!"

"வீண்ஜம்பமா? என்ன சொல்றே?"

"ஆமாம்! உனக்குள்ளே உனக்கேத் தெரியாம கல்யாண ஆசைகள் இருக்கிறது. அந்த ஆசை எழும்போதெல்லாம், பத்துபைசா பெறாத காரணங்களை சொல்லி அடக்கிவச்சிடறே! நடிப்பு, எல்லாமே நடிப்பு! எத்தனை நாளைக்கு நடிப்பே? எத்தனை நாளைக்கு மனசை கட்டிப்போடுவே? உடம்பு உன்னை கேள்வி கேக்குமே! அதுக்கென்ன பதிலை சொல்லப்போறே? இதெல்லாம் என்னைக்காவது ஒருநாள் உன்னையும் மீறி கட்டறுந்துக்கிட்டு ஓடத்தான் போகுது. அப்ப வந்து உன் எதிர்ல நிப்பேன்! என்ன பதிலை சொல்லப்போறேன்னு பார்க்கறேன்!" சவால்விட்டாள் கோகிலா.

"கனவு காணாதே!"

"என் கனவு பலிக்கும்!"

"ம்... அப்படியா?" என்றவள் கேலியாய் நகைக்கத் தொடங்கினாள்... வெகுநேரமாக...!

## 2

திருமணத்தின் மேல்... ஆண்கள் மீது சித்ராவுக்கு இருக்கும் வெறுப்புப் பற்றி மேலோட்டமாக அறிந்துக்கொள்பவர்கள் எடுக்கும் முடிவு யாரையாவது காதலித்து ஏமாந்துப் போயிருப்பாள் என்பதாகத்தானிருக்கும்.

ஆனால், அது நிஜமல்ல. அவள் பின்னால் காதலை யாசித்து



எத்தனையோ பேர் அலைந்திருக்கிறார்கள். அதில் ஒருவரையும் நிமிர்ந்துப் பார்க்கக்கூட பிரியப்படவில்லை. இதயத்தை சுற்றி பெரிய முள்வேலியே போட்டு வைத்திருந்தாள். அதனால் அத்தனை எளிதில் யாரும் அதனுள் நுழைய முடியவில்லை.

சித்ரா அழகி என்று சொல்வதற்குரிய அத்தனை தகுதிகளையும் பெற்றிருந்தாள்.

இருபத்திமூன்று வயது. கோவில் சிலை போன்ற தோற்றம். மருளும் அகன்ற விழிகள் அந்த முகத்திற்கு குழந்தைத்தனத்தை தந்திருந்தது. பிளஸ் டூ முடித்ததும் கம்ப்யூட்டர் கோர்ஸ் முடித்தாள். தற்போது அஞ்சல் வழியில் பி.பி.ஏ. படித்துக்கொண்டிருக்கிறாள்.

அப்பா பெருமாள். ஓய்வுபெற்ற அரசு ஊழியர். அம்மா அம்சா, படிக்காதவள். பஸ்சில் தனியே போய் ஒரு இடம் இறங்கத் தெரியாத வீட்டுப் புழு. அதனால்தான் மனிதர்களின் பல முகங்களை அவளால் அறிந்துக்கொள்ள முடியாமல்... அந்த வேதனையினூடே... இறைவனிடம் போய் சேர்ந்துவிட்டவள்.

பெருமாள் அம்சா தம்பதியருக்கு மூன்று பெண்கள். பெரியவள் புவனேஸ்வரி, அடுத்தவள் வசந்தா, கடைக்குட்டி சித்ரா. பெரியவள் புவனேஸ்வரி இப்போது உயிரோடில்லை.

சித்ராவுக்கு புவனேஸ்வரி என்றால் உயிர். அக்கா, அக்கா என்று பூனைக்குட்டிப் போல் அவள் பின்னேயே சுற்றி சுற்றி வருவாள். இன்று அவளின் நினைவுகள் மட்டும் சித்ராவை சுற்றி சுற்றி வந்து அலைகழிக்கின்றன.

அக்காவின் நினைவு எழுந்ததும் நெஞ்சின் மையத்தில் வலித்தது. பெருமூச்சுடன் வீட்டுவாசலை அடைந்த சித்ரா காலிங்பெல் சுவிட்சை அழுத்தினாள்.

சில நொடிகள் நழுவின.

கதவு திறக்கப்பட்டது.

"வாம்மா!" மகளைப் பார்த்ததும் முகத்தில் ஒருவித நிம்மதி படர்ந்தது பெருமாளுக்கு.

"மதியம் மறக்காம மாத்திரை எல்லாம் சாப்பிட்டீங்களா?" வந்ததும் வராததுமாய் மகள் அப்படி கேட்டதும் பூரித்துப் போனார்.

"அதெல்லாம் வேளாவேளைக்கு உள்ளே போய்க்கிட்டுதாம்மா யிருக்கு! இன்னைக்கு ஏம்மா லேட்டு?" கேட்டபடியே அடுக்களைக்குப் போய் காபி தயாரிப்பதில் இறங்கினார்.

சித்ரா டேபிள் மீது ஹேண்ட்பேக்கை வைத்துவிட்டு முகம் கழுவ

பாத்ரூமிற்குள் சென்றாள்.

"இப்பல்லாம்... பஸ் கிடைக்கறதே அபூர்வமாயிருக்குப்பா! கிடைச்சு ஏறிட்டோம்னு வையுங்க... அன்னைக்கு நரி முகத்தில விழிச்சதா அர்த்தம்! நாளைக்கு ஞாபகமிருக்காப்பா? டாக்டரை போய் பார்க்கணும். நான் ஆப்டே லீவு போட்டுட்டு வந்திடறேன்!"

"வேண்டாம் சித்ரா! இப்ப சாப்பிடற மாத்திரையே தொடர்ந்து சாப்பிட்டு வர்றேன். டாக்டரிடம் போனாலும் அதையேதான் சொல்லுவார். போதாதுக்கு நூறு ரூபாய் பீஸ் வேற தண்டம் அழுதிட்டு வரணும்!"

"நீங்க எந்த சாக்குபோக்கும் சொல்லவேண்டாம். நோயாளிகளோட உடம்பை பத்தி டாக்டருக்குத்தான் தெரியும். நாளைக்கு நாம கண்டிப்பா போகிறோம்!" என்றபடி பாத்ரூமிலிருந்து வெளிப்பட்டவள்... எதிரே நின்றிருந்த அப்பாவை கண்கள் விரியப் பார்த்தாள்.

"என்னப்பா இது?"

"காபி சாப்பிடும்மா...!" என்றபடி நுரை பொங்க ஆற்றி தம்ளரை நீட்டினார் பெருமாள்.

சித்ரா துடைக்கக்கூடத் தோன்றாமல் டவலை தோளில் போட்டுக் கொண்டு இடுப்பில் கைவைத்து முறைத்தாள்.

"உங்களை யாரு காபியெல்லாம் போடச் சொன்னது? கிச்சன் பக்கமே போகக்கூடாதுன்னு சொல்லியிருந்தேனா, இல்லையா? டாக்டர் என்ன சொல்லியிருந்தார்? ஆஸ்துமா உள்ளவங்க தன்னை சுத்தி சுத்தமான சூழலை உருவாக்கிக்கணும்னுதானே? நீங்க என்னடான்னா... போங்கப்பா!" செல்லமாய் கோபித்துக்கொண்டாள்.

பெருமாள் எச்சிலை கூட்டி விழுங்கினார்.

"காபி போட்டதுக்கே... கோவிச்சுக்கறியே! இன்னும் நைட்டுக்கு சாப்பாடெல்லாம் சமைச்சிட்டேன்னு தெரிஞ்சா... என்ன பண்ணுவியோ... தெரியலையே!"

"எ...என்ன?" அதிர்ந்துப்போனாள், சித்ரா.

பெருமாள் மகளை ஓரக்கண்ணால் பார்த்தபடி தலை கவிழ்ந்துக் கொண்டார்.

"டஸ்ட் அலர்ஜியானா... நீங்கதானேப்பா நைட்டெல்லாம் தூங்காம அவஸ்தைப் படறீங்க? நான் உங்களுக்கு எத்தனையோ முறை சொல்லியாச்சு. ஒரு நாள், ரெண்டு நாள் கையை கட்டிக்கிட்டு சும்மா இருக்கீங்க! மறுபடி... செய்யாதீங்கன்னு சொன்னதை எல்லாம் செய்யறது! ஏம்ப்பா இப்படி பண்றீங்க?"



"என்னால சும்மா உட்கார்ந்து ரெஸ்ட் எடுக்க முடியலேம்மா. உன்னை உட்காரவைச்சு நான் வேலைக்கு போய் சம்பாதிச்சிட்டு வரணும். ஆனால், உன்னை வேலைக்கு அனுப்பிட்டு, நான் உட்கார்ந்து..." மேற்கொண்டு பேசமுடியாமல் தொண்டை அடைத்துக்கொண்டது.

"அப்பா... என்னப்பா இது? முப்பத்தஞ்சு வருசமா உழைச்சு கொட்டினது போதாதாப்பா? ஆண்பிள்ளைதான் பெத்தவங்களை வைச்சு காப்பாத்தணுமா? பெண்களுக்கு அந்த உரிமை இல்லையாப்பா? இப்படி ஒரு சந்தர்ப்பம் கொடுத்தாரேன்னு கடவுளுக்கு நான் நன்றி சொல்லாத நாளே இல்லேப்பா!"

"நீ என்னதான் சொன்னாலும் என் மனசு கேக்கலே சித்ரா. முதல்ல இந்த காபிய குடி! ஆறிடப் போகுது. கல்யாணம் பண்ணி புருசனோட சினிமா, பீச், கோவில்னு சந்தோஷமா கைகோர்த்துக்கிட்டு போக வேண்டிய வயசிலே... பெத்த தகப்பனை காப்பாத்த வேலைக்குப் போயிட்டு வர்றதை பார்க்கறப்ப... என் மனசு எந்தளவு வேதனைப் படுதுன்னு எனக்குத்தான் தெரியும்..."

"பேச்சு எங்கேயோ ஆரம்பிச்சு, எங்கேயோ போகுது. பாருங்கப்பா... உங்க நன்மைக்காக மட்டுமில்லே... என் நன்மைக்கும் சேர்த்துதான் சொல்றேன். எனக்கு உங்களை விட்டா வேற யாருப்பா இருக்காங்க? நீங்க உங்க மேல கொஞ்சம்கூட அக்கறையில்லாம நடந்துக்கறீங்க! நீங்க கிச்சனுக்குள்ளே போறது இதுவே கடைசியா இருக்கட்டும். சொல்லிட்டேன்!" என்றவள் அப்பா தந்த காபியை குடித்தாள்.

"என்னை என்ன பெரிய வியாதியஸ்தன் மாதிரியில்லே நினைச்சிட்டே? எனக்கொன்னுமில்லே சித்ரா! சும்மாவே உட்கார்ந்திட்டிருந்தாதான்... பல வியாதிகள் தேடிவந்து உட்கார்ந்துக்கும். என் பொண்ணு காலையிலே எழுந்து வீட்டு வேலையை செய்து முடிச்சு, சமைச்சு எடுத்துக்கிட்டு, பஸ்ல இடிபட்டு ஆபீசிலே அஞ்சு மணி வரைக்கும் வேலை செஞ்சுட்டு, மறுபடி களைச்சிப்போய் வீடு திரும்பறதை பார்த்துக்கிட்டு என்னால எப்படிம்மா சும்மாயிருக்க முடியும்?

வயசுப்பொண்ணு ஓவரா உடம்பை வருத்திக்கலாமா? உன்னை நான் ஒருத்தன்கிட்டே ஒப்படைக்க வேணாமா? என்னை இந்த வேலை மட்டுமாவது செய்ய அனுமதிம்மா!"

"அப்பா நீங்க சமைக்கறதைக்கூட என்னால ஏத்துக்க முடியும். பட், என்னை ஒருத்தன்கிட்டே ஒப்படைக்கணும்னு நினைக்கறீங்க பாருங்க... அதுதாம்பா ஜீரணிச்சுக்க முடியலே!" சித்ராவின் முகம் இறுகிப்போயிற்று.

"ஏம்மா இப்படியெல்லாம் பேசறே? இது பெத்தவனோட கடமையில்லையா?"

"பிடிக்கலேப்பா! புவனேஸ்வரி அக்காவோட வாழ்க்கையை நினைச்சா... வாழவே பிடிக்கலேப்பா!" கண்ணீர் எட்டிப் பார்க்க... சட்டென அறைக்குள் ஓடிவிட்டாள்.

பெருமாள் திக்பிரமை பிடித்து நின்றுவிட்டார்.

## 3

ஜன்னலின் வழியே ஆகாயம் பறந்து விரிந்து தெரிந்தது. இன்னும் இரண்டு நாளில் கல்யாணப் பெண்ணாய் ஜொலிக்கப்போகிற வட்ட நிலவை சுற்றி கண்சிமிட்டி கிண்டல் பண்ணிக்கொண்டிருந்தன நட்சத்திரத் தோழிகள்.

கொஞ்சம் பழங்காலத்து ஓடு வீடு அது! ரொம்பவும் பெரிதாகவும் இல்லாமல், சிறியதாகவும் இல்லாமல் நடுத்தரமாய் இருந்தது. படுக்கையறை, பூஜையறை, வராண்டா, குளியறை, கொல்லைப்புறம் என்று கச்சிதமான வீடு. குறைந்த வாடகையில் இப்படியொரு வீடு கிடைப்பது அபூர்வம் மட்டுமல்ல, அதிர்ஷ்டமும்கூடத்தான். சித்ரா மட்டுமல்ல, புவனேஸ்வரிக்கூட இந்த வீட்டில்தான் பிறந்து வளர்ந்தாள்.

'இங்குதானே புவனா அக்காவும், வசந்தா அக்காவும் என் கண்களை கட்டிவிட்டு கண்ணாமூச்சி விளையாடுவோம்?' வெறிச்சென்றிருந்த அந்த அறையை ஏக்கத்துடன் பார்த்தாள் சித்ரா.

ஹாலில் அப்பா புரண்டு படுப்பது தெரிந்தது. ஹால் சுவற்றில் அம்மாவின் போட்டோவிற்கு அடுத்து புவனேஸ்வரியின் போட்டோ மாட்டப்பட்டு சந்தன மாலைகள் சூட்டப்பட்டிருந்தன.

சித்ரா படுக்கையைவிட்டு எழுந்து அமர்ந்துகொண்டாள். இதமான காற்று ஜன்னல் வழியே ஊடுருவினாலும், அவளின் இதயம் புழுங்கியது.

எத்தனை சந்தோசமான நாட்கள் அவை!

சித்ரா ஏக்கத்துடன் பழசையெல்லாம் ஒருமுறை அசை போட்டாள்.

பெருமாள் சென்னை துறைமுகத்தில் சூபர்வைசராக இருந்தார். கைநிறைய சம்பளம்தான். ஆனால், மூன்று பெண் குழந்தைகளாயிற்றே! அவர்களுக்கு சேர்க்க வேண்டாமா? அதேசமயம் அவர்களை எந்த

குறையும் இல்லாமல் வளர்க்க வேண்டுமே! சிக்கனத்தை கடைப்பிடித்து குழந்தைகளின் வாயையும், வயிற்றையும் அடைக்க விரும்பவில்லை. அதிலும் அம்சா பரோபகாரி. பசி என்று யார் வந்து வாசலில் நின்றாலும், தனக்கில்லாவிட்டாலும் வந்தவர்கள் பசியைப் போக்கும் கருணை உள்ளம் கொண்டவள். அப்படிப்பட்டவள் குழந்தைகளை எப்படி வளர்ப்பாள்?

பாலும், நெய்யுமாய், நாள் பண்டிகை என்றால் பலவித பட்சணங்கள், புத்தாடை என அமர்க்களப்படுத்துவாள். அம்சா பண்ணுகிற செலவிற்கு பெருமாள் வாங்கும் சம்பளம் சாப்பிடவே சரியாயிருக்கும். அதனால் தினமும் கூடுதலாய் பணிபுரிந்து— அந்த பணத்தை மூன்று பெண் குழந்தைகளுக்கும் வங்கியில் போட்டு வைத்து வந்தார்.

மூத்தப் பெண் புவனேஸ்வரி மற்ற பெண்களையும்விட கூடுதல் அழகு. அடக்கமான பெண். அடுத்தவள் வசந்தா மற்ற இருவரிலும் மாறுபட்டவள். எல்லாவற்றிலும்தான் முதலாக மதிக்கப்பட வேண்டும் என்கிற குணம். அப்பா வாங்கிவரும் ஸ்வீட் பாக்ஸை வசந்தாதான் முதலில் திறக்க வேண்டும். அவள்தான் முதலில் சாப்பிட வேண்டும். எந்த உடை வாங்கி வந்தாலும் அவள் முதலில் தேர்ந்தெடுத்தபிறகுதான் மற்றவர் தொட வேண்டும். கிட்டத்தட்ட புவனாவும், வசந்தாவும் ஒரே உயரம்தான். புவனா அதற்காக தங்கையிடம் போட்டி போட்டோ, சண்டை போட்டோ எட்டிக்குப் போட்டியாய் கோதாவில் இறங்கமாட்டாள். எல்லா விசயத்திலும் எல்லாருடனும் அனுசரித்துப் போவாள்.

சித்ராவும் புவனாவின் குணத்தை பெற்றிருந்தாள். மற்ற இருவரையும்விட படிப்பில் அவள்தான் சுட்டியாக இருந்தாள்.

காலங்கள் விரைந்தன.

பருவத்தின் வாசலில் நின்றிருந்தனர் மூன்று பெண்களும்.

அழகின் மொத்த உருவாய் வளையவந்த புவனா பிளஸ்டூவிற்கு மேல் படிக்க விரும்பாமல் வீட்டோடு தங்கிவிட்டாள். அவள் அழகிற்கும், குணத்திற்கும் ஏகப்பட்ட வரன்கள் வீடு தேடி வந்தன.

அப்படி வந்த வரன்களில் தேர்வு செய்யப்பட்டவன்தான் குணசேகர். கண்ணியமான, கம்பீரமான தோற்றம். தன் நண்பருடன் சேர்ந்து எக்ஸ்போர்ட் கம்பெனி வைத்திருந்தான். வீட்டிற்கு ஒரே பிள்ளை. இரண்டு அக்காள்கள். இருவருக்குமே திருமணமாகிவிட்டது. அப்பா இல்லை.

புவனாவை பெண் பார்க்க வந்ததுகூட குணசேகரின் இரண்டு அக்காள்தான்!



குணசேகரை புவனா உட்பட எல்லோருக்கும் பிடித்துவிட்டது, சித்ராவைத் தவிர.

அவனிடம் ஏதோ ஒரு தவறு, கபடம் ஒளிந்திருப்பது போல் தோன்றியது. அவன் பார்வை, சிரிப்பு, எல்லாவற்றிலும் ஏதோ ஒரு பயம் தொற்றிக்கொண்டிருப்பது போல் ஒரு உணர்வு!

"அம்மா!"

"என்ன சித்ரா?"

"நம்ம புவனா அக்காவை இந்தாளுக்கே கல்யாணம் பண்ணிக் கொடுக்கணும்னு முடிவுபண்ணிட்டீங்களா?"

"என்ன சித்ரா... கொஞ்சம்கூட மரியாதையில்லாம ஆளு, கீளுன்னு பேசறே? எப்பவும் இப்படியெல்லாம் பேசமாட்டியே... உனக்கென்ன ஆச்சு?" அம்சா மகளை விநோதமாய் பார்த்தாள்.

"எனக்கு என்னமோ அவரை பிடிக்கவேயில்லேம்மா!"

"நீ சின்னப்பொண்ணு... அப்படியெல்லாம் பேசக்கூடாது. பெரியவங்க பார்த்து செய்யற பெரிய காரியம் இது. நீபாட்டுக்கு இதுமாதிரி உளறிக்கொட்டி கெடுத்திடாதே! அதுவும் புவனா காதிலே விழற மாதிரி பேசிடாதே! அவளுக்கு இந்த மாப்பிள்ளையை ரொம்ப பிடிச்சுபோயிடுச்சு."

அதற்குமேல் சித்ரா வாயே திறக்கவில்லை.

இருபத்தஞ்சு பவுன் நகை. மாப்பிள்ளைக்கு ஒரு பைக், கையில் இருபத்தஞ்சாயிரம் என்று பெரிய மனதுடன் ஒப்புக்கொண்டனர் மாப்பிள்ளை வீட்டார்.

அறுபது பவுன் நகையோடு, ரெண்டு லட்சம் ரொக்கம், கார் சீர் செனத்தியோடு விழுப்புரத்தில் ஒரு வரன் காத்துக்கொண்டிருக்கிறதாம். புவனாவின் அழகிற்காகத்தான் இவ்வளவு சிப்பாக ஒப்புக்கொண்டோம் என்ற பெருமை வேறு.

அதற்கே முழிபிதுங்கிற்று பெருமாளுக்கு. புவனாவிற்காக சேர்த்து வைத்ததில் பாதி செலவிற்குக்கூட காணாது. நல்ல இடம். கண்ணிற்கு லட்சணமாய் மாப்பிள்ளை. விட மனசில்லை.

என்ன பண்ணுவது என்று குழம்பிய நேரத்தில்தான் அம்சா அந்த ஐடியாவை சொன்னாள்.

"முதலில் பெரியவளை கரையேற்ற வேண்டும். வசந்தாவிற்கும், சித்ராவிற்கும் பேங்கில் சேமித்து வைத்துள்ள பணத்தையும் எடுத்து இப்போது சரிக்கட்டிவிடலாம். எப்படியும் ஐந்தாறு வருடத்திற்கு பிறகுதான் கல்யாண பேச்சு எடுப்போம். அதற்குள் நீங்களும் ரிடையராகி

விடுவீர்கள். சில லட்சங்கள் கைக்கு வரும். அந்த பணம் இவர்கள் இரண்டு பேரை கரையேற்ற போதும்" என்றாள்.

பெருமாளுக்கும் அந்த ஐடியா சரியெனப் படவே... மற்ற இரண்டு பெண்களின் பெயரில் இருந்த பணத்தையும் எடுத்து புவனேஸ்வரியின் திருமணத்தை நல்லபடி முடித்தனர்.

முதல் இரண்டு மாதம் வரை எந்தப் பிரச்சினையுமில்லை. அதன்பிறகுதான் ஒருநாள் ஒரு மொட்டைக் கடிதம் வந்தது புவனாவிற்கு.

முட்டாள் புவனேஸ்வரிக்கு!

உன்மேல் பரிதாபப்பட்டு எழுதும் கடிதமிது. நீ நினைத்திருப்பது போல் உன் கணவன் எக்ஸ்போர்ட் கம்பெனியின் ஓனர் அல்ல. கூலிக்கு துணி தைக்கும் சாதாரண தையல்காரன்! இந்த செய்தி உனக்கு பெரிய அதிர்ச்சியாயிருக்கும். ஆனால், இதைவிட பெரிய பெரிய அதிர்ச்சியெல்லாம் இனி வரும் நாட்களில் அனுபவிப்பாய். புத்திசாலித்தனமாய் பிறந்த வீட்டுக்குப் போய் சேர்!

இப்படிக்கு,
உண்மை விளம்பி.

என்றிருந்தது.

முதலில் புவனேஸ்வரி நம்பவில்லை. ஆனால், மனசுக்குள் ஏதோ ஒன்று உறுத்த... மாமியாரிடம் கோவிலுக்கு போவதாய் பொய் சொல்லிவிட்டு கணவனின் எக்ஸ்போர்ட் கம்பெனிக்கு சென்றாள்.

மாபெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

நிஜம்தான்! அவள் ஆசை கணவன் அங்கு சாதாரண கூலித் தொழிலாளிதான்.

மயக்கம் வராத குறை புவனேஸ்வரிக்கு. அங்கு அவளை எதிர்பார்க்காத குணா முதலில் திகைத்தாலும் பிறகு சுதாரித்துக் கொண்டான். அவளை இழுத்துக்கொண்டு மாமனார் சீதனமாக கொடுத்த பைக்கில் உட்கார வைத்து வீட்டிற்கு அழைத்து வந்தான்.

புவனா வீட்டிற்கு வந்தபின்பும் சிலை போல் நின்றிருந்தாள்.

"என்ன... இப்ப என்ன பண்ணணும்ங்கறே?" என்றான் அவனாகவே.

இருவரின் முகத்தையும் பார்த்து கதிகலங்கிப்போயிருந்த மாமியார் ஏகவல்லிக்கு புரிந்துபோனது.

"என்ன குணா எல்லா விசயமும் தெரிஞ்சுபோயிடுச்சா?"

"அம்மா... கொஞ்சம் சும்மாயிரு!"

"நீ சும்மாயிருடா... இவள்கிட்ட நான் பேசிக்கறேன். என்னடி... இப்ப என்ன பண்ணணும்ங்கறே? ஊர்ல உலகத்தில நடக்காததா? அந்த



கூறுகெட்ட சிறுக்கி செல்வி படிச்சிட்ட திமிர்ல அறுத்துக்கிட்டு
போயிட்டா! அவள் ஒழுங்காயிருந்து குடும்பம் நடத்தியிருந்தா...
உன்னை ஏன் ரெண்டாந்தாரமா கட்டப்போகிறோம்?"

"எ... என்ன?" புவனாவின் தலையில் பெரிய இடியாய் இறங்கியது.

"போச்சுடா!" என்று தன் அம்மாவை பார்த்து முறைத்தபடி
தலையில் கைவைத்தபடி அமர்ந்துவிட்டான் குணசேகர்.

அதன்பிறகு அவர்கள் பேசிய எதுவும் காதில் விழவில்லை.

புவனாவிற்கு யோசனையெல்லாம் தன் வீட்டைப் பற்றிதான்.
இருப்பதையெல்லாம் துடைத்துப்போட்டு கல்யாணம் பண்ணினார்
களே! தாங்குவார்களா இதை? இப்போது என்ன பண்ணலாம்?
வீட்டிற்கு போய்விடலாமா? ஐயோ... வேண்டாம். என்னால் என் இரு
தங்கைகளின் வாழ்க்கையும் பாதிக்கும். அப்பா அம்மா நொந்து
போவார்கள். தலைவிதியே என்று இங்கிருந்தே காலத்தை தள்ள
வேண்டியதுதான்.

புவனா வாயையும் கண்களையும் பொத்திக்கொண்டு அங்கேயே
இருந்தாள். அப்போதுதான் குணசேகரிடமிருந்த ஒவ்வொரு கெட்ட
பழக்கமும் ஒவ்வொன்றாய் வெளியில் வர ஆரம்பித்தது.

அவனிடம் கஞ்சா உட்பட அத்தனை பழக்கமும் இருந்தது.
புவனாவின் உடம்பில் பொட்டுத் தங்கம் விடாமல் எடுத்து பணமாக்கி,
போதையாக்கினான்.

தாங்கிக்கொண்டாள்.

எல்லாவற்றிலும் சிகரம் வைத்தாற்போல நண்பர்களை வீட்டிற்கே
அழைத்து வந்து குடித்தான். அவர்கள் முன்னாடியே புவனாவை
கட்டிப்பிடித்து முத்தம் தந்தான்.

அவமானம் தாங்காமல் அவனை தள்ளிவிட்டாள் புவனா.

"என்ன குணா... நீ தொட்டாலே அடிக்கிறா... நாங்க தொட்டா
சும்மா விடுவாளா?" என்றது ஒரு நாய்.

"நான் சொன்னா சொன்னதுதான். வி ஆர் பிரண்ட்ஸ்... சுகமோ
துக்கமோ ஷேர் பண்ணிக்கணும். செல்வியைக்கூட ஷேர் பண்ணிக்
கிட்டோமே... இவள் மட்டுமென்ன? ஏய் வாடி இங்கே?" என்ற
கணவனை எரித்துவிடுவதைப் போல் பார்த்தாள் புவனா.

"தூ! நீயெல்லாம் ஒரு ஆம்பளையா? கட்டின பொண்டாட்டி
யையே... இப்படியெல்லாம் பங்கு போட்டுக்க நினைக்கிற உன்னை
இதுநாள் வரைக்கும் புருஷனா நினைச்சதே தப்பு. நீ மனுஷனா இருக்கவே
லாயக்கில்லாதவன்! எங்கப்பா பாடுபட்டு சம்பாதிச்சி போட்ட நகை,
சீர் செனத்தி அத்தனையும் வித்து குடிச்சு அழிச்சிட்டு... கடைசியிலே
என்னையே விற்க துணிஞ்சிட்டியே... சீ... நீயெல்லாம் மனுஷனா?

சாக்கடையிலே நெளியற புழுவைவிட கேவலமானவன்!" கண்களில் மாலை மாலையாய் கண்ணீர் பெருக கத்தினாள்.

"என்னடா குணா... உன் பொண்டாட்டி உன்னை கேவலமா பேசறா... பார்த்துக்கிட்டு நிக்கறியே...!"

ஒருவன் உசுப்ப...குணா நெருங்கி வந்து அவளை பளாரென அறைந்து கீழே தள்ளினான். விழுந்த வேகத்திலேயே அவள் சேலையை உருவினான்.

பதறிப்போன புவனா...சட்டென அவனைத் தள்ளிவிட்டு ஓடினாள். சமையலறைக்குள் சென்று கதவை சார்த்திக்கொண்டவள்... அவமானத்தில் கதறினாள்.

'வேலியாய் இருப்பவனே... பயிரை மேய்க்க ஆடுகளை அனுமதிக்கிறான். அதற்குமேலேயும் அவமானப்பட என்ன இருக்கிறது? இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்துதான் ஆகவேண்டுமா?' யோசித்த மறுகணமே அங்கிருந்த கெரசினை எடுத்து கவிழ்த்துக்கொண்டாள். குச்சியை உரசி தன்மேல் தீண்டியிருந்த கறைகளை கழுவிக்கொண்டாள்.

**ஆ**ஸ்பத்திரிக்கு அலறிக்கொண்டு வந்தனர் பெருமாள் குடும்பத்தினர்.

இலையில் ஒட்டியிருந்த பனித்துளிப் போல் கொஞ்சம் உயிர் ஒட்டிக்கொண்டிருந்தது புவனாவிற்கு.

"அ... அப்பா... என்னை எல்லாரும் மன்னிச்சிடுங்க! அங்கே எல்லாரும் கெட்டவங்கப்பா... பணத்துக்காக நம்மை ஏமாத்திட்டாங்க. யாரையும் நம்பாதீங்க. என் தாலியே எனக்கு எமனாயிடுச்சுப்பா!" அதற்குமேல் பேசமுடியாமல் கண்மூடிவிட்டாள் புவனா.

குணசேகரன் குடும்பத்தோடு ஜெயிலுக்குப் போனான்.

'ஆனால், போன உயிர் திரும்ப வருமா? என் அழகான அக்கா புவனாவை கரிக்கட்டையாய் பார்க்க வைத்தது கல்யாணம்தானே?' இந்த எண்ணம் சித்ராவினுள் ஆழமாய் பதிந்துவிட்டது.

## 4

**பு**வனாவின் மரணம் அந்த குடும்பத்தை ஒரு உலுக்கு உலுக்கியது. சோகம் குறையலாம். வடு மறையுமா?

வருடங்கள் கடந்தாலும் அந்த வடு ஒவ்வொருவர் இதயத்திலும்

பெருமாள் தன் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஏற்கனவே புவனாவின் திருமணத்திற்கென லோன் வாங்கியிருந்தார். அந்த பணத்தையெல்லாம் பிடித்துக்கொண்டது போல அவர் எதிர்பார்த்ததைவிட கொஞ்சம் குறைவாகவே பணம் வந்தது.

அந்தப் பணத்தை சரிசமமாக பிரித்து வசந்தாவிற்கும், சித்ராவிற்கும் பேங்கில் போட்டு வைத்தார்.

வசந்தாவின் மனசில் ஒரு வசந்தமான கனவு இருந்தது.

அது... விஸ்வத்தைப் பற்றி!

விஸ்வம்... அவளின் அத்தை மகன். பெருமாளின் அக்கா வேதாவின் மகன். சின்னதாய் லெதர் பேக்டரி வைத்திருக்கிறான். பேக்டரி இருந்த இடத்திற்கு பெருமாளின் வீடு தாண்டிதான் போக வேண்டும். அதனால் வாரத்திற்கு நாலுமுறையாவது மாமா வீட்டிற்கு வராமல் போக மாட்டான்.

அவன் வருகைக்காகவே காத்திருப்பாள் வசந்தா! விஸ்வமும் அவளைப் பார்க்கவென்றே வந்தான். தன்னை அவனுக்காகவே அலங்கரித்துக்கொள்வாள். அவனைப் பார்த்தாலே... முகம் குங்குமத்தை பூசிக்கொள்ளும். யாரும் பார்க்காத நேரத்தில் அவளை சீண்டிவிட்டு செல்வான் விஸ்வம்.

வசந்தாவின் மனதில் அவனைப் பற்றிய காதல் வேர்விட்டு வளர்ந்தது.

அவர்கள் இருவரையும் பற்றி பெருமாளும், அம்சாவும் புரியாமல் இல்லை. அந்த வயதையெல்லாம் கடந்து வந்தவர்கள்தானே?

அவர்களுக்கும் சந்தோசம்தானே? விஸ்வம் மாதிரி ஒரு நல்ல பையன் கிடைப்பது அரிது. அதிலும் சொந்தக்காரன். ஆகவே, அவர்கள் விளையாட்டை கண்டுகொள்ளாமல் இருந்தனர்.

வசந்தாவும் நல்ல அழகிதான்! அவளைத் தேடியும் வரன்கள் வர ஆரம்பித்தன. இதற்குமேலும் வாய்மூடிகொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்று அக்காவிடம் போனார் பெருமாள்.

"வா பெருமாள்... அக்கா வீட்டிற்கு வர இப்பத்தான் உனக்கு வழி தெரிஞ்சுதா?" வேதா தம்பியை உற்சாகமாய் வரவேற்றாள்.

"இல்லேக்கா... நேரம் கிடைக்கலே... அதான்!"

"வேலைக்கு போய்க்கிட்டிருந்தப்பதான் நேரமில்லேக்கா... ஓவர் டைம் வேலை பண்ணிட்டிருக்கேன் அக்கான்னு பாட்டு பாடுவே... இப்பதான் ரிடையராகி வீட்டோட இருக்கியே... அப்புறமென்ன?"

"வாஸ்தவம்தான்! ஆனா, புவனாவோட அகால மரணத்துக்குப்



பிறகு, கேளிக்கைகளிலோ, உறவுக்காரங்க, நண்பர்களோட சந்தோசமா, பேசி பொழுதைபோக்கவோ மனசு இடம்தரலேக்கா! எத்தனை வருஷமானாலும் என் குழந்தையோட நினைவு என்னை நிழல் போல தொடர்ந்துகிட்டே வரும்!"

வேதா கண்ணாடியை கழற்றி துடைத்தபடி பெருமூச்சுவிட்டாள். பொட்டில்லாத நெற்றி பளிச்சிட்டது.

"அழகான பொண்ணு! உம்... அவள் தலைவிதி இப்படியாகி இருக்க வேண்டாம். இந்தக் காலத்துல மனுஷங்க அத்திப்பழம் மாதிரியும் இருக்காங்க, பலாப்பழம் மாதிரியும் இருக்காங்க. யாரு நல்லவங்க, யாரு கெட்டவங்கன்னே புரிஞ்சுக்க முடியலே! இருக்கிற ரெண்டு பொண்ணுங்களுக்காவது நல்லா தீர விசாரிச்சு, நல்ல பையனா பார்த்து கல்யாணம் பண்ணி வை பெருமாள்!"

"ஆமாம் அக்கா! அது விசயமாகத்தான் நான் இப்ப உன்கிட்டே பேச வந்திருக்கேன்!"

"என்ன விசயம்?"

"நம்ம வசந்தாவுக்கும் நிறைய வரன் வந்துகிட்டிருக்கு."

20 மணி நேரத்திற்குள் நல்ல பயன்கொடுக்க தொடங்கிறது

**வெள்ளைத் தழும்பு**

வெள்ளைத் தழும்பு குணப்படுத்த முடியாதது அல்ல. சரியான காலத்தில் தகுந்த சிகிச்சை அளித்தால் மற்ற நோய்களை போல இதனையும் சரி செய்யலாம். ஆயிரக்கணக்கானவர்களை நாங்கள் குணப்படுத்தியுள்ளோம். சக்திவாய்ந்த எங்களுடைய சிகிச்சை ஆரம்பித்த 20 மணி நேரத்தில் தழும்பின் கலர் மாறி, இயற்கை தோலின் நிறத்திற்கு மாற்றிவிடுகிறது. எங்கள் சிகிச்சையை ஆரம்பித்து திருப்தி அடையுங்கள். நோயின் விவரத்தை எழுதி 15 நாட்களுக்கான இலவச மருந்தை பெற்றுக்கொள்ளுங்கள்.

**வெள்ளைமுடி, மயிர் உதிர்தல், வழுக்கையாதல்**

சாயத்தால் அல்ல... எங்களுடைய ஆயுர்வேத சிகிச்சையினால் மயிர் வெளுத்தல், உதிர்தல், வழுக்கையாவதை தடுக்கிறது. கூடவே முடியையும் கருப்பாகவே வளரச் செய்கிறது. முடியை பளபளப்பாகவும் நீளமாக்கிறது. இது கண்களையும் மூளையையும் புத்துணர்ச்சியாக்கி தலைவலியை போக்கிறது. உடனே சிகிச்சைக்கு எழுதுங்கள்.

**ஆண் – பெண் இரகசிய நோய்கள்**

இளவயதில் தவறான வழிகளாலும், அல்லது அதிகப்படியான உடலுறவினாலும், அல்ல தைரியம் இல்லாமை, வீரியன்மை, தானாகவே சக்தி வெளியேறுதல், இரவு தூக்கமின்மை, மற்ற சிறுநீர் வெளியேறும்போது எரிச்சல், கனோரியா குறைவினால் உறுப்பு மெலிவு, குழந்தையின் போன்றவற்றால் தாம்பத்திய வாழ்வில் சந்தோஷமின்மை கொடுக்கிறது. இதனால் தங்கள் மனைவி முன்னால் தர்மசங்கடமான நிலை ஏற்படுகிறது. நல்ல சிகிச்சைக்கு வியாதியின் விவரத் எழுதுங்கள். பெண்களும் தங்களது குறைகளை எழுதலாம். வியாதியின் முழு விவரத்தை எங்கள் எழுதி 15 நாட்களுக்கான இலவச மருந்தை பெற்றுக்கொள்ளுங்கள்.

**Ravi Ayurved (B5)** Katri Sarai (Gaya), PIN-805 105, IN
Phone : 06112-89413

"நல்ல விசயம்தான்!"

"அதேசமயம் வசந்தாவுக்கு பிடிச்ச வரனா இருக்கணுமே!"

"அது ரொம்ப முக்கியமாச்சே!"

"என் பொண்ணை உன் வீட்டு மருமகளா அனுப்பணும்னு எனக்கு மட்டுமில்லே... எல்லாருக்குமே ஆசை!"

வேதா தம்பியை வியப்பாய் பார்த்தாள்.

"என்னப்பா சொல்றே?"

"சுத்திவளைச்சி சொல்வானேன்? நீயா வந்து பொண்ணு கேப்பேன்னு எதிர்பார்த்தேன்! அதுதான் முறை!"

"விஸ்வத்துக்கா?"

"ஆமாக்கா!"

வேதா சில கணங்கள் மவுனித்தாள்.

"எனக்கும் அந்த ஆசை இல்லாமல் இல்லை. ஆனா, விஸ்வத்துக்கும் இந்த சம்பந்தத்துல விருப்பமிருக்கணுமில்லையா? அவன் எனக்கு ஒரே பிள்ளை! அவன் விருப்பத்துக்கு மாறா... நான் எதுவும் செய்ய முடியாதேப்பா!"

"அந்த கவலையே வேண்டாம்! விஸ்வத்துக்கு இதிலே பூரண சம்மதம்!"

"என்னப்பா சொல்றே?"

"ஏங்கா அதிர்ச்சியடையறே?"

"நீ சொன்ன செய்தி அப்படிப்பட்டது!"

"புரியலேக்கா...!" பெருமாளுக்கும் முகம் மாறியது.

"நம்ம வசந்தாவை விஸ்வத்துக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும்னு நான் பத்து வருஷம் முன்னாடியே ஆசைப்பட்டேன் பெருமாள்! ஆனா, இந்தக்காலத்து பிள்ளைங்களோட மனசுல என்ன இருக்குன்னே கண்டுபிடிக்க முடியலே! அவனோட பார்ட்னர் விக்னேஷோட தங்கை பிரேமாவும் நம்ம விஸ்வமும் ஒருத்தரையொருத்தர் விரும்பறாங்க! போன வாரம்தான் விஸ்வம் இதைப்பத்தி என்கிட்டே சொன்னான். சம்பிரதாயப்படி அவங்க வீட்டுக்குப் போய் பொண்ணு கேளும்மான்னு சொன்னான். நானே அடுத்த வாரம் உன்னையும், அம்சாவையும் அழைச்சிட்டுப்போய் முறைப்படி பொண்ணு கேக்கணும்னு இருந்தேன். ஆனா, நீ..."

"அ...க்...கா!" விக்கித்துப்போனார்.

"நீ என்னக்கா சொல்றே: நம்ம விஸ்வம் வேற பொண்ணை

காதலிக்கிறானா? என்னால் நம்பமுடியலே..." துண்டால் வியர்வையை துடைத்துக்கொண்டார்.

"என்னை மன்னிச்சிடு பெருமாள்! உன்னை சங்கடப் படுத்திட்டேன்!"

"நீ என்னக்கா பண்ணுவே? நான் புறப்படறேன் அக்கா!"

"எதுவும் சாப்பிடாமப்போறே?"

"நமக்குள்ளே என்னக்கா பார்மாலிட்டி?! இன்னொருநாள் வந்து சாப்பிட்டுக்கறேன். விஸ்வம் வந்தால் நம்ம வீட்டுக்கு கொஞ்சம் அனுப்பி வை!"

"சரிப்பா!"

பெருமாள் எப்படித்தான் வீடு வந்து சேர்ந்தாரோ?

வீட்டிற்குள் நுழைந்து தொப்பென்று சேரில் அமர்ந்தார்.

"என்னங்க... போன விசயம் என்ன ஆச்சு?" அம்சா அவரைப் பார்த்ததும் ஆவலுடன் அருகில் வந்தாள்.

"வந்ததும் வராததுமா ஏன் தொணதொணக்கிறே? குடிக்க கொஞ்சம் தண்ணி கொண்டு வா... போ!" என்று எரிந்து விழுந்தார்.

இத்தனை வருட தாம்பத்திய வாழ்க்கையில் அவர் கடினமாக பேசிய வார்த்தை இதுதான்! அம்சா திகைப்பில் ஓரடி பின்வாங்கினாள்.

அப்பாவின் குரல் கேட்டு வசந்தாவும் சித்ராவும் அறைக்குள்ளிருந்து வெளிப்பட்டனர்.

"வசந்தா..."

"என்னப்பா?"

"இப்படி வா!"

வந்தாள்.

"இனிமேல் விஸ்வம் இந்த வீட்டுக்குள்ளே வந்தான்னா... நீ அவ கிட்டே பேசக்கூடாது!"

"அ... அப்பா!"

வசந்தா மட்டுமல்ல, அம்சாவும், சித்ராவும்கூட அதிர்ந்துபோயின

'என்ன சொல்கிறார் இவர்?'

"ஏம்ப்பா?"

"ஏன், எதுக்குன்னு கேள்வி கேட்டுட்டிருக்காதே! சொன்னதை செ

அதேநேரம் வாசலில் பைக் சத்தம் கேட்டது.

விஸ்வம் வருகிறான்.

*ராணி முத்து நவம்பர் 1, 2000.*

அனைவரின் கண்களும் பெருமாளையே பார்த்தன.

"அலோ மாமா... ஹாய் வசந்த்!" என்றபடி பெருமாளின் பக்கத்தில் அமர்ந்தான்.

"வசந்த்... உன் கையால் சூடா ஒரு காபி போட்டு எடுத்திட்டு வா... குய்க்..." என்று வசந்தாவைப் பார்த்து கூறியவன், "அவசரமா ஏதோ பேசணுமாம்... உடனே மாமா வீட்டுக்குப் போ... அப்படின்னு அம்மா போன் பண்ணினாங்க. அதான் உடனே கிளம்பி வந்தேன். என்ன மாமா விசயம்?"

வசந்தா கிச்சனை நோக்கிச் சென்றாள்.

"அம்சா... நம்ம விஸ்வத்திற்கு நீ போய் காபி எடுத்துக்கிட்டு வா. அப்புறம்... விஸ்வம் உன் பிஸினஸெல்லாம் எப்படி போய்க்கிட்டிருக்கு?"

"ரொம்ப நல்லா போய்க்கிட்டிருக்கு மாமா!"

"எப்பப்பா கல்யாண சாப்பாடு போடப்போகிறே?"

"நானே இதைப்பத்தி சொல்லணும்னு நினைச்சிட்டிருந்தேன் மாமா! என் பார்ட்னரோட சிஸ்டர்... பேரு பிரேமா! நானும் அவளும் ரெண்டு வருஷமா காதலிக்கிறோம். அம்மாகிட்டே சொன்னேன் மறுப்பு தெரிவிக்கலே... ரெண்டு பேர் வீட்லேயும் சம்மதிச்சாச்சு! நீங்களும், அத்தையும்தான் முன்னிருந்து எங்க கல்யாணத்தை நடத்தித் தரணும்" என்றான் வெட்கத்துடன்.

வசந்தா இதைக் கேட்டு ஆடிப்போனாள். அம்சா விழாமலிருக்க சுவற்றைப் பற்றிக்கொண்டாள்.

பொங்கி வந்த அழுகையை கட்டுப்படுத்த அறைக்குள் ஓடினாள் வசந்தா. சித்ராவும் நம்பமுடியாத அதிர்ச்சியோடு அக்காவைப் பின்தொடர்ந்தாள்.

சிறிது நேரத்திற்குப் பின் விஸ்வம் விடைபெற்றான்.

"வர்றேன் மாமா... வசந்தா எங்கே?"

"உள்ளே வேலையா இருக்கா... நான் சொல்லிடறேன் நீ கிளம்பு!" என்றார்.

அவன் சென்றபின் பெருமாள் வசந்தா இருந்த அறைக்குள் சென்றார்.

"என்னங்க... விஸ்வம் இவ்வளவு பெரிய குண்டா தூக்கி போட்டுட்டுப் போறான்?" என்றாள் அம்சா.

"நாமளா ஏதோ கற்பனைப் பண்ணிட்டு அவனை குறை சொல்றது நியாயமில்லே! அவன் மாமா பொண்ணுங்கற உரிமையில ஜாலியா பேசி சிரிச்சிருக்கான்! அதை அனுமதிச்சது நம்ம தப்பு! வெளிப்படையா கேட்டு உறவை பகைச்சுக்க நான் விரும்பலே! நல்லவேளை... விஸ்வம்கிட்டே நேரடியா கேட்டு நம்ம மூக்கு உடையாமப் போச்சேன்னு சந்தோஷப் பட்டுக்குங்க! இங்கே பாரும்மா வசந்தா! உன் மனசு எனக்குப் புரியுது! அழறதை நிறுத்து. உனக்கு இவனைவிட நல்ல மாப்பிள்ளையா நான் பார்க்கிறேன்!" என்றார் பெருமாள்.



வசந்தாவின் இதயம் தீயாய் எரிந்துக்கொண்டிருந்தது.

'ராஸ்கல்... எவளையோ காதலிச்சுக்கிட்டு என்கிட்டே விளையாடினே? ஏன்டா உனக்குதான் பணக்காரி கிடைப்பாளா? எனக்கும் ஒரு பணக்காரன் கிடைக்காம போகமாட்டான்? உன்னைவிட எல்லாவற்றிலும் உயர்ந்தவனை நானே தேர்ந்தெடுத்து உன் முன் வளைய வராமல் விட மாட்டேன்டா!' அவள் கண்களில் உறுதி தீயாய் ஜொலித்தது.

## 5

சித்ராவுக்கு வசந்தாவை பார்க்கவே கஷ்டமாக இருந்தது.

'பாவம்... விஸ்வத்தின் மேல் எவ்வளவு ஆசை வைத்திருந்தாள். அவன் வருகைக்காக ஒவ்வொரு நாளும் தவமிருப்பாளே!' அவன் பைக் சத்தம் கேட்டதும் துள்ளிக் குதித்து

டுகளில் கலை
வது இப்போது
கில் மிகவும்
டது. நடிகர்–
கலைநிகழ்ச்சி
கிவிட்டார்கள்.
ர்– நடிகைகள்
ண்டனுக்கு



நிகழ்ச்சி
ம்பினார்.
முன்னணி
திரளாக
ழைத்துச்
நடத்திக்
நிகழ்ச்சி
போட்டி

பங்கு
ளுக்கு
ண்டாட்

அக்காவின் கண்களில் ...
வாட்ஸ் பல்பு எரியுமே!

விஸ்வம் மட்டுமென்ன? அவன் பேச்சு, அணுகுமுறை, யாருக்கும் தெரியாமல் இடுப்பில் கிள்ளுவது என்று அவன் நடவடிக்கை ஒரு காதலனைப் போலல்லவா இருந்தது? பிறகெப்படி... வேறொரு பெண்ணை காதலித்தேன் என்கிறான்?

ஆண்கள் ஏன் இவ்வளவு சுயநலக்காரர்களாக, மோசமானவர்களாக இருக்கிறார்கள்? புவனாவின் வாழ்க்கைக்கு எமனாயிருந்த குணசேகரன் அநியாயக்காரன் என்றால்... விஸ்வம் ஒரு ஏமாற்றுக்காரன்! இவர்கள் தேவை எல்லாம் பணம்! பெண் என்பவள் சிற்றின்பத்துக்காக மட்டுமே படைக்கப்பட்டவள் என்கிற எண்ணம்!

ஒரு பெண்ணின் மனதையும், வாழ்க்கையையும் பாழ்பண்ணுவது இவர்களை பொறுத்தவரை ஒரு பொழுதுபோக்கு போலும்.

புவனா அக்காவும், வசந்தா அக்காவும் ஏமாளிகள். எளிதில் உணர்ச்சிவசப்படக்கூடியவர்கள். நான் அப்படி இருக்கமாட்டேன். எந்த ஆணையும் நம்பமாட்டேன். காதல், கல்யாணம் என்ற பந்தத்தில் சிக்கிக்கொள்ளமாட்டேன்.

சித்ராவிற்குள் அந்த வைராக்கியம் பாறையாய் இறுகிப் போய் விட்டது.

ஆனால், வசந்தாவின் எண்ணமோ வேறு விதமாய்

இருந்தது.

விஸ்வம் நம்பவைத்து கழுத்தறுத்துவிட்டான் என்று அவன் மீது கோபப்பட்டது நிஜம். ஆனால், அதைவிட அதிகமான கோபம் அப்பா மீது திரும்பியது.

விஸ்வம் தன் மகளிடம் எப்படியெல்லாம் பழகினான் என்பது அவர் அறியாததா? எல்லாவற்றையும் கண்ணெதிரே பார்த்துக்கொண்டே அனுமதித்தாரே? அக்கா மகன் மகளை விரும்புகிறான் என்று தெரிந்த பிறகுதானே திருமணம் குறித்து பேச சென்றார். 'என் பிள்ளை பிரேமாவைதான் காதலிக்கிறான். அவளைதான் கல்யாணம் செய்து வைக்கப் போகிறோம். என் பிள்ளை விருப்பம்தான் என் விருப்பம் என்று அக்காகாரி சொன்னால்... வாயைப் பொத்திக்கொண்டு வந்துவிடுவதா? எடுத்து சொல்லத் தெரியாதா? உன் பிள்ளை என் பெண்ணின் மனதையும் கெடுத்துவிட்டான் என்று? அக்கா எதிரே பூம் பூம் மாடு மாதிரி தலையாட்டிவிட்டு வந்துவிட்டார். அட்லீஸ்ட் இங்கு வந்த விஸ்வத்திடமாவது நாக்கைப் பிடுங்கிக்கறமாதிரி நாலு வார்த்தை கேட்கலாமல்லவா? துரோகம் இழைத்தவனை உபசரித்து, இதமாய் பேசி அனுப்பியிருக்கிறார். மகளின் வாழ்க்கை மீது அக்கறை இருந்தால்தானே? அப்படித்தான் தீரவிசாரிக்காமல் குணசேகரனின் தலையில் புவனாவைக் கட்டியனுப்பி சாகடித்தார். போதாதற்கு என் பெயரில் பேங்கில் இருந்த பணத்தை எல்லாம் எடுத்து அவளுக்கு தாம்தூமென செலவு செய்து பொழுதோடு சுடுகாட்டிற்கு அனுப்பி விட்டார்.

இப்போது என் பெயரில் இருக்கும் சொற்ப பணத்தை வைத்துக் கொண்டு என்னை எப்படி கரையேற்றப் போகிறார்? இதையெல்லாம் தெரிந்துகொண்டுதான் விஸ்வம் என்னை கை கழுவி விட்டானோ? ஆம்... அப்ப்டித்தான் இருக்கும். என்னைவிட வசதியான இடத்திலிருந்து ஒரு பெண் கிடைத்ததும் என்னை கை கழுவிவிட்டான். நான் இதை சும்மா விடமாட்டேன். விஸ்வத்திற்கும், அப்பாவிற்கும் நான் யார் என்பதை உணர வைக்கிறேன்.' வசந்தா மனதிற்குள் சபதம் செய்து கொண்டாள்.

'வீட்டில் சும்மாயிருப்பது போரடிக்கிறது. டைப்பிங் கற்றுக்கொள்ளப் போகிறேன்' என்றாள் வசந்தா.

'பாவம்... மனதொடிந்துப் போயிருக்கிறாள். அவள் மனஆறுதலுக்காவது போய் வரட்டும்' என்று அனுமதித்தனர் பெற்றோர்.

சென்றுவர ஆரம்பித்தாள்.

ஆரம்பத்தில் கவனிக்கவில்லை. ஆனால் ஒரு உறுத்தலில் உற்று ...போதுதான் அவள் கண்களுக்கு அந்த வெள்ளை நிற

## மூலநோய்

மூலநோய் வராமல் தடுக்கவேண்டுமானால் கீழே கூறியவற்றை முறையாக கடைப்பிடித்தால், மூலநோயில் இருந்து எளிதில் தப்பிவிடலாம்.

★ காய்கறிகள், பழங்களை அதிக அளவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

★ தினமும் குறைந்தது 2 லிட்டர் தண்ணீராவது குடிக்க வேண்டும்.

★ ஒரே இடத்தில் அமர்ந்து இருந்தால் மூலநோய் வரும். எனவே, இளைஞர்களாக இருந்தால் விளையாட்டுக்களில் ஈடுபடுங்கள். முதியவராக இருந்தால் காலாற நடக்க வேண்டும்.

★ காரசார உணவுகளை, மசாலா வகைகள், குறிப்பாக் வறுத்த உணவுகளை தவிர்க்க வேண்டும்.

★ புகை பிடிக்கக்கூடாது. மது அருந்தக்கூடாது.

★ காலை மாலை மலம் கழித்தலை நடைமுறைப் படுத்துங்கள்.

★ அசைவ உணவு வகைகளை கூடியவரை தவிர்ப்பதுநல்லது.

★ அசைவ உணவு சாப்பிட்டே ஆகவேண்டும் என்று கட்டாயம் நேர்ந்தால் அதனுடன் காய்கறிகளையும் கட்டாயம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மேலே சொன்னவற்றை கடைப்பிடித்தாலே போதும். மூலம் வரவே வராது!

டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட் வாசலுக்கு எதிராக இவள் வரும்முன் காத்திருந்து... செல்லும்போது பின்னாலேயே பஸ் ஸ்டாண்ட் வரைக்கும் வந்து, அவள் பஸ் ஏறிச் செல்லும்வரை அங்கேயே நின்றிருந்தது கார்.

வசந்தாவின் கண்கள் அதில் அமர்ந்திருந்த வாலிபனை நோக்கியது. விஸ்வம் அளவிற்கு இல்லாவிட்டாலும், மாநிறமாக அழகாகவே இருந்தான் அவன்.

இவள் மனதிற்குள் சாரலடித்தது. விஸ்வம் சைக்கிளில்தான் வருவான். இவன் காரிலேயே வருகிறானே! என் கனவு நிறைவேறப் போகிறது. நான் நினைத்ததெல்லாம் நடக்கப்போகிறது.

இவள் பார்க்கிறாள் என்றதும்... அணிந்திருந்த கூலிங் கிளாசை கழற்றி மெல்ல புன்னகைத்தான்.

இதயம் படபடக்க தலை கவிழ்த்துக்கொண்ட வசந்தாவிற்கு பதிலுக்கு புன்னகைக்கத் தோன்றியதை கட்டுப்படுத்திக் கொண்டாள்.

அடுத்தநாள் வேண்டுமென்றே அவள் போகும் பஸ்கள் பல வந்ததும்... ஏறாமல் நின்றிருந்தாள்.

அவன் காரிலிருந்து இறங்கி அவளருகே வந்தான்.

"ஹலோ...!" என்றான்.

"என்ன?" அப்போதுதான் அவளைப் பார்ப்பதுப்போல் பார்த்தான்.

"எல்லா பஸ்ஸும் ரொம்ப கூட்டமா வருதில்லே?"

"ஆமாம்!"

"உங்களுக்கு ஆட்சேபனை இல்லைன்னா... எங்கே போகணும்னு சொன்னீங்கன்னா... நான் உங்களை என் கார்லேயே டிராப் பண்ணிடறேன்!"

"ஹோ... நான்சென்ஸ்! நீங்க யாருன்னேத் தெரியாது. முன்னே பின்னே அறிமுகமில்லாதவங்க கூப்பிட்டதும் உடனே வந்திடுவேன்னு எப்படி எதிர்பார்க்கறீங்க?" என்றாள் பொய் கோபம் காட்டி.

"சாரி... என்னை தப்பா நினைச்சிடாதீங்க! இப்ப அறிமுகமாயிடலாமே! என் பெயர் சுரேஷ்! சொந்தமா கம்ப்யூட்டர் சாப்ட்வேர் கம்பெனி வச்சிருக்கேன்!"

"என்பேர் வசந்தா!"

"அழகான பேரு... உங்களைப் போலவே!" என்றான்.

இமைகள் படபடக்க சுரேஷை பார்த்தாள்.

"இப்பவாவது... என் கார்ல ஏறுவீங்களா?"

"இப்பவும் மன்னிக்கணும். நான் எந்த அந்நிய ஆணோடும் போய் பழக்கமில்லை."

"என்னை ஏன் அந்நியனா நினைக்கறீங்க? ஒரு உண்மையை சொல்லட்டுமா? இதுவரைக்கும் என் கார்ல எந்த பொண்ணையும் ஏத்தி சென்றதேயில்லே! என் கார்ல முதல் முதல்ல உட்கார்ற பொண்ணு என் மனைவியாகவோ, அல்லது மனைவியா வரப்போகிறவளாகவோ இருக்கணும்ங்கறதுல நான் உறுதியாயிருக்கேன் வசந்தா!" என்றான் அவளை விழியகலாது பார்த்தபடி.

அதுபோதுமே வசந்தாவிற்கு. இறக்கை கட்டி பறக்க ஆரம்பித்தாள். வசந்தா சுரேஷை பார்த்த பார்வையில் காதல் உற்பத்தியானது.

நாட்கள் கடந்தன. ஆறு மாதங்கள் காணாமல் போயின.

வசந்தா சுரேஷின் தோளில் சாய்ந்திருந்தாள்.

"சுரேஷ்!"

"ம்..."

"எங்க வீட்டுல எனக்கு வரன் பார்க்க ஆரம்பிச்சிட்டாங்க!"

திடுக்கிட்டு நிமிர்ந்தான் சுரேஷ்.

"ஏய்... என்ன சொல்றே நீ?"



"ஆமா சுரேஷ்... நீங்க பணக்காரங்க... என்னை காதலிச்சிட்டு கைவிட்டுருவீங்களோன்னு பயம்மாயிருக்கு சுரேஷ்!" வசந்தாவின் கண்கள் கண்ணீரில் பளபளத்தன.

"வசந்தா... இத்தனை மாசமா பழகியும் என்னைப்பத்தி நீ புரிஞ்சுக்கிட்டது இவ்வளவுதானா? யார் தடுத்தாலும் சரி... நீதான் என் மனைவி! முறைப்படி எல்லாமே நடக்கும். நான் நாளைக்கே உங்க அப்பாவைப் பார்த்து பேசறேன்!"

"நி...நிஜமாவா...?" ஆச்சரியத்தில் வாய் பிளந்தவளை இழுத்து அணைத்து முகம் நோக்கி குனிந்தான் சுரேஷ்.

## 6

பெருமாள் யோசனையுடன் அமர்ந்திருந்தார். வசந்தா தன்னை நேர்த்தியாக அலங்கரித்துக்கொண்டிருந்தாள். அம்சா இப்படியும் அப்படியுமாய் நடமாடிக்கொண்டிருந்தாள். வீடு முழுக்க நெய் வாசம் மணத்தது.

"சித்ரா... கூடமாட கொஞ்சம் வேலை செய்யக்கூடாதா? இந்த தேங்காயை கொஞ்சம் துருவிக்கொடேன்!"

"எனக்கு நாளைக்கு எக்ஸாம் இருக்கு... என்னால முடியாதும்மா!" என்றாள் பட்டென்று.

'இந்த வீட்டுக்கு இன்னொரு அயோக்கியன் வரப்போகிறான்! அவனுக்காக அஞ்சு நிமிடம்கூட வீணாக செலவு பண்ணமாட்டேன்!' என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டாள்.

"இந்த வீட்ல எல்லாத்தையும் நான் ஒருத்தியே செய்ய வேண்டியிருக்கு!" என்றவள் சுடசுட ஒரு வடையை தட்டில் வைத்து கணவனிடம் வந்தாள்.

"இதிலே உப்பெல்லாம் சரியா இருக்கான்னு பாருங்க!" என்று தட்டை நீட்டினாள்.

"ப்ச்... நீயே சரி பார்த்துக்க!" என்றார் விட்டேற்றியாக.

"என்னங்க... ஏன் ஒருமாதிரியா இருக்கீங்க?"

"எனக்கென்னவோ இதெல்லாம் சரியா வரும்னு தோணலே அம்சா?"

"என்னங்க பேசறீங்க நீங்க?" அம்சா அதிர்ந்தாள்.

"ஆமாம் அம்சா... 
ரொம்ப வசதியான இடம்!"

"இருந்தா என்னங்க? வசந்தா அதிர்ஷ்டக்காரி. வசதியான இடமாயிருந்தாலும், அந்த பிள்ளை எவ்வளவு மரியாதையா வீடு தேடி வந்து 'நானும் வசந்தாவும் ஒருத்தரையொருத்தர் லவ் பண்றோம். அதனாலே கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன். அடுத்த வாரமே எங்கப்பா அம்மாவோட சம்பிரதாயப்படி பொண்ணு பார்க்க வர்றேன்'னு சொல்லிட்டுப் போனாரே! அப்புறம் என்னங்க பயம்? நாம எப்பவும் கெட்டவங்க பேச்சுதான் அதிகமா நம்பிக்கை வைக்கிறோம். நல்லவங்களை சந்தேகப்படுகிறோம். இப்ப நீங்க பண்றதும் அப்படித்தானிருக்கு!"

"அந்த பிள்ளை நல்லவனாயிருக்கலாம். தான் விரும்பினதுக்காக வசந்தாவிடம் அதிகமா எதிர்பார்க்காம கல்யாணம் பண்ணிக்க அவன் முன்வரலாம். ஆனால், அவங்க அம்மா, அப்பாவோட எதிர்பார்ப்பு எப்படியிருக்கும்னு தெரியலியே! அன்னைக்கு அந்த பிள்ளை சொல்லிட்டுப் போன ஒரு வார்த்தையை மறுபடி நினைவுபடுத்திப் பார்! 'நான் எங்கவங்களோட ஆசீர்வாதத்தோட எங்க வாழ்க்கையை தொடங்க ஆசைப்படறேன்! எங்க வீட்லே நான் ஒரு பொண்ணை காதலிக்கிறேன்னு தெரிஞ்சாலே ஷாக்காயிடுவாங்க! ஏன்னா அவங்க எதிர்பார்ப்புகள் வேற! பட், என் விருப்பத்தை மீறி எதுவும் பண்ணமாட்டாங்க. ஸோ, என் காதலை அங்கீகரிச்சாலும், அவங்க கவுரவத்துக்கு ஏத்தமாதிரி ஓரளவாவது நல்லா செய்யணும்னு எதிர்பார்ப்பாங்க. தயவுசெய்து நீங்க எப்படியாவது அட்ஜஸ்ட் பண்ணி செய்யறேன்னு சம்மதிக்கணும்'னு சொல்லிட்டுப் போனதுக்கு என்ன அர்த்தம்?"

"எல்லாத்தையும் இப்பவே போட்டு குழப்பாதீங்க. நம்மளுக்கு நம்ம வசந்தா வாழ்க்கை முக்கியம். ஏற்கனவே உங்க அக்கா டைபனாலே மனசு நொந்தமாதிரி... சுரேஷ் முடிவுக்கு போகமாட்டான்னு என்ன நிச்சயம்? அவங்க முதல்ல வரட்டும். கேட்கட்டும். நம்மால் முடிஞ்சதை நிச்சயம் செய்யதான் போகிறோம். அவங்க வர்ற நேரமாயிடுச்சுங்க. நீங்க உம்முனு உட்கார்ந்திட்டிருந்தீங்கன்னா... வசந்தா என்ன நினைப்பா? எந்திரிச்சி வாங்க... முதல்ல டிரஸை மாத்திக்கிட்டு ரெடியாயிருங்க!" என்றாள் அம்சா.

பெருமாள் அரை மனதுடன் சேரைவிட்டு எழுந்தார்.

இரண்டு கார்களில் வந்திறங்கியவர்களை அந்த தெருவே மிரட்சியுடன் பார்த்தது.

பெருமாளுக்கு அவர்களை பார்த்து இன்னும் பயம் அதிகரித்தது.



சுரேஷின் தாய் கமலா உடம்பு நிறைய நகையுடன் அலட்சியத்துடன் கண்களால் வீட்டை அளந்தாள்.

"வாங்க... வாங்கம்மா... வாங்க சார்!" பெருமாள் வரவேற்றார்.

"என்ன சுரேஷ் வீடு இவ்வளவு சின்னதாயிருக்கு?" என்றாள் அதிருப்தியாய்.

"வாடகை வீடு சிறுசா இருந்தா என்ன? பெருசா இருந்தா என்ன? மொதல்லே பொண்ணை பார்ப்போம். ஞாபகமிருக்கா? உன் பிள்ளையை மாதிரி நானும் உன்னை லவ் பண்ணி, இதேமாதிரி பொண்ணு பார்க்க வந்தப்ப... உங்க வீடு இதைவிட சின்னதா இருந்துச்சு!" சுரேஷின் தகப்பனார் சுந்தரம் மனைவியின் காதில் கிசுகிசுத்தார்.

"எதை எங்கே பேசணும்னே தெரியாதா உங்களுக்கு? வீட்டுக்கு வாங்க பேசிக்கிறேன்!" அடிக்குரலில் மிரட்டினாள்.

சுந்தரம் அதோடு வாயைப் பொத்திக்கொண்டார்.

"அம்மா... வசந்தாவை எனக்கு பிடிச்சிருக்கு. எதையாவது பேசி அவாய்ட் பண்ணணும்னு மட்டும் நினைக்காதீங்க. மேற்கொண்டு கல்யாண விஷயத்தை பேசுங்க!" கிட்டத்தட்ட மிரட்டினான் சுரேஷ்.

"ஆமா, பெரிய பூலோக ரம்பையை பார்த்துட்டான். பரதேசிப் பயல் மாதிரி... எலிப்பொந்து வீட்லே வாழற பொண்ணை காதலிச்சிட்டானாம்! நாங்க உடனே சம்மதிச்சிடணுமாம். எல்லாம் தலையெழுத்து." எரிச்சலுடன் நிமிர்ந்தாள்.

"சரி... சரி... முதல்ல பொண்ணை வரச்சொல்லுங்க. எங்களுக்கு நிறைய வேலையிருக்கு!" என்றாள் கமலா.

"அம்சா... வசந்தாவை கூட்டிக்கிட்டு வாம்மா!" என்றார் பெருமாள்.

அலங்காரத்தில் பட்டை தீட்டப்பட்ட வைரமாய் ஜொலித்தாள் வசந்தா. அனைவருக்கும் நமஸ்காரம் பண்ணினாள்.

'பரவாயில்லே... அழகாகதானிருக்கா! அதான் என் பிள்ளை மயங்கிட்டான்!'

'என்ன படிச்சிருக்கே, பாடத் தெரியுமா?' என்ற சம்பிரதாய பேச்சுகளுக்குப் பிறகு முக்கியமான விஷயத்திற்கு வந்தாள் கமலா.

"இதோப் பாருங்க... நாங்க யாருன்னு உங்களுக்குத் தெரியும். எங்க கவுரவம், அந்தஸ்து, செல்வாக்கு எல்லாம் தெரிஞ்சிருக்கும். எங்க தகுதிக்கு நான் உங்க வீட்டுக்கு வந்து பொண்ணு கேட்டோம்னு தெரிஞ்சாலே.. எங்க உறவுக்காரங்க கோவிச்சுப்பாங்க. அப்படியும் மீறி இங்கே வந்திருக்கோம்னா... அது என் பிள்ளைக்காக! அவன் ஆசைப் பட்டுட்ட ஒரே காரணத்துக்காகத்தான் இங்கே வந்திருக்கிறோம்!"

"அம்மா... எதுக்கும்மா இதையெல்லாம் பேசிக்கிட்டு..." சுரேஷ்

இடைமறித்தான்.

"உன் விருப்பப்படி நான் இறங்கி வந்தேனில்லையா? என்னை கொஞ்சம் பேசவிடு சுரேஷ்" என்றாள் அவனுக்கு மட்டுமே கேட்கும்படி.

பெருமாளும் அம்சாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"உங்க பொண்ணு சின்ன வீட்டிலேர்ந்து, பெரிய மாளிக்கைக்கு நிரந்தரமா வந்து வழப்போறா! அங்கே வந்திட்டபிறகு அவள் எங்கவீட்டு மருமகள். எனக்கு மருமகளா வரப்போகிறவள்... எங்க அளவுக்கு இல்லேன்னாலும் ஓரளவுக்காவது கவுரவமா வந்தாதானே எங்களுக்கு மரியாதை?"

பெருமாள் எச்சிலை கூட்டி விழுங்கிக்கொண்டார்.

"நான் என் பிள்ளைக்கு கார் வேணும், பைக் வேணும், அது வேணும், இது வேணும்னு கேக்கப்போறதில்லே... கையிலே ஒரு இலட்சம் கொடுங்க, ரெண்டு இலட்சம் கொடுங்கன்னும் கேட்கப்போறதில்லே! ஆண்டவன் புண்ணியத்துல எங்களுக்கு அதெல்லாம் நிறையவே இருக்கு. அனால், எங்க கவுரவத்துக்கு ஏத்தமாதிரி கொஞ்சமாவது கவுரவமா அனுப்பினாதானே, உங்கப் பொண்ணுக்கு மரியாதை கிடைக்கும்?"

".........!"

"அதனால, உங்க பொண்ணுக்கு குறைஞ்சது அறுபது பவுன் நகையாவது போடுங்க! இந்த ஒரு விஷயத்திலே என் பிள்ளையே வந்து சமாதானப்படுத்தினாலும் நான் மசியமாட்டேன்!" என்றாள் கமலா உறுதியாக.

"அம்மா!" சுரேஷ் அம்மாவை அதிர்ச்சியோடு பார்த்தான்.

"சுரேஷ்... உனக்காக நான் ரொம்ப கீழே இறங்கி வந்திருக்கிறேன். அதனால அதிகபிரசங்கித்தனமா எதுவும் பேசாதே!"

சுந்தரம் வாயே திறக்கவில்லை.

பெருமாள் தயங்கி தயங்கி பேசினார்.

"அம்மா... நீங்க சொல்றது வாஸ்தவம்தான். எங்க தகுதிக்கு நீங்க இந்தளவுக்கு இறங்கி வந்ததே பெரிய விஷயம்தான். ஆனா, எனக்கு ல்யாண வயசுல இன்னொரு பெண்ணும் இருக்கிறதா! என்னால நீங்க கக்கற அளவுக்கு..."

"இதுக்கூட போடமுடியாதுன்னா நன் எதுவுமே சொல்றதுக்கில்லே! க பொண்ணு தகுதிக்கு மீறி ஆசைப்பட்டிருக்கக்கூடாது. நல்லா



யோசிச்சு பதில் சொல்லுங்க! அதுக்குப்பிறகு மத்தவிஷயம் பத்தி பேசுவோம்! வாங்க போகலாம்" என்று எழுந்துகொண்டாள் கமலா.

சுரேஷ் தர்மசங்கடத்துடன் தலைகுனிந்துகொண்டான்.

'உங்களுடைய அதிகபிரசங்கித்தனமான ஆசைக்காக, அடாவடியான கவுரவத்துக்காக, அதைக் காரணம் காட்டி இந்த கல்யாணத்தை நிறுத்த முடியாது. நான் வசந்தாவைதான் கல்யாணம் பண்ணிக்குவேன். உங்களால ஆனதை பார்த்துக்குங்க' என்று வசனம் பேசினால் அவன் ஆம்பளை! அம்மா வீரவசனம்பேசிவிட்டுப்போகிறாள்... கையாலாகாதவனாய் தலையை தொங்கப் போட்டுக்கொண்டு பின்னாடியே போகிறான் மகன்! நல்ல ஆண்கள்? என்று தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள் சித்ரா.

'இதுவும் கைகூடாதோ?' என்கிற பயத்தோடு பரிதாபமாய் நின்றிருந்தாள் வசந்தா.

பெருமாள் போகிறவர்களை தடுக்க முற்படவில்லை. அம்சாவிற்கு தான் அழுகை முட்டிக்கொண்டு வந்தது.

## 7

"நீங்க பேசறது கொஞ்சம்கூட சரியில்லீங்க! எவ்வளவு பெரிய இடம்? நாம கனவுலகூட நினைச்சுப் பார்க்க முடியாது. அவங்க தகுதிக்கு அவங்க கேட்டது ரொம்ப கம்மி! நம்ம பொண்ணுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையுதுன்னா... உருண்டு புரண்டாவது முடிச்சுதான் ஆகணும். அதைவிட்டுட்டு அந்த சம்பந்தமே வேண்டாம்னு எடுத்த எடுப்பிலேயே பேசறது கொஞ்சம்கூட நல்லா இல்லேங்க!" அம்சாவிற்கு மனசு ஆறவில்லை.

"விரலுக்கேத்த வீக்கம் வேணும் அம்சா! பெரிசா இருக்கேன்னு சின்ன காலுக்கு வாங்கி செருப்பை மாட்டிக்கிட்டா நடக்க முடியாது."

"வீம்பு பிடிக்காதீங்க! அவங்களே இறங்கி வந்து வீடு தேடி வந்து பொண்ணு கேக்கறப்ப... நீங்க ஏன் பிகுபண்ணிக்கறீங்க? அவங்க என்ன கார் வேணும், பங்களா வேணும்னா கேட்டாங்க?"

"அம்சா! நீயே புரியாமப்பேசினா எப்படி? எனக்கு வர்ற பென்ஷன்ல சாப்பிட்டுக்கிட்டிருக்கோம்! வேற வருமானத்துக்கும் வழியில்லை! வசந்தாவுக்கு பேங்கிலே போட்டு வைச்சிருக்கிற

பணத்திலே இருபது பவுன் [illegible] ...யோட கல்யாணம் பண்ணி தரலாம். என்னால் அவ்வளவுதான் முடியும்! இதுக்குமேல் என்னால் என்ன செய்யமுடியும் சொல்லு?"

வசந்தா கதவோரம் நின்றபடி அவர்கள் பேசுவதை கேட்டுக் கொண்டுதான் இருந்தாள்.

"ஏங்க... நான் ஒண்ணு சொன்னா கோவிச்சுக்க மாட்டீங்களே?"

"என்ன சொல்லு."

"வசந்தா வாழப்போகிற இடம் பெரிய இடம். பணத்துக்கோ, அந்தஸ்துக்கோ குறைச்சலில்லே? நம்ம வசந்தா அங்கே போயிட்டா... அவளும் பணக்காரி ஆயிடுவா! அப்ப நமக்கு உதவி செய்யமாட்டாளா? இல்லே... சித்ராவோட கல்யாணத்தைதான் ஜாம்ஜாம்னு செலவு பண்ணி நடத்தமாட்டாளா என்ன?"

"என்ன சொல்ல வர்றே நீ?" மனைவியை ஆழமாய் நோக்கினார்.

"நம்ம சித்ரா பேர்ல இருக்கிற பணத்தையும் சேர்த்து வசந்தாவுக்கு..."

"அறிவிருக்கா உனக்கு?" கத்தினார்.

"ஏற்கனவே உன் பேச்சை கேட்டுதான் இவங்க ரெண்டு பேர் பேர்ல இருந்த பணத்தை எடுத்து வாரியிறைச்சி கல்யாணம் பண்ணி என் பொண்ணை வாரிக் கொடுத்தேன். ஏன்டி, உனக்கென்ன புத்தி கித்தி மழுங்கி போச்சா என்ன? சரி, அப்பவாவது நான் வேலையிலே இருந்தேன். இவங்களை எப்படியாவது கரையேற்றிவிடலாம்னு நம்பிக்கையிலே இருந்தேன். நீ சொன்னபடி பணத்தையும் எடுத்துக் கொடுத்தேன். இப்ப நான் பென்ஷன்ல குடும்பத்தை ஓட்டிக் கிட்டிருக்கிறவன். எல்லாம் தெரிஞ்சிருந்தும் அறிவுக்கெட்டதனமா பேசறியே!"

"அப்பா!" அதுவரை ஒதுங்கியிருந்த வசந்தா பெருமாளின் எதிரில் வந்து நின்றாள்.

"என்னம்மா?"

"அப்பா... உங்களுக்கு என்மேல் நம்பிக்கையில்லையா?"

"வசந்தா...!"

"அம்மா சொல்ற மாதிரி சித்ரா கல்யாணத்தை நான் ஏற்று நடத்தமாட்டேனா?"

"நீ என்னம்மா சொல்றே?"

"எ... எனக்கு... கல்யாணம்னு ஒண்ணு நடந்தா... அது சுரேஷோட மட்டும்தான்! சுரேஷ் ரொம்ப நல்லவர் அப்பா! உங்க அக்கா மகன் மாதிரி துரோகியில்லே! அவர் நினைச்சிருந்தா பெரிய பெரிய



பணக்கார வீட்லேர்ந்து பொண்ணை கல்யாணம் பண்ணியிருக்கலாம். என்னை காதலிச்சதோட ஏமாத்திட்டு ஓடிப்போயிருக்கலாம். ஆனால், அவர் அப்படியல்லாம் செய்யலே. ஏன்னா, அவர் மனசாட்சியுள்ள மனுஷன். அவங்க அந்தஸ்துக்கு நம்மகிட்டே கேட்டது ரொம்ப கம்மிப்பா! இதைக்கூட செய்யலேன்னா... எனக்கு அங்கே எந்த மரியாதையும் கிடைக்காது!"

"அம்மாடி! நீயும் உங்கம்மாவை மாதிரி புரிஞ்சுக்காம பேசறியேம்மா! உன் மனசு என்க்குப் புரியாம இல்லே வசந்தா! ஆனா, உனக்கடுத்து சித்ரா இருக்கா! அவள் வாழ்க்கையிலே ரிஸ்க் எடுக்க நான் தயாராயில்லே! நம்ம நிலைமையை புரிஞ்சுக்கிட்டு அவங்க உன்னை ஏத்துக்கிட்டாங்கன்னா சந்தோசம்! இல்லேன்னா... விதி விட்ட வழின்னு மனசை தேத்திக்க வேண்டியதுதான்!"

"இதுதான், உங்க முடிவாப்பா?" அழுகையும் ஆத்திரமுமாய் கேட்டாள்.

"வேற நான் என்னம்மா செய்ய முடியும்?"

"ஆனா, என்னால் செய்யமுடியும்ப்பா?" என்றவள் விருட்டென அறைக்குள் நுழைந்து கதவை தாளிட்டுக்கொண்டாள்.

"ஐயோ... என்னங்க இது? அவள் எதுனா தப்பான முடிவுக்கு போயிடுவா போலிருக்கே? அம்மாடி வசந்தா... கதவை திறம்மா... வசந்தா!" அலறினாள் அம்சா.

சித்ராவும் திகைத்துப்போய் கதவைத் தட்டினாள்.

அப்போதுதான் விபரீதம் உறைத்தது பெருமாளுக்கு.

"வசந்தா... வசந்தா கதவை திறம்மா! என்ன இது பைத்தியக்காரத் தனம்? கதவை திற!"

"ஆமாப்பா... பைத்தியக்காரத்தனம்தான்! நான் சுரேஷ்மேல் ஆசைப்பட்டது தப்பு! அவரையே கல்யாணம் பண்ணிக்க தெய்வமே ஒரு சந்தர்ப்பம் தந்தது அதைவிட தப்பு! இந்த பைத்தியக்காரி உயிரோட இருக்கக்கூடாதுப்பா! என்னை கடவுள் உங்களுக்கு மகளா படைச்சிருக்க கூடாதுப்பா! நான் போகிறேன்... இந்த உலகத்தை விட்டே ஒரேயடியாய் போய் ஒழியறேன். எனக்குன்னு சேர்த்து வைச்சிருக்கிற பணத்தையும் சித்ராவுக்கு போட்டு அவளையாவது சந்தோஷமா வாழவிடுங்க!" உள்ளிருந்து கதறியபடி வசந்தா... உத்திரத்தில் சேலையை மாட்டி சுருக்குப் போட்டாள்.

இந்தக் காட்சியை ஜன்னல் வழியே பார்த்த அம்சா மயங்கி விழுந்துவிட்டாள்.

சித்ரா பலமாய் கதவைத் தட்டினாள்.

"அக்கா... கதவை திறக்கா... அவசரப்பட்டு எந்த முடிவும் எடுத்திடாதே!"

"அம்மா வசந்தா... கதவை திறம்மா! வெளியே வாம்மா... நிதானமா பேசலாம். உன்னையும் புவனாவை மாதிரி எமனுக்கு வாரி கொடுக்க நான் தயாராயில்லே! வெளியே வந்திடும்மா!"

"நிதானமா பேசினாலும் உங்க முடிவிலே இருந்து நீங்க மாறப் போறதில்லே! நான் செத்தாலும் விதி மேல் பழியை போட்டு நிம்மதியா இருக்க சத்தியமா நான் கதவை திறக்க மாட்டேன்!" என்றாள் தீர்மானமான குரலில்.

அதற்குமேல் கெஞ்சிக்கொண்டிருக்க நேரமில்லை என்பதை உணர்ந்தவராய் கதவை இடித்து உடைக்க ஆரம்பித்தார்.

பழங்காலத்து கதவு என்பதால் அதை உடைக்க ரொம்ப சிரமப்படவில்லை.

அவர் உடைத்துக்கொண்டு உள்ளே செல்லவும்... வசந்தா கழுத்தில் சுருக்கை மாட்டவும் சரியாய் இருந்தது.

ஓடிப்போய் அவள் கால்களை தூக்கிப் பற்றிக்கொண்டார்.

வீட்டில் நிசப்தம் ஒடிப்பிடித்து விளையாடியது. வசந்தா வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்தாள். அம்சா வழிந்துகொண்டிருந்த கண்ணீரை சேலை தலைப்பால் துடைத்தபடி இருந்தாள்.

பெருமாளுக்கு யோசித்து யோசித்து மூச்சுமுட்டிற்று.

'இந்தப் பெண்ணை வாழவைக்கப்போய் சித்ராவின் வாழ்க்கை கேள்விக்குறியாகிவிட்டால்...? வசந்தா தன் தங்கைக்கு செலவு செய்து கல்யாணம் செய்ய சுரேஷோ, அவன் தாயாரோ ஒப்புக்கொள்ளாவிட்டால்...? சித்ராவின் கதி...?'

அந்த சுரேஷிற்கு கல்யாணம் செய்து தராவிட்டால் மறுபடி தற்கொலை முயற்சியில் வசந்தா ஈடுபடமாட்டாள் என்பது என்ன நிச்சயம்?

'ஐயோ கடவுளே... நான் என்னதான் செய்வது?'

"என்னங்க இப்படியே உட்கார்ந்திட்டிருந்தா என்னங்க அர்த்தம்?"

"......"

"நமக்கு இப்ப வேற வழியே இல்லேங்க! பார்த்திங்க இல்லே... அவள் எந்த முடிவை தேர்ந்தெடுத்தான்னு? பெத்த பொண்ணுங்களை எல்லாம் வாரி கொடுத்துட்டு நான் மட்டும் உயிரோட இருப்பேன்னு நினைச்சிடாதீங்க..."

"அ...ம்...சா!"



"நாம இப்ப எடுக்கப்போறகிற எந்த முடிவும் வசந்தாவுக்கு சாதகமாகத்தான் எடுத்தாகணும். அதைத் தவிர வேற வழியே இல்லே!"

பெருமாள் பெருமூச்சுவிட்டார்.

"சரி" என்றார் படித்துக்கொண்டிருந்த சித்ராவை கண்ணீர்மல்க பார்த்தபடி.

வசந்தா... சுரேஷின் திருமணம் அமர்க்களமாய் நடைபெற்றது. சித்ராவிற்கென போட்டிருந்த பணத்தை எல்லாம் வழித்தெடுத்து அறுபது பவுன் நகையாய் மாறி வசந்தாவின் மேனியில் பளபளத்தது.

அம்சாவிற்கு பெருமை பிடிபடவில்லை.

'உங்க சம்மந்தி வீட்டுலே நாலு காரு இருக்காமே! நிஜமாவா? வசந்தா ரொம்ப அதிர்ஷ்டகாரி!' என்று கேட்டபோது உச்சி குளிர்ந்துபோனாள் அம்சா.

பெருமாளுக்குத்தான் தொண்டையில் முள்குத்திக்கொண்டது போல் அவஸ்தைப்பட்டார். நடக்கக்கூடாத ஏதோவொன்று நடக்கப் போவது போல், மனம் அமைதி இழந்திருந்தது.

இதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்பது போல் அமைதியாய் இருந்தாள் சித்ரா.

## 8

இரண்டு பொங்கலும், இரண்டு தீபாவளியும் ஓடிப்போயின.

வசந்தா அமோகமாக வாழ்ந்துகொண்டிருந்தாள். அவள் கையில் இப்போது பத்து மாதத்தில் ஆண் குழந்தை ஒன்று தவழ்ந்துகொண்டிருக்கிறது.

வசந்தா கணவனுடன் காரில் ஓரிருமுறை பிறந்த வீட்டை வந்து எட்டி பார்த்துவிட்டு சென்றாள். சித்ரா தற்போது கம்ப்யூட்டர் கிளாஸிற்கு போய்க்கொண்டிருக்கிறாள்.

பெருமாள் சாப்பாடு முடிந்து வெற்றிலைப் போட்டுக்கொண்டிருந்தார்.

அம்சா சமையல்கட்டை ஒழுங்குப்படுத்திவிட்டு கணவர் அருகே

வந்தாள்.

கொல்லைப்புறத்தின் இதமான தென்றல் காற்று முற்றத்தில் புகுந்து விளையாடியது.

"என்னங்க?"

திரும்பிப் பார்த்தார்.

"வந்துட்டியா? வேலையெல்லாம் முடிஞ்சுதா? காத்து நல்லா வருது... வா... இப்படி வந்து உட்கார்!"

அவர் எதிரே அமர்ந்தாள். தானும் இரண்டு வெற்றிலையை காம்பு கிள்ளி வாயில் போட்டுக்கொண்டாள்.

"என்னங்க?"

"சொல்லு... உன் முகத்தை பார்த்தாலே தெரியுதே... பெரிய விசயத்தை சுமந்துகிட்டு வந்திருக்கேன்னு. என்னம்மா விசயம்?" கிண்டலாய் சிரித்தபடி கேட்டார்.

"எல்லாம் நல்ல விசயம்தாங்க! நம்ம தெருவிலே குடியிருக்காங்களே தனலட்சுமி..."

"ம்... என்னவாம்?"

"அவங்க காலையிலே நம்ம வீட்டுக்கு வந்திருந்தாங்க."

"எதுக்கு?"

"அவங்க அக்கா பையன் ஒருத்தன் சிங்கப்பூர்ல கப்பல்ல என்ஜினீயரா இருக்காராம். கைநிறைய சம்பளம். இப்ப ஊருக்கு வந்திருக்காராம். பேரு அரவிந்தனாம். ரொம்ப அழகாயிருப்பாராம். கண்ணுக்கு லட்சணமா நல்ல அடக்கமான பொண்ணா வேணும்மாம். தனலட்சுமி நம்ம சித்ராவைப் பத்தி சொல்லியிருக்காங்க. அந்த பையனோட அம்மா இவங்க வீட்டுக்கு வந்திருந்தப்ப நம்ம சித்ராவை பார்த்திருக்காங்க போல. அதனால் அவங்களுக்கும் இஷ்டமாம். பையன் ரெண்டு மாசத்துல மறுபடி சிங்கப்பூர் போயிடுவாராம். அதுக்குள்ளே கல்யாணத்தை முடிச்சிடணுமாம். நாலைஞ்சு மாசம் கழிச்சி மாப்பிள்ளை சித்ராவையும் சிங்கப்பூருக்கு கூட்டிக்கிட்டு போயிடுவாராம்!"

"எல்லாம் சரிதான் அம்சா! சிங்கப்பூர்ல வேலை செய்யற மாப்பிள்ளைங்கறே! அவங்க எல்லாம் நிறைய எதிர்ப்பார்ப்பாங்களே...!"

"அதைப்பத்தி கேக்காம இருப்பேனா? அவங்க ரொம்ப நல்லவங்களாம். அதிகமா ஒண்ணும் வேண்டாம். இருபது பவுன் நகை



போட்டாலே போதும். கல்யாண செலவெல்லாம் எங்களோடதுன்னு சொன்னாங்களாம்!"

"நிஜமாவா?" என்றார் ஆச்சரியத்துடன்.

"ஆமாங்க... எனக்குக்கூட ஆச்சரியமா இருந்துச்சு. இந்தக்காலத்துல இப்படியும் இருக்காங்களேன்னு. எப்படியோ, சித்ரா போற இடம் நல்ல இடம்! அதுவே போதும்!"

"சித்ராகிட்டே இதுபத்தி பேசினியா?"

"இல்லேங்க! எடுத்த உடனே அபசகுனமா வேண்டாம்னு சொல்லுவா!"

"ஆமா அம்சா! புவனாவோட மரணம் அவளுக்குள்ளே பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கு. அதனால்தான் கல்யாணம்னாலே அவளுக்கு வெறுப்பாயிருக்கு!"

"அதுக்காக... நாம அவளை இப்படியே விட்டுட முடியுமா? அவள் சின்னப்பொண்ணு... அவளுக்கென்ன தெரியும்? சொல்ல வேண்டியதை சொல்லி அவளை வழிக்கு கொண்டுவர்றது என் பொறுப்பு!"

"சரி!"

"நாளைக்கு நாம வசந்தாவை பார்த்துட்டு சித்ராவோட கல்யாண விசயமா பேசிட்டு வந்திடலாம்!"

"நானும் அதையேதான் நினைச்சிட்டிருந்தேன்!"

"இப்பதாங்க மனசுக்கு நிறைவாயிருக்கு! சித்ராவோட கல்யாணம் முடிஞ்சதும்... நாம ரெண்டு பேரும் திருப்பதி போயிட்டு வரலாம். சித்ரா கல்யாணம் நல்லபடி நடந்து முடிந்தா... மொட்டை அடிக்கிறதா வேண்டிகிட்டேன்!"

"சரி... போயிடுவோம்!" என்றார் சந்தோசமாக.

அம்சாவும் மனம்நிறைந்து சிரித்தாள்.

கையில் பழக்கூடையுடன் அந்த பங்களாவினுள் நுழைந்தனர் பெருமாளும் அம்சாவும்.

மகள் இந்த பங்களாவில்தான் வாழ்கிறாள் என்கிற பெருமிதம் எழ நிமிர்ந்து பார்த்தனர்.

மூன்று மாடியில் உயர்ந்து நின்றிருந்தது.

உள்ளே நுழைந்ததும் சுரேஷ்தான் கார் சாவியை சுழற்றியபடி எதிர்பட்டான்.

"வாங்க மாமா... வாங்க அத்தை! நான் அவசரமா வெளியே

... நீங்க இருந்து சாப்பிட்டுவிட்டுதான் போகணும்."

"பரவாயில்லே மாப்பிள்ளை... அவசர வேலைங்கறீங்க... நீங்க கிளம்புங்க!" என்றார் பெருமாள்.

"வசந்தா... யார் வந்திருக்காங்கன்னு வந்து பாரு! என்று உள்ளே பார்த்து குரல் கொடுத்துவிட்டு வர்றேன்" என்று தலையாட்டிவிட்டு புறப்பட்டான்.

குழந்தையுடன் அறைக்குள்ளிருந்து வெளிப்பட்ட வசந்தாவின் முகத்தில் சின்ன சிரிப்பு. நன்றாக வெயிட் போட்டிருந்தாள்.

"வாம்மா... வாங்கப்பா!" என்றாள் விருந்தாளியை வரவேற்பது போல.

"என்னம்மா... உங்க ரெண்டு பேருக்கும் இப்பதான் வழி தெரிஞ்சதா?" என்று செல்லமாய் கோபித்துகொள்வாள் மகள் என்று எதிர்பார்த்த இருவருமே ஏமாற்றமடைந்தனர்.

"உங்க மாமியார் எங்கேம்மா?"

"மாமாவோட ஒரு கல்யாணத்துக்காக சேலம் போயிருக்காங்க!"

"டேய்... டேய் பயலே... தாத்தாகிட்டே வாடா!" என்று குழந்தையை வாங்கிக்கொண்டார்.

"நல்லாயிருக்கியாம்மா?"

"ம்... இங்கே எனக்கெந்த குறையுமில்லே!"

"ஒரு சந்தோசமான விசயம் சொல்லத்தான் வந்திருக்கிறோம்!"

"அப்படியா? என்ன விசயம்?" என்றாள் சாதாரணமாக.

"நம்ம சித்ராவுக்கு கல்யாணம்!"

"ஓகோ!"

"மாப்பிள்ளை பாரின்ல வேலை செய்யறார்!" என்று அதைப்பற்றி விளக்கமாய் சொல்லி முடித்தாள்.

"நீ கொஞ்சம் சீக்கிரம் ஏற்பாடு பண்ணிட்டியானா... அவங்களை வரவழைச்சி பேசி முடிச்சிடலாம்!"

"நான் ஏற்பாடு பண்ணணுமா? என்ன ஏற்பாடு?"

பெருமாளும் அம்சாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"என்னம்மா இப்படிக் கேக்கறே? சித்ராவோட கல்யாண ஏற்பாடுகளை நீதானேம்மா செய்யணும்?"

"என்னம்மா விளையாடறே! பெத்தவங்க நீங்க கல்லு மாதிரி உயிரோட இருக்கிறப்ப... நான் ஏம்மா செய்யணும்?"

"வசந்தா... என்னம்மா குண்டைத் தூக்கிப் போடறே? உன் கல்யாணத்துக்காகத்தானே சித்ராவுக்கு வைச்சிருந்த பணத்தை எல்லாம் எடுத்து உனக்கு செலவு செய்தோம்?"

"அப்பா... அது உங்க கடமை! பெத்த பொண்ணுக்கு பண்ணின கல்யாண செலவையும், சீர் செலவையும் பத்தி சொல்லிக் காட்டறது... கவுரவமில்லேப்பா!"

"ஐயோ... வசந்தா... அப்படியெல்லாம் பேசாதேம்மா! உனக்கே நல்லாத் தெரியும். நீகூட சொன்னியேம்மா. என்மேல் நம்பிக்கை இல்லையாப்பா... சித்ராவோட கல்யாணம் என் பொறுப்புன்னு சொன்னியே!"

"ஆமாம்... சொன்னேன். நீங்க அப்படியும் ஒப்புக்கலே. நான் தற்கொலைக்கு முயற்சி பண்ணினேன். என்னை சாகவிட்டிருக்கலாமே! ஏன் காப்பாத்தினீங்க? நீங்களே காப்பாத்தி, நீங்களே செலவு பண்ணி கல்யாணம் பண்ணிக் கொடுத்தீங்க. அதோட உங்க கடமை முடிஞ்சுபோச்சு. புவனேஸ்வரிக்குகூடத்தான் என்பேர்ல இருந்த பணத்தையெல்லாம் எடுத்து செலவு பண்ணி கல்யாணம் பண்ணி கொடுத்தீங்க. சாதாரண ஒரு டைலருக்கு இருபத்தஞ்சு பவுன் நகை, பைக் எல்லாம் தருவீங்க. என் புருஷன் தகுதிக்கும், கவுரவத்துக்கும் அறுபது பவுன் தரக்கூடாதா? போட்டதை திருப்பிக் கேக்கறீங்களே... உங்களுக்கு வெக்கமாயில்லே? என்னைப்பத்தி, உங்களைப்பத்தி இந்த வீட்லே என்ன நினைப்பாங்க? பொண்ணு வாழ்ந்திட்டிருக்கிறது பொறுக்காம, என் வாழ்க்கையை கெடுக்கணும்னு வந்திருக்கீங்களா? அருமை பெருமையாய் அழகா ஒரு குழந்தையை பெத்திருக்கேன். அதுக்கு அரை பவுன் தங்கம் வாங்கிப் போடணும்னாவது தோணிச்சா? என் மாமியார் என் எதிரே உங்களை கேவலமா பேசறப்ப எனக்கு எப்படி இருக்கும்? அதுக்கேத்த மாதிரிதானே நீங்களும் நடந்துக்கறீங்க?"

அவள் பேசப் பேச வாயடைத்துப்போயிருந்தனர் இருவரும்.

"பாருங்க... நான் இப்ப நிம்மதியா வாழ்ந்திட்டிருக்கேன். அதை கெடுத்திடாதீங்க! நீங்க நினைக்கிற மாதிரி வீட்டு நிர்வாகமோ, சாவிகொத்தோ இன்னும் என் கைக்கு வரலே! அதெல்லாம் என் மாமியார் செத்தபிறகுதான் வரும். அவங்க செத்தபிறகு வேணும்னா வாங்க. சித்ராவோட கல்யாணத்தை ஜாம் ஜாம்னு நடத்தி வைத்திறேன்" பேச்சில் கேலியும் கிண்டலும் இழையோடியது.

பெருமாளும் அம்சாவும் அதைக்கேட்டு ஆடிப்போய்விட்டனர்.

# 9

“அம்மா... நான் வர்றேம்மா... அப்பா நான் போயிட்டு வர்றேம்ப்பா!” சித்ரா கம்ப்யூட்டர் வகுப்பிற்கு சென்றாள்.

அவள் சென்றதும்தான் தாமதம் அம்சா அழ ஆரம்பித்தாள்.

“ஐயோ... என் பொண்ணோட வாழ்க்கைக்கு நானே எமனாயிட்டேனே... அப்பவே உங்க பேச்சை கேக்காம போயிட்டேனே... இந்த பாவியை மன்னிச்சிடுங்க!”

பெருமாள் மனைவியின் அருகில் வந்து கண்களை துடைத்தார்.

“நீ காரணமில்லே அம்சா! உன்னோட பாசம்தான் காரணம். இது இயற்கை! உன் இடத்திலே யாராயிருந்தாலும்... இதே மாதிரிதான் நடந்திருப்பாங்க. நீ மட்டும் என்ன செய்வே? வசந்தா தற்கொலை வரைக்கும் போறான்னா... நீயோ, நானோ பார்த்துக்கிட்டா இருக்க முடியும்? அவளை எப்படியாவது காப்பாத்தி கரையேத்திடணும்னுதானே பார்ப்போம்? அவளை கரையேத்த இருந்த ஒரே வழியை பயன்படுத்தி கரையேத்திட்டோம்! ஆனால், சித்ராவை நாமளே கடல்ல தள்ளிட்டோமே அம்சா!” சட்டென்று உடைந்துபோய் விசும்ப ஆரம்பித்தார் பெருமாள்.

“அழாதீங்க... உங்களை நான் அழவைச்சிட்டேனே... நீங்க அழறதை பார்க்கறதுக்காக நான் இன்னும் உயிரோட இருக்கிறேன்? தப்பு எம்மேலேதான்! பொண்ணுங்களை நான் வளர்த்தவிதம் தப்பு! எது வந்தாலும், எவ்வளவு பெரிய பிரச்சினை வந்தாலும் எதிர்த்து நின்னு போராடி ஜெயிக்கணும்னு சொல்லி வளர்த்திருந்தேன்னா... புவனேஸ்வரி தன்னையே எரிச்சி சாம்பலாக்கியிருக்கமாட்டா! அந்த குணசேகரனை கொன்னுட்டு ஜெயிலுக்கு போயிருப்பா!

வீண்பிடிவாதம், ஆடம்பரம்னு வளர்ந்த வசந்தாவை நான் ஆரம்பத்திலேயே அடக்கி வளர்த்திருந்தா... தன்னோட சந்தோஷத்துக்காக தங்கையோட எதிர்காலத்தை சூன்யமாக்கியிருக்க மாட்டா! தன் அறிவை சுயநலத்திற்காக குறுக்குத்தனமா பயன்படுத்தி இருக்க மாட்டா! வாழ்க்கைங்கறது... நாம வாழறதுக்காக மட்டுமில்லே... பிறரை வாழவிடறதுக்கும்தான்னு எடுத்துச் சொல்லி வளர்க்க தவறிட்டேங்க!

சித்ராவை பார்க்க பார்க்க... பகீர்னு இருக்குங்க அவள் அமைதியா இருக்கிறதை பார்த்தா அவளுக்குள்ளே பெரிய சூறாவளி



அடிச்சிட்டிருக்கோன்னு பயமா இருக்குங்க! கல்யாணம்னாலே முகத்தை சுளிக்கிறவகிட்டே கல்யாணம்ங்கறது சம்பிரதாயத்துக்காக மட்டுமில்லேம்மா... பொண்ணோட பாதுகாப்புகாகவும்தான்னு இனி எந்த முகத்தை வைச்சுக்கிட்டு சொல்லுவேன்? என் கல்யாணத்தை பத்தி பேசறதுக்கு உனக்கென்னம்மா தகுதியிருக்கு? எனக்குன்னு என்னம்மா சேர்த்து வைச்சிருக்கீங்கன்னு கேட்டா... நான் என்னங்க பதில் சொல்லுவேன்?” கணவனின் மார்பில் முகத்தை புதைத்துக் கொண்டு கதறினாள்.

“அழாதே அம்சா! இப்ப என்ன ஆகிப்போச்சு! யோசிச்சா... ஏதாவது வழி கிடைக்காமப் போகாது!”

“வசந்தாவையும் இதே வயித்துலதானே சுமந்து பெத்தேன்? அவள் மட்டும் ஏங்க இப்படி இருக்கிறா?”

“யோசிச்சு பார்த்தா... இதுல என்ன தப்பு இருக்குன்னுதான் கேட்பேன்! சுரேஷ் மாதிரியான மாப்பிள்ளை கிடைக்கிறது பெரிய அதிர்ஷ்டமில்லையா? ஏற்கனவே விஸ்வத்தால மனதளவில் பாதிக்கப்பட்டவளுக்கு, இப்படியொரு வாழ்க்கை வலிய அமையும்போது... அதை எப்படியாவது பயன்படுத்திக்கணும்னு பார்ப்பதுதான் புத்திசாலித்தனம்.”

“அதுக்காக இப்படியா? வீடு தேடிப் போய் கேட்டதுக்கு நம்மை முகத்துல கரியை பூசி அனுப்பிட்டாளே!”

“நாம போய் கேட்டதும் தப்புதானே அம்சா? அவள் இப்ப கணவன், குழந்தை, மாமனார், மாமியார்னு சந்தோஷமா வாழ்ந்துகிட்டிருக்கா! நகையோ, பணமோ, மாமியார் வீட்டுக்குத் தெரியாம தரமுடியுமா? அப்படி தெரிஞ்சுபோனா, அவளால தலை நிமிர்ந்து வாழத்தான் முடியுமா? நாம யோசிச்சிருக்கணும் அம்சா. அவசரப்பட்டுட்டோம்!”

“சித்ராவோட கல்யாணம் என் பொறுப்புன்னு எதுக்குங்க நம்மகிட்டே வாக்கு கொடுக்கணும்? ஏங்க... நான் ஒண்ணு சொல்லட்டுமா?”

“சொல்லு!”

“நான் மட்டும் போய் மறுபடி வசந்தாகிட்டே போய் கேட்டுப் பார்க்கட்டுமா?”

“அம்சா!” என்றார் அதட்டலாய். “நம்ம பொண்ணோட வாழ்க்கையை நாமே கெடுத்துடக்கூடாது. நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன்!”

“என்னங்க?”

“நான் வேலைக்கு போகப்போகிறேன்!”

"என்னங்க சொல்றீங்க?" அம்சா கணவனை கண்கள் விரிய பார்த்தாள்.

"ஆமாம் அம்சா! நான் இப்போ... ஏதாவதொரு வேலையை தேடியே ஆகணும். சித்ராவை கரைசேர்த்த கடமை எனக்கிருக்கு. அதுக்கு அப்படியொண்ணும் வயசாயிடல்லை. இன்னும் ஒண்ணு ரெண்டு வருசம் போகட்டும். அதுக்குள்ளே ஓரளவு சம்பாதிச்சிட மாட்டேனா? என் பொண்ணுக்கு இதனால... நல்ல வரன் வராமல் போகாதா?"

"ரெஸ்ட் எடுக்கவேண்டிய வயசுல மறுபடி வேலைக்குப் போகணும்ங்கறீங்களே!"

"நம்ம பொண்ணுக்காகத்தானே? இத்தனை நாளை நான் வீணடிச்சிட்டேன். இன்னையோட்தே வேலையை தேட ஆரம்பிக்கலாம்னு இருக்கேன்!"

"ஆனாலும் கடவுள் நம்மை ரொம்ப அதிகமாகவே சோதிக்கிறான். அப்புறம்... தனலட்சுமி வந்து கேட்டா நான் என்னங்க சொல்லட்டும்?"

"எதையாவது பேசி சமாளி! வேற வழி? எங்க பொண்ணுக்கு இப்ப நேரம் சரியில்லே... ரெண்டு வருசம் கழிச்சிதான் கல்யாணம் பண்ணணும்னு ஜோசியர் சொன்னார்னு... சொல்லிடு!"

"சரிங்க!"

ஒரு வார காலம்... வெயிலில் அலைந்து திரிந்து அதன்பிறகே... வேலை கிடைத்தது பெருமாளுக்கு.

பிரைவேட் கம்பெனியில் வாட்ச்மேன் வேலை. இந்த விசயம் எதுவும் சித்ராவுக்குத் தெரியாது. அப்பா மறுபடி வேலைக்குப் போவது தெரிந்தால் சண்டை போடுவாள் என்பதால் அம்சாகூட சொல்லாமல் மறைத்தான்.

அன்று...

தன்னுடன் கம்ப்யூட்டர் வகுப்பில் படிக்கும் ஒரு தோழியுடன் அவள் அழைப்பின்பேரில் அவள் வீட்டிற்குச் சென்றிருந்தாள் சித்ரா.

வெயில் மண்டைக்குள் நேராய் இறங்கியது.

"உஸ்ஸ்..." என்று பெருமூச்சுவிட்டபடி கர்ச்சீப்பால் முகத்தை துடைத்துக்கொண்டாள் சித்ரா.

"என்ன ரொம்ப ஸ்வெட்டிங்கா இருக்கா? கவலைப்படாதே... இதோ வீடு வந்தாச்சு. எங்க வீட்ல ஏசி இருக்கு. நிம்மதியா வந்து உட்கார்ந்துட்டு போ!" சிரித்தபடி தன் வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள்.

அரை மணி நேரம் அங்கிருந்துவிட்டு புறப்பட்டுவிட்டாள் சித்ரா.

பஸ் ஸ்டாண்டிற்கு செல்ல சற்று தூரம் நடக்கவேண்டியிருந்தது.



சித்ரா நடந்தாள்.

நடந்துகொண்டே... இருந்தவள் சட்டென்று சங்கிலி போட்டு இழுத்தது போல் நின்றாள்.

"யார் அது! அப்பா மாதிரியில்லை!" கண்கள் கூர்ந்து பார்த்தாள்.

செக்யூரிட்டி சர்வீஸ் அது! உள்ளே ஒரு கார் நுழைய... அவர் சல்யூட் அடித்தார்!

அப்பா... பெருமாள்தான்!

காக்கி நிற யூனிபார்ம்... வியர்வையில் நனைந்திருந்தது.

"அப்...பா!"

மிக அருகில் மகளின் குரலை கேட்டதும் திடுக்கிட்டு திரும்பிய பெருமாள் அவளை அங்கு எதிர்பார்க்கவில்லை.

"சித்ரா... நீ... நீ... எங்கேம்மா இந்த பக்கம்?" "என்னம்மா இது?"

"........?"

"என்னப்பா... என்ன கோலம் இது?"

"அதனாலென்னம்மா? நீ... போ... வீட்ல அம்மா தனியா இருப்பா?"

"இப்படி இந்த வெயில்ல, இந்த வேலையை செய்தே ஆகணும்னு என்ன அவசியம் இப்ப?"

"அவசியம் இருக்கு. நீ கிளம்பும்மா... வீட்லே வந்து பேசலாம்!"

"எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும். சொல்லுங்கப்பா... எதுக்காக இந்த வயசிலேயும் வெயில்ல நின்னு கஷ்டப்பட்டு சம்பாதிக்கணும்!"

"........?"

"எனக்கு தெரியும்ப்பா! எல்லாமே தெரியும். தனலட்சுமி ஆண்ட்டி எனக்கு அலையன்ஸ் கொண்டு வந்தது, நீங்களும் அம்மாவும் வசந்தா வீட்டுக்குப் போனது, அவள் விரட்டியடிக்காத குறையா பேசி அனுப்பினது எல்லாம் தெரியும். என் கல்யாணத்துக்காக பணம் சேமிக்க நீங்க இந்த உத்தியோகத்துக்கு வந்தது மட்டும் எனக்கு இப்போதான் தெரியும். அப்பா... நான் சொல்றதை கவனமா கேட்டுக்குங்க. எனக்கு கல்யாணமே வேண்டாம். எனக்கு அப்படியொரு எண்ணமே கிடையாது. எனக்காக நீங்க கஷ்டப்பட வேண்டாம். தவிர, உங்களுக்கு ஏற்கனவே ஆஸ்துமா கம்ப்ளைண்ட் இருக்கு. உங்களுக்கு அவசியம் ரெஸ்ட் தேவை! ஸோ, இப்பவே, இந்த நிமிடமே இந்த வேலையை ரிசைன் பண்ணிட்டு என்னோட வர்றீங்க..." என்றாள் சித்ரா தீர்மானமாக.

"சித்ரா... அவசரப்படாதே... நான் என்ன சொல்றேன்னா..."

"எதுவும் சொல்லவேண்டாம்ப்பா... கிளம்புங்க!"

வேறுவழியின்றி மகளின் பின்னே சென்றார் பெருமாள்.

மகளை கரையேற்ற எந்த வழியும் இல்லாமல் போனதே என்ற கவலை அம்சாவை அரித்தது. நாளுக்கு நாள் அவள் உடம்பு நலித்துக்கொண்டே வந்தது. பெருமாளிடமிருந்த கலகலப்பு இப்போது சுத்தமாய் காணாமல் போய்விட்டிருந்தது. இதற்கெல்லாம் காரணம் தன்னையே நொந்துக்கொண்டாள்.

திருமணமே வேண்டாம் என்று பிடிவாதமாய் இருக்கும் சித்ராவை பார்க்கும் போதெல்லாம் பயம் வந்து கழுத்தை நெரித்தது.

பெற்றோர் இருக்கும்வரைதான் இவளுக்கு பாதுகாப்பு! அதற்குப் பிறகு?

நாங்கள் உயிரோடு இருக்கும்போதே சித்ராவின் வாழ்க்கையில் அக்கறை இல்லாமல் இருப்பவள் வசந்தா! நாங்கள் இல்லாவிட்டால் பாரியணைத்துக்கொள்ளப் போகிறாளா என்ன? சித்ராவின் எதிர் காலத்தை நானே குழிதோண்டி புதைத்துவிட்டேனே!" ...ங்கி, உருகி... எலும்பும் தோலுமாய் மாறிக்கொண்டிருந்தாள்.

ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து பணிவிடை செய்துக்கொண்டிருந்த மனைவி படுக்கையில் விழுந்துகி...பது கண்டு நொந்துபோனார் பெருமாள்.

ஒரு ஆணின் வாழ்க்கையை முழுமையாக்குவதே மனைவிதானே? மனைவியை பொறுத்தவரையில் கணவன் ஒன்றுமறியா குழந்தை! எனக்கென எதையும் செய்துகொள்ளத் தெரியாது. பெற்ற தாய்க்கு பிறகு அந்த குறிப்பிட்ட வயதிற்கு பிறகு இன்னொரு தாயாக இருப்பவள்தான் மனைவி! இளமையில்கூட ஒரு ஆணுக்கு பெண்ணின் துணை அவசியமில்லை. முதுமை என்பது இரண்டாவது குழந்தை பருவம். அப்போது மனைவியின் துணை மிக மிக அத்தியாவசியம்.

அப்படிப்பட்ட மனைவி சக்தியெல்லாம் வடிந்து, உணர்வுகள் மங்கி படுக்கையே கதியாக இருப்பதைப் பார்த்ததும் பெருமாளுக்கு அச்சம் ஏற்பட்டது.

'அம்சா என்னைவிட்டுப் போய்விடுவாளோ?'

மனிதனின் உள்ளுர்ணவு என்பது விதியின் கண்ணாடி போலும். நடக்கப்போவதை உணர்ந்துகொள்ளும் அபூர்வசக்தி உள்ளுணர்விற்கு உண்டு.

ஒருநாள் அம்சா... அவர்களையெல்லாம் விட்டு பிரிந்துப் போய்விட்டாள்.

# 10

அம்மா இறந்தபிறகு பெருமாள் நடைபிணமாகிவிட்டார் என்று கூறலாம். அவள் மரணம் மனதளவில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தி உடலளவில் இன்னும் பாதித்தது.

அம்மாவின் அகால எதிர்பாராத... மரணத்தால் சித்ரா திகைத்துபோய்விட்டாள். கண்ணை கட்டி காட்டில் விட்டதுப்போல தடுமாறினாள். குடும்ப சுமை முழுக்க தன் தோளில் ஏறி அமர்ந்து விட்டதை உணர்ந்தாள். சுருட்டிப் போட்ட துணியாய் கிடந்த அப்பாவை ஆறுதல்படுத்துவதா... போட்டது போட்டபடி விடைபெற்றுவிட்ட அம்மாவின் குடும்ப பொறுப்பை ஏற்று திறம்பட நடத்துவதா?

சித்ராவின் இயல்பான தன்னம்பிக்கை மிகுந்த குணம்... தன்னைத்தானே ஆறுதல்படுத்தி, சுதாரித்துக்கொண்டு, அப்பாவையும் அந்த குழியிலிருந்து கைகொடுத்து காப்பாற்றினாள். வசந்தா தாயின் மரணத்திற்கும், காரியத்திற்கும் உறவுக்காரர்களைப் போல் தலைகாட்டி விட்டு சென்றதோடு சரி!

அந்த மாதத்தோடு சித்ராவின் கம்ப்யூட்டர் படிப்பும் நிறைவு பெற்றதால் வேலை தேடுவதில் இறங்கினாள்.

அவளுடைய நல்ல நேரமோ... என்னமோ... உடனடியாக வேலை கிடைத்தது.

பெருமாளுக்கு தன் மகள் வேலைக்கு செல்வது பிடிக்கவில்லை. சித்ராவின் பிடிவாதத்தின் முன் அவர் பேச்சு எடுபடவில்லை.

பெருமாளுக்கு வேதனையில் மனசு சுருங்கிப் போயிற்று.

என் கடைசி மகளுக்கு செய்யவேண்டிய கடமையை செய்ய விடாதபடி மோசமான நிலைக்கு என்னை ஆளாக்கிவிட்டாயே கடவுளே! கல்யாணமாகி புருசனோடு சந்தோஷமாய் வாழ்க்கை நடத்தவேண்டியவள்... தகப்பனுக்காக... உழைத்துக் கொட்டுகிறாள்.

எங்களுக்கு எப்போது விடிவுகாலம் பிறக்கும்? இனி, என் பென்ஷன் பணத்தை அப்படியே சித்ராவின் பெயரில் பேங்கில் போட்டுவிட வேண்டும். ஒன்றுமே இல்லாமலிருப்பதைவிட ஓரளவிற்காவது சேர்த்து வைக்கலாமே! அவளுக்கென்று ஒரு நல்லகாலம் வராமல் போய்விடுமா என்ன?" அன்றிலிருந்து அவர் மகளுக்காக பணத்தை சேமிக்க ஆரம்பித்தார்.



பழைய நினைவுகளிலிருந்து விடுபட்ட சித்ரா... நெடியதொரு பெருமூச்சை வெளியிட்டாள். சுவர்கடிகாரம் மூன்று அடித்துவிட்டு ஓய்ந்தது. உறக்கம் அவள்கிட்டே வந்து எட்டிப் பார்க்ககூட அஞ்சியது.

சற்றே தலை உயர்த்தி அப்பாவைப் பார்த்தாள். அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். வாயை அகலத் திறந்து மூச்சுவிட்ட சத்தம் இங்கே கேட்டது.

'அப்பாவின் உடல் நலிந்துகொண்டே வருகிறது. ஒருநாள் அவரும் என்னைவிட்டு போய்விடுவாரோ?' கேள்வி எழுந்தும்... திடுமென அச்சம் நெஞ்சிற்குள் புகுந்தது.

'அப்படியானால் அதற்குபின் நான்?'

சித்ராவிற்கு விடிய விடிய உறக்கம் வரவேயில்லை.

பரத் காரை நிறுத்திவிட்டு இறங்கினான்.

"வாப்பா... என்ன இவ்வளவு லேட்டு?" சுந்தரம் உரிமையுடன் வரவேற்றார்.

"இல்லே சித்தப்பா... ஒரு பிரண்டை பார்க்க நங்கநல்லூர்வரை போயிருந்தேன். அதான் லேட்டாயிடுச்சு...!"

"சரி... சரி... முதல்ல போய் சாப்பிடு!"

"பிரண்ட் வீட்லேயே சாப்பிட்டாச்சு சித்தப்பா!"

"நல்லபிள்ளைதான் போ! உனக்காக உங்க அண்ணி விதவிதமா சமைச்சி வைச்சிருக்கா! அவள் மனசுதான் கஷ்டப்படும்."

"அண்ணியை நான் சமாதானப்படுத்திக்கறேன்!" என்று சிரித்தபடி உள்ளே ஓடினான்.

"பரத்... இன்னொரு முக்கியமான விஷயம் சொல்ல மறந்திட்டேன்!"

"என்ன சொல்லுங்க?"

"எங்க அண்ணன்... அதான்ப்பா... உங்கப்பா ரெண்டு மணி நேரம் முன்னாடி போன் பண்ணியிருந்தார்."

"அடடா..."

"மறுபடி பேசறேன்னு சொல்லியிருக்கார்! நீ எங்கேயும் போயிடாதேப்பா!"

"இல்லேப்பா... எங்கேயும் போகமாட்டேன். அப்பா... வேற ஏதாவது சொன்னாரா?"

"உன் சித்திக்கிட்டே ஏதோ முக்கியமான விசயம் பேசிட்டிருந்தார்... அவள்கிட்டே போய் கேளு!"

"என்னப்பா பரத்... மதியம் சாப்பாட்டுக்குக்கூட வராம எங்கேப்பா போயிட்டே? உங்கப்பா போன் பண்ணினாரே!" என்றபடி

எதிர்ப்பட்டாள் கமலா.

"சித்தப்பாவும் சொன்னார்! அப்பா என்ன சொன்னார் சித்தி?" ஆர்வமாய் கேட்டான் பரத்.

"உங்கப்பா உன்னைப்பத்திதாம்பா ரொம்ப கவலைப்படறார்! உனக்கொரு கல்யாணம் பண்ணி பார்க்கணும்னு ஆசைப்படறார்! அந்த பொறுப்பையும் என்கிட்டே விட்டிருக்கிறார். நல்ல, அழகான, படிச்ச குடும்பத்துப் பொண்ணா பார்த்து வைச்சிட்டு... ஒரு போன் பண்ணுங்க... கையோட சட்டுபுட்டுனு என் பையனுக்கு கல்யாணம் பண்ணி லண்டனுக்கு கூட்டிட்டுப் போயிடறேன்னு சொன்னார்!"

பரத் பதிலேதும் கூறாமல் சிரித்தான்.

"நம்ம ஊர்ல பொண்ணுங்களுக்கா பஞ்சம்? ஏதோ, என் பிள்ளைதான் லவ்வு, கிவ்வுன்னு பஞ்சப்பராரி வீட்லேர்ந்து ஒரு கழுதையை மருமகளா கூட்டிட்டு வந்துட்டான். நீயாவது... நம்ம கவுரவத்துக்கு ஏத்த மாதிரியான பொண்ணா பார்த்து கல்யாணம் பண்ணிக்கணும். நம்ம ஊர்ல... அதுவும் நம்ம உறவுமுறையில பொண்ணுக்கா பஞ்சம்? சூப்பரா ஒரு பொண்ணை பார்த்திடமாட்டேன்?" என்றாள் கமலா.

பரத்திற்கு லண்டனில் பார்த்த அந்த பெண்ணின் முகம் நினைவிற்கு வந்தது.

"யாரவள்? எங்கிருக்கிறாள்? பெண்ணே உன் பெயரென்ன? வாழ்ந்தால் உன்னோடல்லவா வாழவேண்டும்? நீ யார்? உன் மனதில் இதுவரை எந்த ஆணும் நுழையாமலிருக்க வேண்டுமே... என்று உன்னை பார்த்த நாள் முதலாய் ஜெபிக்க வைத்த பெண்ணே... உன்னிடம் நான் பேசவேண்டும். இதுநாள் வரை எட்டயிருந்து கவனித்த நான் நாளை முதன் முதலாய் உன்னிடம் பேசப்போகிறேன்!" தீர்மானித்துக் கொண்ட பரத்... நாளைய மாலைக்காக காத்திருந்தான்.

"என்னப்பா பரத்? நான்பாட்டிற்கு பேசிக்கிட்டே இருக்கேன்! நீ ஒண்ணும் சொல்லமாட்டேங்கிறே? உங்கப்பா சொன்னமாதிரி... உனக்கு பொண்ணு பார்க்க ஆரம்பிக்கட்டுமா?"

"இப்ப வேணாம் சித்தி! என்னோட கவனமெல்லாம் பிசினஸ்லதான் இருக்கு. நான் சொல்லும்போது ஏற்பாடு பண்ணினா போதும்!"

"என்னங்க இவன் இப்படி சொல்றான்?" என்று கணவனை பார்த்துக் கேட்டாள்.

"யார் கண்டது? லண்டன்லேயே வெள்ளைக்காரி எவளையாவது லவ் பண்றானோ, என்னவோ!" என்றார் சுந்தரம்.

"ஐயையோ... அப்படியெல்லாம் எதுவுமே இல்லே சித்தப்பா..." அலறினான் பரத்.

"அப்புறம் ஏனப்பா... தள்ளிப் போடறே? நான்பாட்டுக்கு பொண்ணு



பார்க்க ஆரம்பிச்சிடறேன். நீ சொல்லும்போது கல்யாணம் வைச்சுக்கலாம். ஏங்க... என் அண்ணன் பொண்ணு ஸ்வேதா நம்ம பரத்துக்கு பொருத்தமாயிருப்பா இல்லே?"

"உனக்கு பிடிச்சிருந்தா நான் வேண்டாம்னா சொல்லப்போகிறேன்?" என்றார் சுந்தரம்.

அதற்குமேல் அங்கு நிற்க பிடிக்காமல் உள்ளேப் போனான் பரத். வசந்தாவுடன் சுரேஷ் நின்றிருந்தான்.

"வாங்க!"

"என்னப்பா எங்கே போயிட்டே? உனக்கு பிடிச்ச சிக்கன் ரோஸ்ட் பண்ணி வைச்சிருந்தா வசந்தா!"

"சாரி சுரேஷ்... சாரி அண்ணி!" என்று பவ்யமாக கையெடுத்து கும்பிட்டான் பரத்.

இருவரும் சிரித்துவிட்டனர்.

பரத்தின் தந்தையும், சுந்தரமும் ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகள். பரத் இந்தியா வரும்போதெல்லாம் இங்கு தங்குவதுதான் வழக்கம்.

"பரத்... லண்டன்லேர்ந்து போன்!" சுந்தரம் குரல் கொடுக்க... ஓடிப்போய் மல்லாத்தி வைக்கப்பட்டிருந்த ரிசீவரை எடுத்தான்.

"ஹலோ... பரத் ஹியர்!"

"சார்... உங்க மானேஜர் பிரிட்டோ பேசறேன்!"

"என்ன பிரிட்டோ?"

"சாரி சார்! உங்க பாதருக்கு சிவியர் ஹார்ட் அட்டாக்..."

"வாட்...?" ரிசீவர் கை நழுவ முயன்றது அதிர்ச்சியில்.

"ஆஸ்பத்திரியில்தான் இருக்கிறார். நீங்க உடனே வந்தா... நல்லது!"

"உடனே... எப்படியாவது வந்துடறேன். டாடிய கவனமா பார்த்துக்குங்க பிளீஸ்!" கைகள் நடுங்க... ரிசீவரை வைத்த பரத்திற்கு எக்கசக்கமாய் வியர்த்தது.

## 11

கமலா கவலைதோய்ந்த முகத்துடன் டாக்டரையே பார்த்துக் கொண்டிருந்தாள். டாக்டர் வெங்கட்டை தீவிரமாய் பரிசோதித்துக் கொண்டிருந்தார். வெங்கட்டின் முகம் வேதனையில் வியர்த்துப் போயிருந்தது. அந்த அறையில் சுந்தரம், சுரேஷ், வசந்தா... அனைவரும்

படபடக்கும் இதயத்துடன் டாக்டர் என்ன சொல்லப்போகிறாரோ என்று காத்திருந்தனர்.

"முடியலே டாக்டர்... என்னால் வலி தாங்கமுடியலே டாக்டர் என்னை ஊசி போட்டு கொன்னுடுங்க டாக்டர். பிளீஸ்!" லேசாய் மூச்சுவாங்க கண்கள் துளிர்க்க பேசினான் வெங்கட்.

"ஈஸி... ஈஸி... மிஸ்டர் வெங்கட்! டோன்ட் வொர்ரி... உங்களுக்கு ஒண்ணுமில்லே... எல்லாம் நார்மலாகவே இருக்கு! நல்லா ரெஸ்ட் எடுத்தாலே போதும்... நான் தர்ற மெடிஸின்ஸை தொடர்ந்து சாப்பிட்டு வந்தாலே போதும்... ஒரே மாசத்திலே ஜம்முனு எழுந்து உட்கார்ந்துடுவீங்க! பழையபடி பிரண்ட்ஸோடு போட்டி போட்டுக்கிட்டு பைக்ல பயங்கர ஸ்பீடுல போகலாம்... ஸ்விம் பண்ணலாம்... உங்களுக்கு பிடிச்ச மட்டனை சாப்பிடலாம்!" டாக்டர் ஆறுதலாய் அவர் கையில் தட்டி கொடுத்தபடி சொன்னார்.

"பொய் சொல்லாதீங்க டாக்டர்! என் உடம்பை பத்தி உங்களைவிட எனக்குத்தான் தெரியும்" என்றான் வெறுமையாக.

"நீங்களாக எதையாவது கற்பனை பண்ணிக்கிட்டு பேசக்கூடாது. டேக் ரெஸ்ட் மிஸ்டர் வெங்கட்!" என்றவர் கண்களால் சுந்தரத்திற்கும், கமலாவிற்கும் சைகை செய்து அழைத்துவிட்டு அறையைவிட்டு வெளியே வந்தார்.

இருவரும் டாக்டர் பின்னேயே சென்றனர்.

வெங்கட் சுரேஷிற்கு அடுத்து பிறந்தவன். பிறப்பிலேயே அவன் இதயத்தில் ஓட்டை இருந்திருக்கிறது. ஆனால், தெரிய வாய்ப்பில்லாமல் போனது. கடந்த ஐந்து வடத்திற்கு முன்புதான் வாயில் நுரைதள்ள மயங்கி விழுந்தான் வெங்கட்.

பதறிப்போன பெற்றோர் அவனை உடனடியாக அப்பல்லோ மருத்துவமனையில் அட்மிட் செய்தனர். பலவித பரிசோதனைகள் முடிந்தபிறகுதான் தெரியவந்தது வெங்கட்டின் இதயத்தில் ஓட்டை இருப்பது. அதுவும் இதுநாள்வரை கவனிக்கப்படாமல் இருந்ததால் ஓட்டையின் அளவு பெரிதாகியிருந்தது. ஆப்பரேஷன் பண்ணினால் கூட உயிர் பிழைப்பது கடினம் என்று டாக்டர்கள் கைவிரித்து விட்டனர்.

ஆயினும் மருந்து மாத்திரைகளை உட்கொண்டு வந்ததால் அவனால் நடமாட முடிந்தது. ஆனால், ஒருநாள் நன்றாயிருந்தால் மறுநாள் படுத்துவிடுவான். வலியில் தூங்காமல் விழித்திருப்பான். முனகுவான். இன்று... அவன் வலி வழக்கத்திற்கு அதிகமாகவே இருந்ததால் அனைவரும் பயந்துபோயினர்.

டாக்டர் ஜெயச்சந்திரன் அவர்களை தயக்கத்துடன் ஏறிட்டார்.



"நீங்களெல்லாம் மனதை திடப்படுத்திக்கணும்!"

"டாக்டர்... என்ன சொல்றீங்க?" கமலாவின் கண்களில் கண்ணீர் மளக்கென்று வெளிவந்தது. சுந்தரத்தின் கண்களிலும் கண்ணீர்.

"சாரி மிஸ்டர் சுந்தரம். உடல்நிலை ரொம்ப மோசமாயிருக்கிறது. மெடிசின்ஸை வேளை தவறாமல் எடுத்துக்கொண்டாலும் அதிகபட்சம் மூன்று மாதமோ, நாலு மாதமோதான் அவர் உயிரோடு இருப்பார்!"

"ஐயோ... கடவுளே!" முகத்தில் அறைந்துகொண்டு அழுதாள் கமலா.

"இருபத்தஞ்சு வயசில் நோய்க்கு தாரைவார்த்து தரவா அவனை சுமந்தேன்? என் அழகுப் பிள்ளைக்கு கடவுள் அல்பாயுசு கொடுத்திட்டானே? நான் என்னென்னவோ கனவு கண்டேனே! அவனுக்கொரு கல்யாணத்தை பண்ணி... அவனோட பிள்ளையை என் மடியில் போட்டு கொஞ்சணும்னு ஆசைப்பட்டேனே! என் பிள்ளை மனசிலே என்னென்ன ஆசையிருக்கோ? ஐயோ... வெங்கட்..."

அந்த தாயின் மனம் பரிதவித்தது. அவளை தன் வார்த்தைகள் எந்த விதத்திலும் ஆறுதல்படுத்தாது என்பதை புரிந்துகொண்ட டாக்டர் வெளியேறினார்.

அன்று வீட்டில் யாருமே சாப்பிடவில்லை.

"சுரேஷ்!" கமலா அழைத்தாள்.

"என்னம்மா?"

"நம்ம வெங்கட்டுக்கு உடனடியா ஒரு கல்யாணம் பண்ணியாகணும்! அதுக்கு ஏற்பாடு பண்ணு!"

"வெங்கட்டுக்கு கல்யாணமா? என்னம்மா சொல்றே?" சுரேஷின் முகத்தில் அதிர்வலைகள்.

சுரேஷிற்கு மட்டுமல்ல, சுத்தரத்திற்கும், வசந்தாவிற்கும்கூட அதிர்ச்சியாயிருந்தது.

"என்ன கமலா இது? வெங்கட்டோட நிலமை தெரிஞ்சிருந்தும் அவனுக்கு கல்யாணம் பண்ணணும்ங்கறே?" என்றார் சுந்தரம்.

"இதப்பாருங்க... வெங்கட் வயசுப் பிள்ளை... அவன் மனசிலேயும் கல்யாணம் பண்ணிக்கணும், குழந்தை பெத்துக்கணும்னு ஆசைப்பட மாட்டானா?"

"அதுக்காக?"

"என் பிள்ளை நம்மளையெல்லாம்விட்டுப் போகப்போறது முடிவாயிடுச்சு! ஆனா, என் பிள்ளையோட வித்து இந்த மண்ணுல

உயிரோட விளையாடுறும். வெங்கட்டோட சொத்தை அனுபவிக்க றும். அதனால், உடனடியா அவனுக்கு நாம கல்யாணம் பண்ணிடி ஆகணும்!"

"அம்மா... வெங்கட் மேலே இருக்கிற பாசத்தால் நீ தப்பா முடிவெடுக்கிறே! உனக்கு ஒரு பேரப் பிள்ளை கிடைக்கலாம். ஆனா ஒரு பெண் இளமையிலேயே விதவையாகிடுவாம்மா! அந்த பாவம் நமக்கு வேணாம்மா!"

"உடனே என் பிள்ளை பாவம்னு விட்டுவைக்கலியே! கடவுளுக்கு இல்லாத கருணை... மனுஷியான என்கிட்டம் எதிர்பார்க்கக்கூடாது! இந்த விசயத்திலே நான் உறுதியா இருக்கிறேன் சுரேஷ்! பெத்த பிள்ளையோட மரண தேதியை கையிலே வைச்சுக்கிட்டு வேதனையிலே என் நெஞ்சே வெடிச்சிடற மாதிரி இருக்கு. இப்படியொரு நிலைமை... எந்த தாய்க்கும் வரக்கூடாது! என் தவிப்பை புரிஞ்சுக்க சுரேஷ்!"

சுரேஷ் ஆழ்ந்த பெருமூச்சொன்றை வெளியிட்டான்.

"சரி... உன் தவிப்பு எங்களுக்குப் புரியுது. ஆனா, வெங்கட்டோட நிலைமை தெரிஞ்சு... எந்தப் பொண்ணு தைரியமா கல்யாணம் பண்ணிக்க சம்மதிப்பா?"

"தெரிஞ்சாதானே? தெரியாமலிருந்தா?"

"அம்மா... என்ன சொல்றீங்க?"

"ஆமா... வெங்கட்டை பத்தின உண்மையை சொல்லாம மறைச்சு கல்யாணம் பண்ணிடலாம்! நம்ம தகுதிக்கு குறைச்சலான வீட்டிலே பொண்ணு பார்க்கலாம். அப்பதான்... அவங்க அதிகம் கேள்வி கேக்கமாட்டாங்க! யோசிக்க நேரமில்லே சுரேஷ். சீக்கிரமா... முடிஞ்சா ஒரே வாரத்திலே என் பிள்ளையோட கல்யாணம் நடந்தே ஆகணும்!" என்றாள் தீர்மானமாய்.

வசந்தாவிற்கு சட்டென்று ஒரு யோசனை பளிச்சிட்டது.

**கா**ய்கறி கூடையுடன் நடந்து வந்துகொண்டிருந்தார் பெருமாள். முற்பகல் வெயில் தகித்தது. நடந்துகொண்டே இருக்கையில் பட்டென இடதுகாலின் செருப்பு அறுந்தது.

"ச்சட்... இதுவேற தொல்லை!" என்றபடி செருப்பை கழற்றி இன்னொரு கையில் சுமந்தபடி நடந்தார். கால்கள் நெருப்பில் நடப்பது போல் எரிந்தது.

எப்படியோ சிரமப்பட்டு நடந்து தெருவிற்குள் நுழைந்தார்.

நுழையும்போதே கவனித்தார். தன் வீட்டு வாசலில் கார் ஒன்று நின்றிருப்பதை.



'யாராயிருக்கும்? ஒருவேளை வசந்தாவோ?' விரைவாய் நடையை எட்டிப்போட்டார்.

அவருடைய யூகம் சரியாகவே இருந்தது.

இவரைப் பார்த்ததும் வண்டியிலிருந்து இறங்கினாள் வசந்தா.

"வாம்மா!" ஆச்சரியமுடன் வரவேற்றபடி அவசரமாய் வீட்டின் கதவைத் திறந்தார்.

"நலமாயிருக்கீங்களாப்பா?" வசந்தாவின் குரலிலும், முகத்திலும் வழக்கத்தைவிட கூடுதல் உற்சாகம்.

பெருமாளின் ஆச்சரியம் இன்னும் அதிகமானது.

"நல்லாயிருக்கேன்மா... உட்காரு. நீ மட்டும்தான் வந்தியா? மாப்பிள்ளை வரலியா?"

"இல்லேப்பா... அவர் பிஸினஸ்ல பிஸியா இருக்கார். அப்பா... என்மேல் எந்த கோபமும் இல்லையே?"

"எதுக்கும்மா?"

"நான் உங்களையும், அம்மாவையும் அன்னைக்கு அப்படி பேசியிருக்கக்கூடாது!"

"இல்லேம்மா... தப்பு எங்க பேர்லதான்! புகுந்த வீட்டுக்கு போயிட்ட பொண்ணுகிட்ட நாங்க உதவியை எதிர்பார்த்தது சரியில்லேம்மா... பாவம்... நீ என்ன செய்வே?"

"அப்பா... உங்களுக்கு பெரிய மனசு! அதனால் என்னை மன்னிச்சிடுங்க! நான் அப்படி பேசியிருக்கக்கூடாதுப்பா! சித்ரா என் தங்கை. அவளுக்கு ஒரு வாழ்க்கையை அமைச்சுத் தர்றது என் பொறுப்பு!"

"வசந்தா... என்னம்மா சொல்றே?" பெருமாளுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

"ஆமாம்ப்பா... அது விசயமாகத்தான் பேச வந்திருக்கேன்."

"நீ... நீ என்ன சொல்றே?"

"சித்ராவை தேடி ஒரு நல்ல வாழ்க்கை வந்திருக்கு. நீங்களும் சித்ராவும் சம்மதிச்சா அவள் மகாராணி மாதிரி வாழப்போறா. என் மச்சினர் வெங்கட் தெரியுமில்லையா? அவர் ஜாதகப்படி இன்னும் பத்து நாளில் கல்யாணம் நடந்தாகணுமாம். தவறினா... ஏழு வருஷத்துக்கு பண்ணவே கூடாதாம். வீட்டுலே ஏகப்பட்ட வரன் பார்க்கிறாங்க. ஆனா, கட்டினா சித்ராவைதான் கட்டுவேன்னு ஒத்தக்கால்ல நிக்கறார். என் மாமியாரும் வேற வழியில்லாம சரின்னுட்டாங்க. நீங்க எதுவும் போட வேணாம். பத்தே நாளில் உங்களால் ஆயிரம் ரூபாய்கூட புரட்ட முடியாதே!

கல்யாண செலவு உட்பட எல்லாமே அவங்களே பார்த்துப்பாங்க என்னப்பா சொல்றீங்க?"

"நி... நிஜமாவா சொல்றே?" நம்பமுடியாத ஆனந்தத்தில் நெஞ்சடைத்தது பெருமாளுக்கு.

## 12

"முடியாது... முடியாது... முடியாது!" சித்ரா ஆவேசமாய் கத்தினாள்.

"சித்ரா... ஆத்திரப்படாதேம்மா! நிதானமா யோசி!" பெருமாள் தயவாய் கேட்டார்.

"அப்பா... என்னை தயவுபண்ணி விட்ருங்கப்பா! எனக்கு கல்யாணத்துல கொஞ்சமும் விருப்பமில்லே!"

"சிறுபிள்ளைத்தனமா பேசாதேம்மா! நான் உயிரோட இருக்கிற வரைதான் உனக்கு பாதுகாப்பு. கடவுள் எனக்கு சாகா வரம் எதுவும் கொடுக்கலேம்மா! என் பொண்ணை அனாதையா விட்டுட்டுப் போனா... என் கட்டை வேகுமா?"

"அப்பா... எதுக்கு எந்த வார்த்தையை பேசறீங்க? என்னைப் பொறுத்தவரை தாலிக்கயிறுங்கறது தூக்குகயிறு மாதிரி! நான் என்ன தப்பு பண்ணினேன்... தண்டனையை அனுபவிக்க?"

"அம்மாடி...!" என்றபடி பெருமாள் சித்ரா எதிர்பார்க்காத தருணத்தில் சட்டென அவள் காலில் விழுந்தார்.

நெருப்பை மிதித்தவளாய் பதறிப்போனாள் சித்ரா.

"அ... அப்பா... என்ன காரியம் பண்ணிட்டீங்க?"

"எனக்கு வேற வழி தெரியலே தாயி! என் பொண்ணை மாலையும் கழுத்துமா பார்க்கணும்னு எனக்கு ஆசை இருக்காதா? இந்த ஆசை நிறைவேறாதாங்கற ஏக்கத்தோட போய் சேர்ந்தா உங்கம்மா! அதே ஏக்கத்தோட என்னையும் வழியனுப்பி வைக்கப்போறியா?"

"அ...ப்...பா!"

"கடவுளா பார்த்து அருமையா ஒரு வழிகாட்டி இருக்கார். அதை மறுக்கறது அறிவிலித்தனம். எனக்காக, இந்த கையாலாகாத அப்பனுக்



காக... இந்த கல்யாணத்துக்கு சம்மதிக்கக்கூடாதா சித்ரா?"

"........."

"இதுக்கு மட்டும் நீ சம்மதிக்கலேன்னா... நான் தற்கொலை பண்ணிக்க மாட்டேன்ம்மா! ஆனா, தன்னாலே என் ஆவி பிரிஞ்சிடும்!"

"அ...ப்...பா!"

"என்னம்மா சொல்றே?"

அதற்குமேல் என்ன சொல்ல முடியும்? சாத்தான் பாச உருவில், பெருமாளை கைப்பாவையாக்கு வேதம் ஓதும்போது மறுக்கவா முடியும்? வேதனையுடன், கொஞ்சமும் விருப்பமின்றி சரியென தலையசைத்தாள் சித்ரா.

மிக எளிமையாய் வடபழனி கோவிலில் வைத்து கல்யாணம் நடந்தது.

"என்னப்பா... வீட்டுக்கு கடைசிப் பிள்ளை, செல்லப் பிள்ளை... அவரோட கல்யாணத்தை ரொம்ப சிம்பிளா நடத்தறாங்களா... வேற ஒண்ணுமில்லேப்பா... வெங்கட் ஜாதகப்படி கோவில்ல பண்ணணுமாம். ஆடம்பரமாய் செலவு பண்ற பணத்தை வைச்சு அன்னதானம் பண்ணணுமாம். மூணு மாசம் கழிச்சு ரிசப்ஷன் வைச்சுக்கலாம்னு என் மாமியார் சொல்லிட்டாங்க! வசந்தா, அப்பா சந்தேகப்படுமுன் அதை நிவர்த்தி செய்துவிட்டாள்.

"நல்ல விசயம்தானேம்மா! அநாவசிய செலவு எதற்கு? அந்தப் பணத்தைக் கொண்டு ஆயிரம் வயிற்றுக்கு அன்னதானம் பண்றது எவ்வளவு புண்ணியம் தெரியுமா? எப்படியோ... சித்ராவுக்கு நான் நினைச்சே பார்க்காத இடத்திலே கொண்டுபோய் சேர்த்துட்டே... உன்னை நினைச்சா ரொம்ப பெருமையா இருக்கும்மா!" பெருமாள் தழுதழுத்தார்.

வசந்தா எச்சிலை கூட்டி விழுங்கிக்கொண்டாள்.

'உண்மை தெரிந்தால் என்ன நினைப்பார்?'

'உண்மை தெரிந்தால் என்ன நினைப்பார்?' இல்லை — 

சுரேஷிற்கு இந்த திருமணத்தில் கொஞ்சம்கூட விருப்பமில்லை. அதிலும் சித்ராவை வெங்கட்டிற்கு திருமணம்-செய்து வைக்க துளியும் விருப்பமில்லை.

'பாவம்... அமைதியான, அழகான பெண்! அவள் கழுத்தில் கட்டப்போகும் தாலி ஏறிய வேகத்தில் இறங்கிவிடும் என்று தெரிந்தும்... தன் தங்கையையே பலியாக்க எப்படி மனம் துணிந்தது?

சுரேஷ் மனைவியிடம் கேட்டேவிட்டான்.

"இதிலென்னங்க தப்பு இருக்கு? உங்கம்மாவை பொருத்தவரையில்

வெங்கட்டுக்கு கல்யாணமாகணும். ஒரு பேரக் குழந்தை கொஞ்சணும். எங்கப்பாவை பொருத்தவரையில் சித்ரா கழுத்துலே தா ஏறணும். கையிலே காலணா இல்லை! எப்படி கரையேத்துவா சித்ராவை பொருத்தவரையில் அவளுக்கு கல்யாணம் பண்ணிக் எண்ணமே இல்லை. வெங்கட் இறந்தால்கூட அவளை ரொம் பாதிக்கும்னு சொல்ல முடியாது. அப்பாவுக்கு வயசாகிப்போச் உடம்புக்கு முடியல. எவ்வளவு நாள் உயிரோட இருக்கப்போகிறா அப்பாவுக்கு பிறகு சித்ராவுக்கு பாதுகாப்பா நாலு சுவர் வேண்டாம அது இந்த வீட்டு சுவரா இருந்துட்டு போகட்டுமே! இதைவி பாதுகாப்பான இடம் வேற அவளுக்கு கிடைக்குமா? நான் நல்ல யோசிச்சுதான் இந்த நல்ல முடிவை எடுத்தேன்!"

'இது நல்ல முடிவா?' மனைவியை புதிதாய் பார்த்தான். அப்போ அவள் கோரப் பற்களும், அகண்ட கண்களும், விரித்து போட் கூந்தலுமாய் ராட்சஷி மாதிரி காட்சியளித்தாள்.

கமலாவுக்கு சித்ராவை மருமகளாக்கிக்கொள்ள கொஞ்சமு விருப்பமில்லை.

"போயும் போயும் அந்த குடும்பத்திலேர்ந்தா?" என்று முகப கருக்கினாள்.

"மூணு மாசம் வாழப்போகிற பொண்ணுக்கு... குலம், கோத்திரம், சுவாவம், அந்தஸ்து எல்லாம் பார்த்துக்கிட்டிருக்கப் போறியா?" சுந்தரம் மனைவியிடம் உருப்படியாய் கேள்வி கேட்டார்.

கமலா வாயை மூடிக்கொண்டாள்.

வெங்கட் பக்கத்தில் தலைகவிழ்ந்து அமர்ந்திருந்த சித்ராவை அடிக்கடி ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டிருந்தான்.

நிஜமாகவே அவன் தனக்கு திருமணமாகும் என்று எதிர்பார்க்கவில்லை. அதுவும் சித்ராவோடு. நிஜமாகவே சித்ராவை சுரேஷ் திருமணத்தில் பார்த்ததிலிருந்தே மிகவும் பிடித்துவிட்டிருந்தது.

'எவ்வளவு அடக்கமாய், அழகாயிருக்கிறாள்? இவள் எனக்கு மனைவியாக வாய்த்தால் எப்படியிருக்கும்?' என்று ஆசைப்பட்டிருக்கிறான். ஆனால், தனக்குள்ள நோய் காரணமாக அந்த ஆசையை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டான்.

'என்னால் எந்தப் பெண்ணின் வாழ்க்கையும் பாழாகக்கூடாது. இந்த ஜென்மத்தில் திருமணம் என்பதே என் வாழ்வில் கிடையாது!' என்று.

ஆனால், அம்மா திடுதிப்பென்று வந்து, "உனக்கு அடுத்த வாரம் கல்யாணம் வெங்கட்!" என்றபோது அதிர்ந்துபோனான்.

"என்னம்மா... கிண்டல் பண்றியா? என் உடல்நிலையைப் பற்றி தெரிஞ்சும் எனக்கு கல்யாணம் பண்ண நினைக்கிறியே... நான் நாட்களை எண்ணிக்கிட்டிருக்கேன் அம்மா!" என்றான் குரல் உடைந்து.

"ராசா... அப்படி சொல்லாதேப்பா... டாக்டர் சொல்லிட்டார்... உன் உடம்புக்கு ஒண்ணுமில்லே! நீதான் எதையோ கற்பனை பண்ணி பயந்திட்டிருக்கே!"

"அப்ப ஏம்மா எனக்கு அவசர அவசரமா கல்யாணம் பண்ண நினைக்கிறே?" என்றான் சந்தேகமாய்.

அந்த கேள்விக்கு ஆடிதான் போனாள் கமலா.

"என்னப்பா நீ? எல்லாத்தையுமே சந்தேகத்தோட பார்க்கிறே? உனக்கு ஜோஸியம் பார்த்தப்ப... இப்ப கிரகங்கள் சரியில்லே. உடனடியா ஒரு கல்யாணம் பண்ணியே ஆகணும். இல்லேன்னா... ஏழு வருஷத்துக்கு கல்யாணமே பண்ணக்கூடாதுன்னு சொல்லிட்டார்!"

"அம்மா... டாக்டர் சொல்றதைவிட ஜோஸியக்காரர் சொல்றதைத்தான் நம்பறியா?" என்றான் கிண்டலாய்.

"வெங்கட்... எடுத்ததும் அபசகுனமா எதையும் பேசிடாதே! நீ இந்த கல்யாணத்துக்கு கண்டிப்பா ஒத்துக்கிட்டுதான் ஆகணும்! பொண்ணுகூட பார்த்துட்டேன்!"

"......"

"உனக்குத் தெரிஞ்ச பொண்ணுதான்! உங்க அண்ணியோட தங்கை சித்ராதான்!"

அந்தப் பெயரை கேட்டதும்... யாரோ தன்னை பூக்குவியலில் தள்ளிவிட்டது போல் திடுக்கிட்டுப்போனான்.

'நிஜமாவா? சித்ராவா? நான் ஆசைப்பட்ட அதே சித்ராவா?' மிக மிக சந்தோசப்பட்டான். உடம்பில் புதுரத்தம் பாய்ந்தது. உடம்பில் அதுவரை இருந்த களைப்பெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போக... அவனுக்கு நிராகரிக்க மனம் வரவில்லை.

ஒரு வாரம் மிக விரைவாக ஓடிப்போக... இதோ... இன்று மணமேடையில்.

'தன் பக்கத்தில், மிக அருகில் என் சித்ரா... இனி என் மனைவி' மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தான் வெங்கட்.

சித்ரா இதில் எதிலும் ஒட்டாமல், தனக்கும் இந்த வைபவத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்பது போல் இறுகிப்போய் அமர்ந்திருந்தாள்.

பெருமாள் பெரிய பாரத்தை இறக்கி வைத்த நிம்மதியோடு ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

கமலா அவரை கண்டுகொள்ளவே இல்லை. அவரும் அதை பெரிதாய் எடுத்துக்கொள்ளவில்லை. தன் மகளுக்கு தான் நினைத்தே பார்த்திராத இடத்தில், நடக்கவே நடக்காது என்று நினைத்திருந்த கல்யாணம் நடந்துவிட்டது.

அது போதுமே! இனி எந்த அவமரியாதையும் அவரை பாதிக்கப்போவதில்லை.

திருமணம் முடிந்து மணமக்களை ஏற்றிக்கொண்டு கார் மாப்பிள்ளை வீடு நோக்கிப் பறந்தது.

அவரவர் திரும்பிவிட, பெருமாளை யாரும் உடன் வாருங்கள்' என்று அழைக்கவில்லை. வசந்தாகூட அங்கு அவர் இருப்பதே கண்களுக்கு தெரியாதது போல் கணவனுடன் சென்றுவிட்டாள்.

அந்த இடமே வெறிச்சோடிபோயிருக்க... பெருமாள் மட்டும் தனியாய் இருந்தார்.

'இனி நான் தனிதான்!' உண்மை உறைக்க... நெஞ்சில் சப்பென்று அடைத்துக்கொண்டது. மெல்ல வீடு நோக்கி நடந்தார்.

அந்த நடையில் தொய்வு இருந்தது.



# 13

கமலாவின் பங்களா கல்யாண களை கட்டியிருந்தது. அனைவர் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

வசந்தா சித்ராவை அலங்கரித்துக்கொண்டிருந்தாள்.

"எப்படியோ... என் மூலமா உனக்கும் ஒரு நல்ல வாழ்க்கை அமைஞ்சு போயிடுச்சு!"

"........"

"உன்னை வெங்கட்டுக்கு கல்யாணம் பண்ணித் தரணும்னு நான் எவ்வளவு பாடுபட்டேன் தெரியுமா?"

சித்ராவுக்கு அந்த செய்தி புதிதாய் இருந்தது.

'வெங்கட் தன் மீது ஆசைப்பட்டு கேட்டதாய் அல்லவா அப்பா சொன்னார்?'

"ஆனால்... நான் எவ்வளவுதான் நல்லது செய்தாலும், உனக்கும் சரி, அப்பாவுக்கும் சரி... என்னைக் கண்டாலே ஆகாது! நன்றி மறந்தா சுகப்படமாட்டாங்க..."

அவள் சாதாரணமாய் பேசுகிறாளா, திட்டுகிறாளா என்றே புரிந்துகொள்ள முடியவில்லை.

"இனி மாச சம்பளத்துக்கு தினசரி நாயாய் பேயாய் அலைந்து சம்பாதிக்கவேண்டிய அவசியமில்லே. வெங்கட் பெயரில் ஏகப்பட்ட சொத்து இருக்கிறது தெரியுமா?"

"நேரமாகுது வசந்தா! இன்னுமா அலங்காரம் முடியலே!" வெளியிலிருந்து கமலா குரல் கொடுத்தாள்.

"இதோ... முடிஞ்சிடுச்சு அத்தை!"

"சீக்கிரம் அனுப்பு!"

"இதோ பார் சித்ரா! இது நம்ம வீடு இல்லை! அதை மனசுல நல்லா பதிய வைச்சுக்க... இனி இந்த வீடுதான் நிரந்தரம்! யார் என்ன பேசினாலும் எதிர்த்து பேசக்கூடாது. யார் மனசும் நோகறமாதிரி நடக்கக்கூடாது. பெண்ணுரிமை, அது இதுன்னு டயலாக் அடிப்பியே... அந்த மாதிரியெல்லாம் ஏசகுபிசகா பேசிடாதே! சொல்லிட்டேன். இங்கே நீ மட்டுமில்லே... நானும் மருமகளா வாழ்ந்துக்கிட்டிருக்கேன். உன்னால எனக்கு எந்தவகையிலும் என் வாழ்க்கை பாதிக்கக்கூடாது!"

"........"

"என்னடி வாயைத் திறந்து எதுவும் பேசமாட்டியா? ரொம்ப இறுமாப்புடி உனக்கு?"

"நான் பேசினா உனக்கு மட்டுமில்லே, எல்லோருக்குமே வருத்தம்தான். அதனால, என்ன நடந்தாலும் சரி... நான் வாயே திறக்கமாட்டேன்!" என்றாள் இறுக்கமான முகத்துடன்.

"என்னடி ஆயாச்சா?" மறுபடி கமலம் குரல் கொடுத்தாள்.

"இதோ அனுப்பிட்டேன் அத்தை!" என்றபடி தங்கையை வெளியில் அழைத்து வந்தாள். முக்காலி மீது வைத்திருந்த பால் சொம்பை சித்ராவின் கையில் கொடுத்தாள்.

சித்ரா சற்று நேரம் கையிலிருந்த பால் சொம்பையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு... அவளுக்கு சுட்டிக்காட்டப்பட்ட வெங்கட்டின் அறையை நோக்கி சென்றாள்.

அவள் வரவிற்காகவே காத்திருந்த வெங்கட்... அவள் உள்ளே நுழைந்ததும் எழுந்து சென்று கதவை தாளிட்டுவிட்டு சித்ராவின் தோளில் கை வைத்தான்.

சித்ராவிற்குள் அவன் தொடுகை சிலிர்ப்பேற்படுத்தவில்லை. இதயத்தில் பட்டாம்பூச்சி படபடக்கவில்லை.

திருமணத்தைப் பற்றிய கனவே இல்லாதிருந்தவளுக்கு இத்திருமணம் அதிர்ச்சியை தந்ததேயொழிய ஆனந்தத்தை தரவில்லை.

'ஆனால், அப்பா... உங்களுக்காக எல்லாவற்றையும் சகித்துக் கொள்வேன். என் காலில் விழுந்து கெஞ்சுமளவிற்கு உங்களுக்கு நான் சுமையாக இருந்திருக்கிறேனே... இனியாவது நிம்மதியாய் இருங்கள்."

சித்ரா பொம்மையைப் போல் அமரவைக்கப்பட்டாள். பக்கத்தில் அவனும் அமர்ந்துகொண்டான்.

"ரொம்ப வெக்கப்படறே... உன்னை மேலும் சங்கடப்படுத்த மாட்டேன். பெரியவங்க யாரும் சொல்லி அனுப்பலியா... இந்த பாலை நாம குடிக்கதான் கொடுத்தனுப்பிச்சாங்க! அப்படியே வைச்சிருந்தா தயிரா ஆயிடும். இப்படிக் கொடு!" சிரித்தபடி அவளிடமிருந்து பால் சொம்பை வாங்கி தம்ளரில் ஊற்றி தான் குடித்துவிட்டு மீதியை அவளிடம் நீட்டினான்.

"சாரி... வேண்டாம். நான் பால் சாப்பிடமாட்டேன்!" என்றாள்.

வெங்கட்டின் முகத்தில் லேசாய் ஏமாற்றம்.

"இட்ஸ் ஓ.கே... பரவாயில்லை!" என்று தம்ளரை முக்காலி மீது வைத்துவிட்டு அவளிடம் இன்னும் நெருங்கி அமர்ந்தான்.

"சித்ரா..."



"ம்...!"

"என்னை பிடிச்சிருக்கா?"

"........"

"சே... மடத்தனமா என்ன கேள்வி கேட்கிறேன்? பிடிக்காமலா கல்யாணத்துக்கு சம்மதிச்சே? ஒரு வார்த்தைக்கூட பேசியதில்லே! ஆனால்... உன்னை நான் பார்த்த நாள் முதலா காதலிக்க ஆரம்பிச்சிட்டேன் தெரியுமா?"

சித்ரா ஒரு சின்ன அதிர்ச்சியுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

வெங்கட் மெல்ல அவள் கையைத் தொட்டான்.

"நான் காதலிச்ச உன்னையே இன்னைக்கு கைப்பிடிச்சிட்டேன்னு நினைக்கறப்ப... எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?" அவள் கையை எடுத்து தன் நெஞ்சில் பதித்துக்கொண்டவன் இடதுகையால் அவள் முகத்தை நிமிர்த்தினான்.

"பெண்ணின் சுகத்தையே அறியாமல் போய் சேர்ந்திடுவேனோன்னு பயந்திட்டிருந்தேன். ஆனால், எனக்கு தங்கசுரங்கமே கிடைச்சிடுச்சு!" அவள் கழுத்தில் முகம் புதைத்தான். அவன் உணர்வலைகள் தாறுமாறாய் எகிற... நெஞ்சில் சுருக்கென்று ஒரு வலி தைத்தது.

அவன் தலைமுடி முகத்தில் உரச... பல்லைக் கடித்துக்கொண்டு தன்னுள் எழுந்த எரிச்சலை கட்டுப்படுத்திக்கொண்டாள்.

அவளிடமிருந்து எழுந்த பூவாசமும், பவுடர் வாசமும் அவனை கிறங்கடிக்க... சித்ராவை இறுக்கி அணைத்துக்கொண்டான். அவள் முகம் முழுக்க தன் உதடுகளால் ஒத்தடம் கொடுத்தவன்... கடைசியாய் அவள் இதழ்களில் வந்து சரணடைந்தான்.

வெங்கட்டின் உடம்பில் இரத்தம் வேகமாய் பாய்ந்தது. உணர்ச்சிவசப்பட்டதில்... சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட... நெஞ்சில் மறுபடி வலி உண்டானது. அந்த வலி இருக்க... இருக்க அதிகமாக... தாங்கமுடியாத வேதனையில் தன் கைகளுக்குள் இருந்த சித்ராவை விட்டுவிட்டு கட்டிலிலிருந்து நழுவி விழுந்து துடிக்க ஆரம்பித்தான்.

சித்ராவிற்கு ஒருகணம் ஒன்றும் புரியவில்லை.

'என்னாச்சு?'

"சி...சித்...ரா... அம்...அம்மாவை கூப்பிடு... ம்மா...!" இப்படியும் அப்படியும் துடித்தான்.

சித்ரா... அதற்குமேல் நின்றிருக்க துணிவின்றி ஒரே ஓட்டமாய் வெளியில் வந்தாள்.

"அக்கா...!" அவள் அலறிய அலறலில் வீடு மொத்தமும் கூடியது.

வெங்கட் ஆபத்தான நிலையில் இருந்ததால் அவசரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தான்.

உறவினர்கள் அத்தனை பேரும் ஆஸ்பத்திரியில் குழுமியிருந்தனர். யார் மூலமோ தகவல் போய் பெருமாளும் வந்திருந்தார்.

சித்ராவிற்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை.

'என்ன ஆயிற்று? நன்றாகத்தானே பேசிக்கொண்டிருந்தார்? அதற்குள் ஏன் அப்படியாகிவிட்டார்?'

"என்னம்மா சித்ரா... மாப்பிள்ளைக்கு என்னாச்சு?"

"தெரியலேப்பா...!"

"வசந்தா... நீயாவது சொல்லேன்... மாப்பிள்ளைக்கு என்னாச்சு?"

"அப்பா... கொஞ்ச நேரம் தொணதொணக்காம பேசாம இருக்கீங்களா? நானே பயந்திட்டிருக்கேன். சித்ரா வந்த நேரம் வெங்கட்டுக்கு ஏதாவது ஆகிடுமோன்னு!" நெருப்பை வாரிக்கொட்டினாள்.

டாக்டர் ஜெயச்சந்திரன் கமலாவின் முன் வந்து நின்றார்.

"ஏம்மா... உங்களுக்கு கொஞ்சம்கூட அறிவே இல்லையா? படிச்சு படிச்சு சொன்னேனே... உங்க பையனுக்கு மூனு மாசம் தாண்டறதே கஷ்டம்னு! எல்லாம் தெரிஞ்சும் எப்படிம்மா கல்யாணம் பண்ணினீங்க? மனசாட்சியை கழற்றி வைச்சிட்டு இப்படி ஒரு அரக்கத்தனம் பண்ணிட்டீங்களே? இந்த மாதிரி ஸ்டேஜ்ல உள்ளவங்க முக்கியமா எமோஷனலாகக்கூடாது! உங்க பையனோட ஆயுளை நீங்களே குறைச்சிட்டீங்க! உங்க சுயநலத்துக்காக... ஒரு பெண்ணோட வாழ்க்கையை பாழாக்கிட்டீங்களே!"

"டாக்டர்... எப்படியாவது என் பிள்ளையை காப்பாத்திக் கொடுத்திடுங்க!" கையெடுத்து கும்பிட்டாள் கமலா அழுதபடி.

"மன்னிச்சிடுங்கம்மா... இனி என்னால ஒண்ணும் செய்ய முடியாது. என்னால எத்தளவிற்கு முடியுமோ... அத்தளவிற்கு ட்ரீட்மெண்ட் கொடுத்திருக்கேன். ஆனாலும் உங்க பையன் சீரியஸ் கண்டிஷனை தாண்டவில்லை. கடவுளிடம் வேண்டிக்குங்க!"

"ஐயோ... கடவுள்...!" என்று தலையில் அடித்துக்கொண்டு அழுதாள் கமலா.

சுரேஷும், சுந்தரமும் விக்கித்துப் போயினர்.

டாக்டர் சொல்வதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சித்ரா திகைத்துப்போய் அப்பாவைப் பார்த்தாள்.

பெருமாளுக்கு தலைக்குள் வண்டொன்று புகுந்து இம்சை பண்ணிக்கொண்டிருந்ததுப் போல் வேதனை.



நெஞ்சு வெடிக்க வாய்விட்டு அழுதபடி சித்ராவைப் பார்த்து கைகூப்பினார்.

"என்னை மன்னிச்சிடு சித்ரா..." உடம்பு குலுங்கியது அழுகையில்.

அப்பாவின் அழுகையை தடுக்கக்கூட முடியாத அதிர்ச்சியில் சுவரோடு சுவராக சாய்ந்தமர்ந்தாள்.

'இந்த தாலி மணிக்கணக்கில் கூட என் கழுத்தில் நிற்காது என்று தெரிந்துமா... வசந்தா இந்த கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்தாள்? மாமியாரிடம் நல்ல பெயர் வாங்க...சொந்த தங்கையை பலிகடா ஆக்கும் அளவிற்கா அவள் சுயநலவாதியாகிவிட்டாள்?'

பெருமாள் வேதனை தாங்காமல் ஒரு மூலையில் ஒண்டிக் கொண்டார்.

நேரம் கரைந்தது.

விடிந்தபோது...

## 14

"பாவி... சண்டாளி... வந்த அன்னைக்கே என் பிள்ளையை படுக்க வைச்சிட்டாளே! என் பிள்ளை கண்ணு திறந்துப் பார்க்கலியே... எமனா நுழைஞ்சு... என் பிள்ளையை பழிவாங்கிக்கப் போறாளே...!" கமலா இரவிலிருந்தே அரற்றிக்கொண்டே இருந்தாள்.

சித்ரா சலனமற்று அமர்ந்திருந்தாள். வசந்தா ஒரு ஓரம் ஒதுங்கியிருந்தாள். அவளுக்கு அப்பா எதிரில் வர சங்கடமாயிருந்தது.

'மூன்று மாதம் வரை உயிரோடிருப்பான் என்றார்களே! அதற்குள் வெங்கட்டின் வாரிசு சித்ராவின் வயிற்றில் வளர ஆரம்பித்துவிடும். அப்போது வெங்கட்டின் மரணம் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தாது. எதையாவது சொல்லி சமாளித்துவிடலாம்' என்று நினைத்தாள். ஆனால் நிலைமை இவ்வளவு மோசமாகும் என்று அவள் எதிர் பார்க்கவில்லை.

சுரேஷிற்குதான் சித்ராவையும், பெருமாளையும் பார்க்க கஷ்டமாக இருந்தது.

'ஒரு நாள் கூத்திற்காக... இந்தப் பெண்ணிற்கு விதவை பட்டமா?'

பெருமாள் உட்கார்ந்தபடி தலை கவிழ்ந்திருந்தார்.

'பாவம்... வயதான காலத்தில் அவருக்கு இது வேறு மனக்கஷ்டம்.'

சுரேஷ் பெருமாள் அருகே வந்தான்.

"மாமா... எவ்வளவு நேரம் இப்படியே உட்கார்ந்திருப்பீங்க. வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுங்க மாமா!"

"........"

"வெங்கட்டுக்கு ஒண்ணும் ஆகாது. கவலைப்படாம போய்வாங்க!" சுரேஷ் அவர் தோளைத் தொட்டான்.

அவ்வளவுதான்.

பக்கவாட்டில் அப்படியே சாய்ந்து விழுந்தார் பெருமாள். அவர் கண்கள் ஆடாமல் அசையாமல் நிலைப் பெற்றிருந்தது.

"மா...மா...!" திடுக்கிட்டான் சுரேஷ்.

"மாமா... மாமா! வசந்தா.. இங்கே வாயேன்!"

சுரேஷின் பதற்றமான குரல் சித்ராவை அசைத்தது.

எழுந்து வந்தாள்.

"அப்பா... அப்பா... அப்பா...!"

விறைத்திருந்த அவரது உடல் சொல்லாமல் சொன்னது. அவர் உயிர் பிரிந்து பல மணி நேரம் ஆகிவிட்டதென்று உண்மை உறைத்தபோது... அதீத அதிர்ச்சியில் அழுகையே வரவில்லை சித்ராவிற்கு.

"அ...அப்பா... நீங்களும் என்னைவிட்டுப் போயிட்டிங்களாப்பா?" என்றாள் சலனமற்ற குரலில்.

பெருமாளை சாம்பலாக்கி கடலில் கரைத்தாயிற்று. சுரேஷ்தான் முன்னின்று எல்லாவற்றையும் நடத்தினான். சித்ரா இன்னும் இறுகிப்போய்விட்டிருந்தாள்.

அப்பா சட்டென இப்படி உயிரை விட்டுவிடுவார் என்று வசந்தாவும் எதிர்பார்க்கவில்லை.

"இருக்கிற பிரச்சினை போதாது என்று இந்த கருமாந்திரம் வேறா? இந்த ஆள் இங்கே வந்துதானா உயிரைவிடணும்? சுரேஷ்... இந்த வேலையை யார்க்கிட்டேயாவது ஒப்படைச்சிட்டு சீக்கிரம் வந்து சேர்!" என்றாள் கமலா.

"பாவம் கமலா! எடுத்து செய்ய யார் இருக்கா? நாமதான் செய்யணும்? சுரேஷ் கூட இருந்து செஞ்சுட்டு வரட்டுமே!" என்றார் சுந்தரம்.

"வாயைப் பொத்திக்கிட்டு சும்மாயிருக்கிங்களா? இப்பவோ, அப்பவோன்ற நிலைமையிலே நம்ம பிள்ளை கிடக்கிறான். இந்த நேரத்திலே... கண்ட அனாதை பிணத்தை எல்லாம் தோள்ல சுமந்து



காரியம் செய்யணுமா?"

"அம்மா... என்ன இருந்தாலும் அவர் என் மாமனார். செய்யவேண்டியது என் கடமை! நாளைக்கு நாலுபேர் என்னை தப்பா பேசறதை நான் விரும்பலைம்மா! அம்மாவின் பதிலை எதிர்பாராமல் கூறிவிட்டு சென்றான் சுரேஷ்.

நான்கு நாள் ஓடிப்போயிற்று!

அதுநாள்வரை வெங்கட்டின் உடலை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த உயிர் விடுபட்டுப் போயிற்று.

கமலா வயிற்றிலும் நெஞ்சிலும் அடித்துக்கொண்டு அழுதாள்.

"அடிப்பாவி... என்ன ராசியைக் கொண்டு பிறந்தியோ? அம்மாவையும், அப்பாவையும் அடிச்சு வாய்ல போட்டுக் கிட்டதுமில்லாம... கட்டின புருஷனையும் சாகடிச்சிட்டியே...!" வசந்தா சித்ராவை கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதாள்.

அவள் தனக்காக வருத்தப்படுகிறாளா, திட்டுகிறாளா என்றே புரியவில்லை சித்ராவிற்கு.

வெங்கட்டின் உடலை கிடத்தி மாலை சூடி... அனைவரும் அழுதுக்கொண்டிருந்தனர். ஆனால் சித்ராவிற்கு அழுகை வரவில்லை.

வெங்கட் இறந்ததற்காக பரிதாபப்பட்டாளே தவிர அழவேண்டும் என்று தோன்றவில்லை.

'வெங்கட் யார்? கழுத்தில் இந்த தாலியை கட்டினவன். என்னை முன்பே நேசித்தவன் என்று ஐந்து நிமிடமாய் பேசி.. இரண்டு நிமிடம் என்னை அணைத்தவன்.

இந்த ஒரு சின்ன ரெயில் சிநேகத்திற்காக எனக்கு விதவை பட்டமா? என்ன அநியாயம் இது? அப்பா... இதையெல்லாம் கண்கொண்டு பார்க்க சக்தி இல்லாமல்தான் போய் சேர்ந்துவிட்டீர்களா?' அப்பாவை நினைத்தமாத்திரத்தில் கண்ணீர் தளும்பி நிரம்பி வழிந்தது.

கமலா சித்ரர்வை திட்டிக்கொண்டே இருந்தாள்.

"கருங்காலி... எந்த நேரத்திலே காலெடுத்து வைச்சாளோ... என் பிள்ளையை பாடையிலே கிடத்திட்டாளே... அப்பவே படிச்சு படிச்சு சொன்னேன். ஏணி வச்சாலும் நம்மை தொடமுடியாத குடும்பமா... அந்த வீட்டு பொண்ணு உனக்கு வேண்டாம்னேன். கேட்டானா? கட்டினா இவளைத்தான் கட்டுவேன்னு ஒத்தைக்கால்ல நின்னான்... மூதேவி... என் பிள்ளையை ஒரேயடியா பறிச்சிட்டாளே!"

அவள் அழ... அழ... கூட்டம் மொத்தமும்... ப்ச்... ப்ச்... என்று

சிலர் தீபாவளி விருந்துக்குச் சென்றால் சாப்பாட்டை ஒரு பிடி பிடித்துவிடுவார்கள். சாப்பாடு ஜீரணமாகுமா ஜீரணமாகாதா என்று பார்ப்பதில்லை. கிடைத்த வரை லாபம் என்று வெளுத்துக்கட்டுவார்கள். அப்படிப் பட்டவர்கள் சாப்பாடு முடிந்ததும் ஒரு தம்ளர் மோரில் சிறிது பெருங்காயத்தூளை போட்டு கலக்கி குடியுங்கள். அப்படிக் குடித்தால் சாப்பாடு எளிதில் ஜீரணமாகும்.

பரிதாபப்பட்டது.

சுரேஷிற்கு அங்கு நிற்க முடியவில்லை.

ஒரு இளம்பெண்ணி வாழ்க்கையை பாழாக்கியதோ மட்டுமின்றி... அவள் மீதே ப கூறுவது எவ்வளவு அரக்க தனம்? இதற்கெல்லாம் காரண வசந்தாதானே? தெரிந்து தங்கையை யாராவது பு குழியில் தள்ளுவார்களா? ச்சே... என்ன பெண் இவள்? எதற்கா இப்படியொரு காரியத்தை செ தாள்? அவள் செய்கைகளை அப்போதே கண்டித்து முளை யிலேயே கிள்ளி எறியாமல் நானும் கையை கட்டிக்கொண்டு சும்மாயிருந்துவிட்டேனே!" வேதனைப்பட்டான்.

நேரம் கடந்தது.

வெங்கட் என்னும் உடல் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டது.

சித்ராவிற்கு அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் வாசலிலேயே நின்றிருந்தாள்.

யாரும் அவளை உள்ளே அழைக்கவும் இல்லை. வசந்தாவும் மாமியாருக்கு பயந்து அமைதியாக இருந்தாள்.

கமலா வெளியில் வந்தாள்.

"இன்னும் இங்கே ஏன் நிக்கிறே? கிளம்பு!"

சித்ராவிற்கும் அங்கிருக்க பிடிக்கவில்லைதான். ஆனால், எங்கே போவது என்றுதான் தெரியவில்லை.

"என்னடி கல்லுமாதிரி நின்னுட்டிருக்கே? அதான் வந்ததும் வாய்ல வாரிப் போட்டுக்கிட்டியே... இன்னும் யாரை சாகடிக்க நிக்கறே? போடி வெளியே...!"

"அம்மா... நீ பண்றது கொஞ்சம்கூட சரியில்லே!" என்று வந்தான் சுரேஷ்.

"நீ சும்மாயிரு சுரேஷ்! உனக்கொன்றும் தெரியாது!"

"எல்லாம் தெரிஞ்சிருந்தும் சும்மாயிருந்தத்தாம்மா... நான் செய்த பெரிய தப்பு! இனியும் இதுமாதிரி ஒரு தப்பு நடக்க



அனுமதிக்கமாட்டேன்!"

"சுரேஷ்!"

"தெரிஞ்சோ, தெரியாமலோ நீ பெத்த பிள்ளைக்காக, இன்னொரு தாய் பெத்த பெண்ணை பழிவாங்கிட்டோம். வாழாமலே வாழ்க்கையை மட்டுமில்லே... தன் ஒரே ஆதரவான அப்பாவையும் இழந்துட்டு நிக்கிற சித்ராவை நான் வெளியே அனுப்பமாட்டேன்! அதை வெங்கட்டோட ஆத்மாவும் அனுமதிக்காது. நம்மளை மன்னிக்கவும் செய்யாது. சித்ரா இந்த வீட்டு மருமகள். இது பொம்மை கல்யாணமில்லே... எல்லாம் முடிந்ததும் தூக்கி கடாசிடறதுக்கு. நம்மை எல்லாரையும்விட வெங்கட் இறந்ததனால பாதிக்கப்பட்டது சித்ராதான். நீ உன் பிள்ளையை மட்டும்தானம்மா இழந்தே? ஆனால், சித்ரா தன் புருஷனை மட்டுமல்ல... பூவையும், பொட்டையும் சுமங்கலிங்கற பட்டத்தையும் இழந்து நிக்கறா! அவளுக்கு இந்த வீட்ல சகல உரிமைகளும் இருக்கு! அவளை உள்ளே விடும்மா!"

கமலா மட்டுமல்ல வசந்தாவும் அவன் இப்படி பேசுவான் என்று எதிர்பார்க்கவில்லை.

'எப்படி வந்தது இவ்வளவு தைரியம்?'

"சுரேஷ்... நீ இப்படி பேசறது எனக்கு அதிர்ச்சியாயிருக்கு. அவள் ராசி இல்லாதவள் சுரேஷ்! மூணு மாசம் வாழ்ந்திருக்கவேண்டிய என் பிள்ளையை... மூணே நாள்ல கொன்னுட்டாளே! அவள் நம்ம வீட்லே வேணாம் சுரேஷ்!"

"அம்மா... போதும்... இந்த வீட்லே மேலும் மேலும் அநியாயம் நடக்க வேணாம். சித்ரா இந்த வீட்லேதான் இருப்பா! அவளுக்கு இடமில்லேன்னா... நானும் என் குடும்பத்தோட வெளியிலே போயிடறோம்!" என்றான் தீர்மானமான குரலில்.

கமலா அசந்துப்போனாள்.

தன் மனைவி செய்யவிருந்த தப்பை களைந்தானே என்கிற சந்தோஷம் சுந்தரத்துக்கு.

'எதற்காக சித்ராவிற்காக இவர் இவ்வளவு பிரயத்தனம் பண்ணுகிறார்?' வசந்தாவிற்கு சந்தேகம் எட்டிப் பார்த்தது.

"நீ... வா சித்ரா!" சுரேஷ் அழைத்தான்.

தயங்கி... பின் உள்ளே சென்றாள் சித்ரா.

"நல்லாயிருக்கு கூத்து! தம்பி பொண்டாட்டிக்காக இவன் ஏன் இப்படி வக்காலத்து வாங்கறான்? இவனையும் கையிலே போட்டுக்கிட்டாளா உன் தங்கச்சி?" போகிறபோக்கில் சொல்லிவிட்டு சென்றாள் கமலா.

வசந்தா... அதன் அர்த்தம் உறைக்க உறைந்து நின்றுவிட்டாள்.

## 15

சித்ரா அந்த வீட்டின் சம்பளமில்லா வேலைக்காரியாக மாறிப்போனாள். செக்கு மாடு மாதிரி உழைத்தாள்.

கமலத்தோடு வசந்தாவும் சேர்ந்துகொண்டதால் வந்த வினை இது!

படித்துக்கொண்டிருந்த படிப்பை தொடர விரும்பினாள். ஆனால், கமலா அவள் புத்தகங்களை எரித்துவிட்டாள்.

பார்த்துக்கொண்டிருந்த வேலையையும் விட்டாச்சு. தனக்கென்று ஒதுங்க ஒரு கூரையில்லை. உறவென்றிருந்த அப்பாவும் இல்லை. கையில் பணமும் இல்லை. சாப்பிடவோ, படிக்கவோ பணம் தேவை!

'என்ன செய்யலாம்? வசந்தாவின் பேச்சும் சரியில்லை. கண்ணியமில்லாமல் பேசுகிறாள். ரொம்ப காலம் இந்த வீட்டில் இருக்க முடியாது. ஒரு வேலையை தேடிக்கொண்டு படிப்பை முடிக்க வேண்டும்! பேசாமல் அத்தானிடம் இதுகுறித்து உதவி கேட்டால் என்ன?

கேட்டாள்.

சுரேஷ் அவளைப் பார்த்து நெகிழ்ந்துபோனான்.

"உன் மனசு எனக்குப் புரிகிறது சித்ரா! ஆனால், நீ வெளியில் போய் சம்பாதித்துதான் ஆகவேண்டும் என்கிற கட்டாயமில்லை. இந்த வீட்டில் உனக்கும் பங்கிருக்கிறது. வெங்கிட் சொத்திற்கு நீதான் வாரிசு!"

"இல்லே அத்தான்! என்ன ஏதுன்னு புரியறதுக்கு முன்னாடி அவசர அவசரமாக ஒரு கல்யாணம். உங்க தம்பியை சரியா நிமிர்ந்து பார்க்கக்கூட அவகாசம் தராத அளவுல விதவைக் கோலம். இந்த வெள்ளைச் சேலைக்கும், பாழ் நெற்றிக்காகவும்... மூணு வேளை சோறு போட்டு, பாதுகாப்பா ஒரு அறையும் தந்திருக்காங்க! அதுவே போதும். மனசுவிட்டு சொல்லணும்னா... எனக்கு இந்த கல்யாணத்திலே விருப்பமில்லே. உங்க தம்பியை என் மனசுக்குள்ளே அனுமதிக்கவும் இல்லே! அப்படிப்பட்டவரோட சொத்தை மட்டும் அனுபவிக்க... என் மனசாட்சி இடம்தரலே! நான் இங்கிருந்து வெளியேறணும். எனக்கொரு நல்ல வேலையை ஏற்பாடு செய்து தரணும். வேலை கிடைச்சிட்டா... நான் ஏதாவது லேடீஸ் ஆஸ்டலில் தங்கிக்குவேன்!"

"சித்ரா... உன்னை நான் வசந்தாவோட தங்கையா நினைக்கலே. என் தங்கையாதான் பார்க்கிறேன். வேலை மட்டுமே உன்னை மாதிரியான இளம்பெண்ணுக்கு வாழ்க்கையை தந்துவிடாது. இதற்கும்



அப்பாற்பட்ட வாழ்க்கை இருக்கிறது. உனக்கு நானே ஒரு நல்ல பையனாப் பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கிறேன்!"

"என்மேல் நீங்க வைச்சிருக்கிற அக்கறையை நினைச்சு நிஜமாகவே சந்தோசப்படறேன். ஒரு நல்ல ஆத்மாவை முதல்முதலா சந்திச்சிருக்கேன். எனக்கு கல்யாணம் வேண்டாம் அத்தான். எனக்கு ஆண்கள்மேல் நம்பிக்கையில்லை."

"ஏம்மா... இப்பதான் என்னை நல்லவன் என்று சொன்னே... என்னை மாதிரி எத்தனையோ நல்ல மனுஷங்க இருக்காங்க சித்ரா!"

"எதையும் ஏத்துக்கிற மனநிலையிலே நானில்லே அத்தான். எனக்கு இப்போதைய தேவை எல்லாம் ஒரு வேலை வாய்ப்பு... அவ்வளவுதான்."

"நீ மாறுவே சித்ரா! அப்படியொரு சந்தர்ப்பம் வரத்தான்போகுது. கவலைப்படாதே! உனக்கு நல்ல வேலைக்கு ஏற்பாடு செய்யறேன். ஆனா, உடனடியா இல்லே. எங்கம்மா சத்தம் போடுவாங்க! இன்னும் சில மாதங்கள் போகட்டும். உனக்கொரு நல்ல வாழ்க்கையை நான் ஏற்படுத்தி தர்றேன்!" என்று கூறிவிட்டு நகர்ந்துவிட்டான்.

அப்போதுதான் அந்த அறைக்குள் நுழைந்த வசந்தாவின் காதில் கடைசி வார்த்தை விழ... கொதித்துப்போனாள்.

"ஏய்... என் புருஷன்கிட்டே என்னடி பேசிக்கிட்டிருந்தே?" அவள் தோளை பிடித்து இழுத்து கேட்டாள்.

சித்ரா நிதானமாய் அவளை ஏறிட்டாள்.

"என்னோட எதிர்காலத்தைப் பற்றி!"

"என்னது?"

வசந்தா திகைத்து நிற்க, அவளை அசட்டை செய்தவளாய் தனக்குள் சிரித்துக்கொண்டே அதற்குமேல் உன்னிடம் பேச ஒன்றுமில்லை என்பது போல் போய்விட்டாள் சித்ரா.

வசந்தாவில் காலடியில் பூமி நழுவுவது போல் இருந்தது.

வெங்கட்டின் மரணத்தை கேள்விப்பட்டு பரத்தும், அவன் தந்தை தர்மலிங்கமும் இந்தியாவுக்கு வந்திருந்தனர்.

தர்மலிங்கம் தம்பியை உலுக்கி எடுத்துக்கொண்டிருந்தார்.

"அவனுக்கு நோய் இருக்குன்னு தெரிஞ்சும் நீ எப்படி கல்யாணம் பண்ணி வைச்சே? இதனால் ஒரு பொண்ணோட வாழ்க்கையே பாழாப்போயிடுச்சே? விசயம் கேள்விப்பட்டதும் உடனடியா இந்தியா வரணும்னு துடிச்சேன். அட்டாக் வந்த உடம்பு... சில மாதத்துக்கு டிராவல் பண்ணவே கூடாதுன்னு டாக்டர்ஸ் ஸ்ட்ரிக்டா ஆர்டர் போட்டதால் என்னால் வரமுடியலே! என்னை தனியா விட்டுட்டு

வர பரத்துக்கு மனசு வரலே! வெங்கட் மாதிரியான ஆட்களுக்கு விஷமே செக்ஸ்தான்! அப்படியிருக்க... எப்படி இப்படிப்பட்ட காரியத்தை பண்ணி வைச்சீங்க? ஏம்ப்பா சுரேஷ்? இவங்கதான் அதிகம் படிக்காதவங்க... நீயாவது எடுத்து சொல்லியிருக்கக்கூடாதா?"

சுரேஷ் தலைகவிழ்ந்தான்.

"இல்லேண்ணா... அவனும் நானும் வேண்டாம்னுதான் சொன்னோம். கமலாதான் என் பிள்ளையோட வாரிசாவது இந்த மண்ணுல உயிரோட இருக்கட்டும்னு கல்யாணம் பண்ணி வைச்சா!" என்றார் சுந்தரம்.

"என்னப்பா பேச்சு இது? அதுவே உனக்கொரு பொண்ணு இருந்து அவளை வெங்கட் மாதிரியான பையனுக்கு கல்யாணம் செய்து வைப்பியா? பணம் இல்லாத ஒரே காரணத்துக்காக ஒரு ஏழைப் பொண்ணை பழிவாங்கிட்டீங்களே! பணம் மனுஷன் உருவாக்கறது. அதுக்கு முக்கியத்துவம் தரக்கூடாது. பரத்துக்கு நல்ல பொண்ணா பார்க்கச் சொல்லி அந்த பொறுப்பை உங்ககிட்டே ஒப்படைச்சேன். ஆனா, பரத்துக்கு இங்கே யாரோ ஒரு பொண்ணுமேல் ஈர்ப்பு ஏற்பட்டிருக்கு! எனக்கு பணம் காசு முக்கியமில்லே. அந்தப் பொண்ணு யாராயிருந்தாலும், எந்த மதமாயிருந்தாலும் பரவாயில்லை... அவளோட விருப்பத்தோட பரத்துக்கு கல்யாணம் பண்ணி வைச்சிடணும்னு முடிவு பண்ணிட்டேன்!" என்றார் தர்மலிங்கம்.

"அப்படியா? யார் பரத் அந்த பொண்ணு?" என்றான் சுரேஷ்.

"எனக்கே தெரியாது சுரேஷ்!"

"என்னது... உனக்கே தெரியாதா?" என்றான் ஆச்சரியமாய்.

"ஆமா சுரேஷ்!" என்றவன் தன் அபூர்வ காதலைப் பற்றி சுருக்கமாய் சொன்னான்.

"ரொம்ப ஆச்சரியமாயிருக்கு! வா... நீ எப்பவும் பார்க்கிற இடத்துக்கு போவோம்! அவளை இன்னைக்கே பார்க்கிறோம். பேசி முடிக்கிறோம்... ஓக்கே!"

"ஓக்கே!" என்றான் பரத்.

சற்று நேரத்தில் இருவரும் கிளம்பிவிட்டனர். அவர்கள் போன இரண்டாவது நிமிடம் காபியோடு வந்தாள் சித்ரா.

"இவள்தான் வெங்கட்டின் மனைவி!" என்றார் சுந்தரம்.

"அடடா... இந்த வயசுல உனக்கு இப்படியொரு கஷ்டம் வரணுமா?" மிகவும் வேதனைப்பட்டாள்.

சித்ராவுக்கும் அவரைப் பார்த்ததும் அப்பாவைப் பார்த்தது போல்



மனம் நெகிழ்ந்துபோனாள்.

தர்மலிங்கம் அவளிடம் ஆறுதலாய் பேசிக்கொண்டிருந்தது கமலாவிற்கு பிடிக்கவில்லை.

நெடுநேரம் அந்த பஸ் ஸ்டாண்டின் அருகே நின்றிருந்தனர் பரத்தும் சுரேசும்.

ஆனால், அவள் வரவேயில்லை.

ஏமாற்றத்தில் முகம் சுருங்கியது பரத்திற்கு.

"டோண்ட் வொரி பரத்! இன்னைக்கு அவ ஆபீஸிற்கு லீவு போட்டிருக்கலாம். நாளைக்கு மறுபடி வருவோம். கவலைப்படாதே... அவள் யார் என்னன்னு விசாரிச்சி... நீங்க லண்டன் போறப்ப... அவளையும் கையோட அழைச்சிட்டு போற மாதிரி பண்றேனா, இல்லையா பார்!"

"எனக்காக நீ ரொம்ப சிரத்தை எடுத்துக்கறே சுரேஷ். ரொம்ப தாங்க்ஸ்!"

"என்ன வார்த்தை பேசறே? வெங்கட் போல நீயும் என் சகோதரன் தானே? வெங்கட்டை கல்யாணம் பண்ணிக்கிட்டு ஒரு பொண்ணோட வாழ்க்கையே நாசமாபோச்சு! உன் மூலமா ஒரு ஏழை பொண்ணுக்கு அமோகமான வாழ்வு கிடைக்கட்டும். அப்படியாவது என் மனசுக்கு ஒரு ஆறுதல் கிடைக்கட்டுமே!"

"பாரேன்... என் ஆளை பார்க்கணும்ங்கற அவசரத்துல வெங்கட்டோட மனைவியை பார்க்காமலே வந்துட்டேன்!"

"அதுக்கென்ன... இப்ப வீட்டுக்குத்தானே போகப்போறோம். பார்த்துட்டா போச்சு. பாவம் சித்ரா! எங்க அம்மாவும், அவளோட அக்காவும் அவளை பாடாய் படுத்தறாங்க. ரொம்ப நல்ல பொண்ணு! அவள் மனசை எப்படியாவது மாத்தி ரீமேரேஜ் பண்ணி வைக்கணும்! அதுக்கு முன்னால் அவளுக்கு ஒரு நல்ல வேலைக்கு ஏற்பாடு பண்ணணும்!"

"படிச்சிருக்காள்னு சொல்றே! பேசாம அவளுக்கு பாஸ்போர்ட்டுக்கு ஏற்பாடு பண்ணு சுரேஷ்! நாங்க லண்டனுக்கே அழைச்சிட்டு போயிடறோம். எங்க ஆபீசுலேயே அவளுக்கு நல்லவேலையா போட்டுத் தர்றோம். அவள் மனசுக்கும் ஆறுதலாயிருக்கும்!"

"நல்ல ஐடியாதான்! நான் இன்னைக்கே சித்ராகிட்டே இதுபத்தி பேசறேன். நிச்சயமா அவள் சம்மதிப்பா!"

கார் அவர்கள் வீட்டு வாசலில் நின்றது.

இருவரும் இறங்கி உள்ளே வந்தனர்.



அதேநேரம்... ஏதோ வேலையாய் ஹாலுக்கு வந்தாள் சித்ரா!
அவளை பார்த்துவிட்டான் பரத்!
அவன் செல் நாளங்கள் அனைத்தும் விறைத்துக்கொண்டன.

## 16

"சித்ரா!" என்றழைத்தான் சுரேஷ்.

"ம்!" என்றபடி நிமிர்ந்தாள்.

"இது பரத்! எங்க பெரியப்பா பையன்! பரத்... இதுதான் சித்ரா!"

சித்ரா பரத்தை பார்த்து கைகூப்பி வணக்கம் சொன்னாள்.

'இவளா? இங்கேயா? என் காதல் தேவதை வெங்கட்டின் விதவை மனைவியா?" மை காட்!"

பரத் பேயறைந்தவன் போலானான்.

"சித்ரா... உன் வேலை விசயமா கொஞ்சம் பேசணும். எதையும் தள்ளிப்போடக்கூடாது. என்னா... நீ ஓக்கே சொன்னினா... அதுக்கான முயற்சிகளை இப்பவிருந்தே தொடங்கணும். இப்படி வா!" என்று அவளை தனியே அழைத்து சென்றான் சுரேஷ்.

பரத்தின் மனம் ஊமையாய் அழுதுகொண்டிருந்தது.

'உன்னை வீட்டில் வைத்துக்கொண்டே ஊரெல்லாம் தேடினேனே... இப்படி இந்த கோலத்தில் பார்ப்பதற்காகவா? எவ்வளவு கனவு கண்டேன் தெரியுமா? உன் பெயர் சித்ரா என்பதுகூட எனக்கு இப்போதுதான் தெரியும். நீ என் கைகெட்டும் தூரத்தில் இருந்தும் கைநழுவ விட்டேன். இப்போது... இப்போது... வெகு அருகில் இருந்தும்

**உடல்நலம் ஆரோக்கியமாக் இருக்க உடற்பயிற்சி செய்ய வேண்டும். ஆனால், அளவுக்கு அதிகமாக உடற்பயிற்சி செய்தால் நோயை உருவாக்கும் என்று மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.**

**உடல்பயிற்சி செய்தால் உடம்பில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி வலிமைபெறும். ஆனால், அந்த உடற்பயிற்சியே அளவுக்கு அதிகமாகிவிட்டால் அமிர்தமும் நஞ்சு என்பது போல ஆகிவிடும்.**

எட்டாக்கனியாகிவிட்டாள்.'

பரத்தின் கண்களும் கலங்க ஆரம்பித்தது.

தர்மலிங்கம் அறைக்குள் நுழைந்தார்.

"பரத்... உடம்பு சரியில்லையா என்ன? சாப்பாடு வேண்டாம்னு சொல்லிட்டியாமே!"

"பிடிக்கலேப்பா!"

"பரத்...!"

"சொல்லுங்கப்பா!"

"நானும் கவனிச்சேன். நீ சுரேஷோட வெளியிலே போயிட்டு வந்ததிலேர்ந்து உன் முகமே சரியில்லே... என்னாச்சு?"

"......"

"அந்தப் பெண்ணை பார்த்தியா?"

"பார்த்தேன்ப்பா!"

"பேசினியா? அவள் பேரென்ன? என்ன பண்றா? எங்கே இருக்கிறா?"

அப்பாவிடம் இதுவரை அவன் எதையும் மறைத்ததேயில்லை. அவருடன் ஒரு நண்பரைப் போலவே எல்லா விசயங்களையும் பகிர்ந்துகொள்வான்.

"அவள் பேரு சித்ரா! இந்த வீட்லதான்... செத்துப்போன வெங்கட்டோட விதவை மனைவியா இருக்கிறா!"

"ப..ர..த்!" மிக மிக அதிர்ந்துபோனார் தர்மலிங்கம்.

"பரத்... நீ என்னப்பா சொல்றே?"

"ஆமாம்ப்பா... அவளை இந்த வீட்லே விதவை கோலத்துல பார்த்தேன்ப்பா!" உடம்பு குலுங்கியது.

எப்படி ஆறுதல் சொல்லுவது என்று புரியாமல் மகனை அணைத்துக்கொண்டார் தர்மலிங்கம்.

அதேநேரம் அறைக்குள் நுழைந்த சுரேஷ், பரத் பேசியது அத்தனையும் கேட்டுவிட்டான்.

"ப..ர..த்!"

திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

"வா சுரேஷ்!" அவசர அவசரமாய் தன்னை சரிப்படுத்திக் கொண்டான்.

"பரத்... நான் எல்லாமே கேட்டுக்கிட்டுதான் இருந்தேன். நீ தேடிக்கிட்டிருந்த பொண்ணு சித்ராதானா?"

"........!"



"சே... கடவுள் அந்த பொண்ணுக்கு மட்டும் ஏன் இத்தனை சோதனைகளை கொடுக்குது? எப்பேர்ப்பட்ட வாழ்க்கை... வசந்தாவோட குறுக்கு புத்தியால் கைநழுவிபோய்விட்டது. வாழா மலேயே வாழ்க்கையை இழந்துவிட்ட சித்ராவின் துயரத்தை எதுமூலமா சரிப்படுத்த முடியும்?" என்றான் சுரேஷ் வேதனையுடன்.

பரத் சில கணங்கள் கண்மூடி யோசித்து பின் கண்திறந்தான்.

"டாடி!"

"என்னப்பா?"

"நான் உங்ககிட்டே ஒன்னு கேட்பேன்... தருவீங்களா?"

தர்மலிங்கம் மகனையே உற்றுப் பார்த்தார். மெல்ல புன்னகைத்தபடி மகனின் தோளில் தட்டிக் கொடுத்தார்.

"நீ ஒன்னும் சொல்ல வேண்டாம் பரத்! உன் மனசில் என்ன இருக்குன்னு எனக்குத் தெரியும்!"

"டா...டி...!"

"யெஸ்! சித்ராவை நான் கல்யாணம் பண்ணிக்க சம்மதிப்பீங்களா டாடின்னு கேட்கதானே அத்தனை பீடிகை?"

"மைகாட்... எப்படி டாடி அவ்வளவு கரெக்ட்டா... நான் நினைச்சதை...?"

"உன்னைப் பத்தி என்னைத் தவிர வேற யாருக்குத் தெரியும் சொல்லு?"

"......"

"இதுக்கு என்னோட பதில் என்னவாயிருக்கும்னு நினைக்கிறே?"

"......"

"பயப்படாதே! என் பிள்ளையால் ஒரு இளம் விதவைக்கு மறுவாழ்வு கிடைக்குதுங்கறப்ப... எனக்கு எவ்வளவு பெருமையா இருக்குது தெரியுமா?"

"ட...டாடி!" என்றான் நம்பமுடியாமல்.

"ஆமாம்ப்பா! அந்தப் பொண்ணை என் மருமகளாக்கிக்கொள்ள எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லே!"

பரத்தின் முகம் சந்தோசத்தில் பூவாய் மலர்ந்தது.

சுரேஷிற்கு பேச வாய் வரவேயில்லை.

அந்த வீட்டில் யாருக்கும் தெரியாமல் காரியத்தை வெற்றிகரமாக செய்துகொண்டிருந்தனர்.

சித்ராவை பொறுத்தவரையில் லண்டனில் அவளுக்கு வேலை

கிடைத்திருக்கிறது. அதற்காக சுரேஷ் அத்தான் அவள் பாஸ்போர்ட்டுக்காக அலைந்துகொண்டிருக்கிறான்.

சுரேஷ் ஏற்கனவே பெரியப்பாவிடமும், பரத்திடமும் சித்ராவின் குணத்தை பற்றி சொல்லியிருந்ததால் பரத்தின் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் தேவதை சித்ராதான் என்பதை யாரிடமும் தெரியப்படுத்தவில்லை."

'தன்னை கவனித்துக்கொள்ள ஒரு பெண் உதவியாளர் வேண்டும். சித்ராவை என்னுடன் அழைத்துச் செல்கிறேன்' என்று தர்மலிங்கம் சொன்னபோது விருப்பமில்லாவிட்டாலும், மறுக்க மனம் வரவில்லை கமலாவிற்கு.

வசந்தாவை பொறுத்தவரை நிம்மதி!

'எங்கே தன் கணவனை வளைத்துப் போட்டுக்கொண்டு விடுவாளோ?' என்று பயந்துகொண்டிருந்தவள், கடல் தாண்டி, தேசம் தாண்டி போகப்போகிறாள் என்றதும் ஹாவென மூச்சுவிட்டாள்.

அனைவரும் லண்டன் புறப்படும் நாளும் வந்தது.

சித்ராவினுள் சொல்லமுடியாத... ஆனந்தமான உணர்வு இதயம் முழுக்க வியாபித்திருந்தது.

"என்ன பரத்... ஏதோ உனக்கு பிடிச்ச பொண்ணை கண்டுபிடிச்சி அவளோடதான் ஊருக்கு போவேன்னு சொல்லிக்கிட்டிருந்தே? என்னாச்சு உன் கல்யாணம்?" என்று கேட்டார் சுந்தரம்.

"கண்டிப்பா என் கல்யாண இன்விடேஷன் வரும் சித்தப்பா!" என்றான்.

சுரேஷ் விமான நிலையத்தில் அவர்கள் மூவரையும் வழியனுப்பி வைத்தான்.

சித்ராவிற்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையும். அவள் மனம் மாறும். பரத் அவள் மனதை மாற்றுவான். அந்த நம்பிக்கை சுரேஷினுள் நிறையவே இருந்தது.

விமானம் உயரப் பறந்தது.

நெடுநேரம் கையாட்டிக்கொண்டே இருந்தான்... அது வெளிச்சப் பொட்டாய் கண்ணைவிட்டு அகலும்வரை! அவன் நம்பிக்கை வீண்போகாது!

**(முடிந்தது)**

ராணி முத்து நவம்பர் 1, 2000.